

லக்ஸ் டாய்லட் சோப்பினால் கண்ணம்பா தினந்தோறும் அழகுபடுத்திக்கொள்ளும் முறை இதுவே
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின்மேல் தடவுகிறேன்..
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்.
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
LUX TOILET SOAP
சினிமா நக்ஷத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
கண்ணம்பாவிற்கு, அவருடைய அருமையான சருமத்தை குளுமையாகவும், அப்பழுக்கற்றதாகவும் செய்துகொள்ள ஒழுங்கான பாதுகாப்பு அவசியம் என்பது தெரியும். நீங்களும் உங்கள் சருமத்தை சீர்படுத்துவதில் சிரத்தையெடுத்துக் கொள்ளுகிறீர்களா? இந்த சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை 30 நாட்கள் கையாளுங்கள். இவ்வெண்மையான, நிறைந்த சோப்பின் குளிர்ந்த பரிமளத்தை நீங்கள் விரும்புவீர்கள். மேலும், இதன் தாராளமாயுண்டாகும் நுரை உங்கள் சருமத்தை சுத்தமாக்கி பளபளப்பை அளிக்கும். உங்கள் சருமத்திற்கு அதற்கு வேண்டிய பாதுகாப்பை அளியுங்கள். உண்மையான அழகையளிக்கும் லக்ஸ் டாய்லட் சோப்பைப் பயன்படுத்துங்கள்.
LTS. 152-22-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

GOP. 11.



ஆரோக்கிய மார்க்கத்துக்கான இயற்கை வழிகளைப் பின்பற்றுவதால் மிக சௌந்தர்யத்துடன் மினுமினுப்பான கவர்ச்சியுள்ள எழிலையும் விருத்தி செய்து கொள்ள இயலும்.

மதராஸ் கவர்ன்மெண்ட் பிராண்டு கருமீன் எண்ணெயை தவறாது உபயோகித்து வந்தால் மங்கள் சக்தி அதிகரிப்பதுடன் இயற்கையான தேகாரோக்யத்தையும் அளிக்கும்.

விடமின் "A" சத்து அபரிமிதமாக உள்ளதால், இதர பிராண்டுகளைவிட குறைந்த அளவில் உபயோகித்தால் போதுமானதால் இயற்கையாக சிறந்த தேகாரோக்கியத்தை அடைய மதராஸ் கவர்ன்மெண்ட் பிராண்டு கருமீன் எண்ணெயையே வைத்தியர்கள் பரிபூரணமாகச் சிபார்சு செய்கின்றனர்.

அதிக ஜீவசத்துள்ள தீவிர முறையில் கூடிய அடமின் கருமீன் எண்ணெய் உங்களது ஆரோக்கியத்திற்கு மிக்க இன்றியமையாதது. துளிக் கணக்கில் உட்கொண்டாலேயே மிருதுவான குடல்களிலுள்ள உபாதைகளையும் அறவே அகற்றும்.

தயாரிப்பவர்கள்:

கவர்ன்மெண்ட் ஆயில் பாக்டரி, கள்ளிக்கோட்டை

சென்னை மாகாணத்திற்கும் அடுத்துள்ள சமஸ்தானங்களுக்கும் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ். பாரி & கம்பெனி லிமிடெட்., மதராஸ்

ADS.

வான்கார்டு

பயர் & ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

தலைமை ஆபீஸ் :

308-9, லிங்கசெட்டி தெரு, மதராஸ் 1

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	: ரூ. 25 லக்ஷம்
செலுத்தப்பட்ட மூலதனம்	: ரூ. 15 லக்ஷம்

தென்னிந்தியாவிலேயே ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்களுக்குள் முதன்மையாயுள்ள இக் கம்பெனிக்கு இந்தியாவெங்கும் மோட்டார் இன்ஷ்யூரன்ஸுக்கு பாலிஸிகள் சேகரிக்க ஏஜெண்டுகள் தேவை.

ஏராளமான பாலிஸிகள் சேர்க்க உத்தரவாதம் அளிப்பவர்களுக்கு, வசீகரமான நிபந்தனைகள் உண்டு. குறைந்த பிரீமிய விகிதங்கள் :

மற்ற விவரங்களுக்கு எழுதுக :—

H. D. ராஜா
ஜெனரல் மானேஜர்

"கல்கி"யின் புத்தகங்கள்

★

பார்த்திபன் கனவு	ரூ. 6 8 0
சங்கீத யோகம்	ரூ. 5 0 0
ஏட்டிக்குப் போட்டி	ரூ. 4 8 0
பாரதி பிறந்தார்	ரூ. 4 8 0
வீணை பவானி	ரூ. 4 8 0
பாங்கர் விநாயகராவ்	(அச்சில்)
சிவகாமியின் சபதம்	(அச்சில்)

★

கிடைக்குமிடம் :

தமிழ்ப் பண்ணை

தியாகராயநகர் :: சென்னை 17

" மியாவ் - மியாவ் "! " மியாவ் - மியாவ் "!

"தக்கிடி தையா
லக்கிடி பாபு
தாவி விழுந்தான்
மரத்திலே......."

★

" டகட - டிகிடி
டகட - டோ
டகட - டகட
டட்ட - டோ "

ஒரே ரகளை! ○ கலாட்டா! ○ கொம்மாளம்!

- சிங்காரச் சிறு கதைகள்!
- சின்னச் சின்ன கட்டுரைகள்!
- உல்லாச வேடிக்கைகள்!
- ஒப்பற்ற அதிசயங்கள்!

எல்லாம் நிறைந்தது

"மியாவ்-மியாவ்"

குழந்தைகள் வாரப் பத்திரிகை

இரு வர்ணங்களிலே! இணையற்ற ரீதியிலே! ஏராள படங்களோடு!

★

" கல்கி " சொல்லுகிறார்!

"......' மியாவ் - மியாவ் ' படிப்பதற்காக நானும் ஒரு குழந்தை ஆகவேண்டும் என்ற ஆசை உண்டாகிறது........."

—ரா. கி. (14-6-47)

★

தனிப்பிரதி
0—1—0

• ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. உதிரியாக வரும் ஸ்டாம்புகள் கவனிக்கப் படமாட்டாது. மாதிரி இல்லை

• வருஷ சந்தா ரூ. மூன்று

"மியாவ்-மியாவ்" நியூஸ் பேப்பர் ஆபீஸ்

" கஸ்தூரி ரங்கா " கட்டடம் — சென்னை-5

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | 1947 ஜூன் 29 | சர்வஜித்
இதழ் 48 | | ஆனி 15

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

"கிழக்கு கிழக்குதான்; மேற்கு மேற்குதான். கிழக்கும் மேற்கும் ஒரு நாளும் ஒன்றாக முடியாது. ஆனால் இரண்டு யோக்யமான மனிதர்கள் நேருக்கு நேர் சந்தித்தார்களானால், அப்போது கிழக்குமில்லை, மேற்குமில்லை! இரண்டு நிலையும் ஒன்றாகப் போய்விடும்!" என்று ஆங்கிலக் கவி ஒருவர் அற்புதமாய்ச் சொல்லியிருக்கிறார்.

அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தால் என்ன? காங்கிரஸ் கட்சியிலிருந்தால் என்ன? எந்தக் கட்சியில் இருந்தால்தான் என்ன? மனிதன் மட்டும் யோக்யமானவனா யிருந்தால், கட்சி வித்தியாசம் எல்லாம் பறந்தே போய் விடுகிறது.

தற்சமயம் சென்னை மேயர் பதவியை அலங்கரிக்கும் ஸ்ரீ சுந்தர ராவ் நாயுடு அத்தகைய யோக்யமான மனிதர்களில் ஒருவர். எனவே, நீண்டகாலத்தும் பிடிவாத ஜஸ்டிஸ் கட்சிக்காரரா யிருந்தாலும், பொது ஜனங்களின் அபிமானத்துக்குப் பாத்திரராகிச் சென்னை நகரின் 'முதல் குடிமகன்' ஸ்தானத்தை அடைந்திருக்கிறார். அரசியல் வாழ்க்கையைப் பொது மக்களுக்குத் தொண்டு செய்யும் சாதனமாக மேற்கொண்டுள்ளவர்களில் ஸ்ரீ சுந்தரராவ் நாயுடு காரு ஒருவர். முக்கியமாக, சென்னை நகர சபையில் நீடித்த காலமாக ஸ்தானம் வகித்துப் பொதுஜன சேவை புரிந்து வந்திருக்கிறார். இதன் பயனாகக் கட்சி வித்தியாசத்தைக் கடந்து மேலே சென்று மக்களின் அன்பைக் கவர்ந்திருக்கிறார்.



முதலாவது தேசிய சர்க்காரின் மந்திரிகளான டாக்டர் ராஜேந்திர பிரஸாதுக்கும் ராஜாஜிக்கும் திரளான பொது மக்களின் முன்னிலையில் சிறப்பாக வரவேற்பு அளிக்கும் பெருமை ஸ்ரீ சுந்தரராவ் நாயுடுவுக்குக் கிடைத்தது.

சென்னை மக்களுக்கும் பொதுவாக இம்மாகாணத்துக்குமே ஓர் அரிய பெரிய உதவியைச் சென்ற வாரத்தில் மேயர் சுந்தரராவ் நாயுடு அவர்கள் செய்து கொடுத்து நம் எல்லாருடைய நன்றிக்கும் பாத்திரரானார்.

பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முடிவு செய்யப் பலரும் பலவிதங்களில் முயன்றார்கள். ஆனால் கடைசி கடைசியாக ஸ்ரீ சுந்தரராவ் நாயுடு செய்த முயற்சி மேற்படி நல் முடிவுக்குப் பெரிதும் துணை புரிந்தது. நகரின் எல்லைப்புறத்தில் தொழிலாளரைக் கூட்டி "வேலைக்குத் திரும்புங்கள்!" என்று அவர் அன்புடன் செய்த போதனை மருந்தாகவே பலன் அளித்தது. தொழிலாளர் வேலைக்குத் திரும்பிச் சென்னை நகருக்கு நேர்ந்திருந்த ஒரு பெரும் சங்கடத்தை நிவர்த்தி செய்தார்கள்.

எங்கே? மேயர் சுந்தரராவ் நாயுடுவுக்கு மூன்று தடவை "ஜே!" சொல்லுங்கள்!

ஹிந்து-முஸ்லிம் பிரசினை

மகாத்மா காந்திஜி எழுதியது

நாட்டின் முக்கிய அரசியல் பிரசினையான ஹிந்து-முஸ்லிம் பிரசினைபற்றி மிகமிக விரிவான முறையில் காந்திஜி இந்த நூலில் ஆராய்ந்திருக்கிறார். காந்தியத்தில் ஊறித் திளைத்தவரான ஸ்ரீ கே. அருணாசலம் அவர்கள் இந்த நூலைச் சுவை குன்றாது மொழி பெயர்த்து இருக்கிறார். எல்லோரும் படிக்க வேண்டும் என்பதை உத்தேசித்து மலிவுப் பதிப்பு வெளியிட்டிருக்கிறோம்.

சுமார் 550 பக்கங்கள்
காந்திஜியின் படமும் சேர்ந்து

விலை ரூபாய் ஆறு. முன் பணம் அனுப்புவோருக்குத் தபால் செலவு இனாம்

கிடைக்குமிடம்:

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்
காரைக்குடி

கலியாண சீஸனுக்காக

உயர்ந்த
நேர்த்தியான
சரக்குகளையே
நாங்கள்
விற்பனை
செய்கிறோம்

★

உங்களது மனதிற்கேற்ற நவீன பட்டு ஜவுளி தினுசுகள் ஏராளமாக வந்துள்ளன

★

இன்றே ஒரு முறை
விஜயம் செய்து
உங்களுக்குப்
பிடித்தமானதை
தேர்ந்தெடுத்துக்
கொள்ளுங்கள்

ஆரணி ஸில்க் ஹவுஸ்

4, சன்னதித் தெரு, மயிலாப்பூர்
சென்னை :: போன்: 86349

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 47

என்ன சேதி?

மறக்க முடியாது!

கொட்டிப்போன பாலைப் பற்றிக் கவலைப் படுவதிலே பிரயோஜனம் இல்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயமேயாகும்.

ஆனால், முக்கியமான ஒரு விஷயத்தைக் கவனியாததாலே ஒரு தேசத்துக்கும் ஒரு பெரிய சமுதாயத்துக்கும் எவ்வளவு கைத்தான நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது என்பதை நினைக்கும்போது அந்தத் தவறு நம் மனதை விட்டு எப்படி அகலும்?

ஆப்கன் ராஜ வம்சத்தைச் சேர்ந்த சர்தார் ஷாவலி கான் என்பவர் பிரஞ்சு நாட்டில் ஆப்கானிஸ்தானத்தின் ஸ்தானாதிபதியாக இருப்பவர். அவர் தம் சொந்த நாட்டுக்குப் போகும் வழியில் சென்ற வாரம் பம்பாயில் இறங்கினார். தம்மைப் பார்த்த பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் இந்திய அரசியல் நிலைமையைப் பற்றித் தமது கருத்தைக் கூறினார். அதிலிருந்து இந்தியாவின் க்ஷேமத்தில் அவர் மிகுந்த அக்கறை உள்ளவர் என்றும் இந்தியாவின் அரசியல் போக்கை நன்றாகக் கவனித்து வந்திருக்கிறார் என்றும் தெரிய வந்தது.

இந்தியாவில் நடக்கும் ஹிந்து முஸ்லிம் கலவரங்களைப் பற்றி சர்தார் மிக்க வருத்தம் தெரிவித்தார். மவுண்ட்பேட்டன் திட்டத்தினால் எல்லாம் சரியாய்ப் போய் விடலாம் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார். இதற்கெல்லாம் மேலாக, ஓர் அபூர்வமான பிரசித்தமான உண்மையையும் எடுத்துச் சொன்னார். அந்த உண்மை இதுதான்:

“வகுப்புப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் வகுத்த திட்டத்தை முன்பே இந்தியா ஒப்புக் கொண்டிருக்குமானால், இப்போது ஏற்பட்டிருக்கும் மனக் கசப்பு ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம். அவரது தீர்க்க திருஷ்டியையும் அரசியல் மேதையையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்.”

இப்படியாக, உலகத்தின் மற்றொரு பகுதியிலே அலைகடலுக்கு அப்பாலுள்ள பிரான்ஸ் தேசத்திலே, ஸ்தானிகராக இருந்துவரும் ஒரு ஆப்கானியர் நமது தமிழ் நாட்டின் ஒப்பற்ற தலைவரின் பெருமையை அறிந்து பாராட்டும்போது நமக்குப் பெருமிதம் உண்டாகத்தான் செய்கிறது. “ராஜாஜி சொன்னது சரியாய்ப் போச்சு” என்ற பல்லவியை நாம் மறந்துவிட விரும்பினாலும், அது சாத்தியப்படவில்லை!

நம்ப முடியவில்லை!

நம்புவதற்கு முடியவில்லை; ஆனாலும் உண்மைதான்! (1) சேத் ராமகிருஷ்ண டால்மியா வர்த்தக உலகத்திலிருந்து விலகி, அகில உலகத்துக்காகப் பாடுபடப் போகிறாராம்! அத்துடன் பாகிஸ்தானில் பல பல பத்திரிகைகள் நடத்தி (லாபத்தையே கருதாமல்) இந்தியாவின் நன்மைக்காக உழைக்கப் போகிறாராம்! (2) அமெரிக்காவின் அயல்நாட்டு மந்திரி மார்ஷல் சொன்ன திட்டத்தை ருஷியா ஒப்புக்கொள்ளப் போகிறதாம்! (3) காங்கிரஸின் பரம விரோதியா யிருந்த டாக்டர் அம்பேத்கர் ஒரு மாகாண கவர்னராக நியமிக்கப்படக் கூடுமாம்! (4) சென்னையிலே சில குழாய்களிலே கொஞ்சம் கொஞ்சம் தண்ணீரும் சில சமயம் வருகிறதாம்!

ஆனால், இவை எல்லாவற்றையும் காட்டிலும் நாம் நம்ப முடியாமலிருக்கும் விஷயம்,

இந்த பிரிட்டிஷ் சாதியின் மனப்போக்கில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்தான்! சென்ற இரு நூறு வருஷ காலமாகப் பிரிட்டிஷார் உலகமெங்கும் கையாண்டு வந்த சுரண்டல் கொள்கையையும், நாடு கவரும் தர்மத்தையும் அறிந்தவர்களுக்கு, இப்போது பிரிட்டிஷார் கடைப்பிடிக்கும் சாம்ராஜ்ய துறவறக் கொள்கையை நம்புவது கஷ்டமாய்த்தானிருக்கும். எனினும், நம் கண் முன்னால் பிரத்யட்சமாக நடந்து கொண்டிருப்பதை எப்படி நம்பாமல் இருப்பது?


பாரத தேசத்துக்குச் சுதந்திரம் அளித்தே விடுவது என்று முடிவு செய்து, குறிப்பிட்ட தேதிக்கு முன்னாலேயே மூட்டை கட்டிக் கொண்டு புறப்பட்டுவிட பிரிட்டிஷார் அதி வேகமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அடுத்தாற்போல் பர்மாவுக்கும் பூரண சுதந்திர மளிப்பதாக ஒப்புக்கொண்டு விட்டார்கள். கடைசியாக இப்போது நமக்குப் பக்கத்தில் இருக்கும் இலங்கைத் தீவுக்குப் பூரண குடியேற்ற நாட்டந்தஸ்து கொடுக்கப் போவதாகச் சென்ற வாரம் அறிவித்திருக்கிறார்கள்.

இலங்கை ரொம்பவும் அதிர்ஷ்டக்கார தேசம் என்றுதான் சொல்ல வேண்டும். இதுவரையில் தேசத்தின் சுதந்திரத்துக்காக இலங்கை மக்கள் ஒரு துப்பாக்கியையோ தோட்டாவையோ தொட்டதில்லை; ஒரு தண்டவாளத்தைக் கூடப் பெயர்த்ததில்லை; சத்தியாக்கிரஹத்தைக் கடைப் பிடித்துச் சிறை வாசம், தடியடி முதலியவற்றுக்கும் உள்ளானதில்லை; ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்ததுகூடக் கிடையாது! "இந்தியா போன்ற பிரம்மாண்டமான தேசமே பிரிட்டனிடமிருந்து சுதந்திரமடைய முடியவில்லையே; நம்மால் என்ன செய்ய முடியும்?" என்று அவர்கள் அதைரியப்பட்டுக் கொண்டு பேசாமல் இருந்தார்கள். ஆனால் பிரிட்டிஷ் தொழிற் கட்சி சர்க்காரோ, "அதெல்லாம் முடியாது. இதோ, பிடி சுதந்திரம்!" என்று வலியக் கொண்டுபோய்ச் சுதந்திரத்தைக் கொடுக்கிறார்கள் என்றால், அது எவ்வளவு பாராட்டத் தக்க விஷயம்?

இப்படி விடாப்பிடியாக, "இந்தா, விபீஷணா! இலங்காபுரி இராஜ்யம்!" என்று கொடுப்பதோடு பிரிட்டிஷார் நிறுத்திக் கொள்ள வேண்டுமே என்று மட்டும் நாம் கவலைப்பட வேண்டியதாகவே இருக்கிறது. மேலும் மேற்படி சுதந்திர தானக் கொள்கையை நீட்டி விட்டு, "இதோ, திருவாங்கூருக்குச் சுதந்திரம்! புதுக்கோட்டைக்குச் சுதந்திரம்! பொப்பிலிக்குச் சுதந்திரம்! பித்தாபுரத்துக்குச் சுதந்திரம்! சீப்பாக்கத்துக்கும் சுதந்திரம்!" என்பதாகப் போய்க் கொண்டேயிருந்தால் நம்மால் தாங்க முடியுமா?

* * *


திருஞானத் திருமணம்




* * *

தை பிறந்தால் பலருக்கு வழி பிறக்கிறது! ஒவ்வொரு முகூர்த்த நாளிலும் எத்தனையோ திருமணங்கள் நடக்கின்றன. ஆனாலும் மன்னார்குடியில் சென்ற ஜூன் மாதம் 16-ல் நடந்த ஒரு திருமணம் ஒரு தனி மணம் கமழ்ந்து விளங்கியது. அது தேசிய சுதந்திர மணந்தான். கலியாணப் பந்தலா, அல்லது தேசிய மகாநாட்டுப் பந்தலா என்று கண்டு பிடிக்க முடியாதபடி பந்தல் அலங்காரம். மணமேடைக்கு எதிரே ராஜாஜியின் பெரிய திருவுருவப் படம்; தமிழ்ப் பண்ணை அண்ணாமலையின் அக்கிராசனம்; தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார், அண்ணாச்சி வேதாரத்தினம், ஜில்லா காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ டி. கே. சீனிவாசய்யர் முதலியவர்களின் பிரசன்னம்; ஆயிரம் பொது ஜனங்களின் கூட்டம்; சாங்கோபாங்கமான சொற்பொழிவுகள்; வாழ்த்துரைகள்; நாமக்கல் கவிஞரின் வாழ்த்துப் பாடல்கள்— இவ்வளவும் 1942 ஆகஸ்டு இயக்கத்தில் ஈடுபட்டு மூன்று வருஷம் கடுஞ் சிறையில் தவம்புரிந்த தியாகி திருஞானத்தின் கலியாண வைபவத்தை முன்னிட்டுத்தான். — தியாகவீரர் ஸ்ரீ திருஞானமும் அவரைக் கைப்பிடித்த பொன்மணியும் சகல நலங்களும் பெற்று நீடூழி வாழுமாறு பிரார்த்திக்கிறோம்.

பிரமாத அவசரம்!


SHASTRY
லார்ட் மௌண்ட் பேட்டன் தாம் சொன்னதை
விட அதிக வேகமாக இந்திய அரசியல்
பிரச்னையைத் தீர்த்து வருகிறார்!
மௌண்ட் பேட்டன் திட்டம்
காங்கிரஸ்
லீக்

-சாஸ்திரி


போருக்குத் தயார்!
வாருங்கள், பார்க்கலாம்!
பிரசார
பீரங்கி
அற்புத மசி
(எதையும் எழுதலாம்)
திருவாங்கூர் சமஸ்தானம்
உள்ளே வரக்கூடாது

ஐரோப்பாவின் முன்னேற்றம்



இது என்ன கோலம்!

அரசியல் அபிலாஷைகள் சத்தியம், சாத்விகம், நீதி இவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அரசியல் அபிலாஷைகள் என்பது அரசியல் சூதாட்டமாகி விடக் கூடாது.

அதாவது, எப்படியாயினும் பிறரை ஏமாற்றியும் வஞ்சித்தும் நியாயமற்ற கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுவது என்ற விபரீதத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது.

அதற்கு இடம் கொடுப்போர், தங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முடிவைத்தான் அடைய முடியும்.

படுதோல்வி என்பதுதான் அந்த முடிவு ஆகும்.

அத்தகையோர் ஆரம்பத்தில் எத்தனை வெற்றிகள் பெற்றாலும், இறுதியில் அந்த வெற்றிகள் எல்லாம் வியர்த்தமாவது நிச்சயம்தான்.

சூதாட்டத்தில் வெற்றிமேல் வெற்றி பெறுவோர், இறுதியில் எல்லாவற்றையும் இழந்து விடுவது கண்கூடாகக் காணும் விஷயம் அல்லவா?

. . .

முஸ்லிம் லீக்கர்கள் பாக்கிஸ்தான் வேண்டும் என்றார்கள்.

இப்போது அவர்களுக்குப் பாக்கிஸ்தான் கிடைத்து விட்டது.

அதற்காக அவர்கள் நடத்திய படுகொலைப் பாதகங்கள் இனியாவது நின்று தீர வேண்டும்.

இனியாவது தேசத்தில் சாந்தியும் சமாதானமும் நிலவும்படி பார்த்துக் கொள்ள வேண்டிய கடமையில் அவர்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

இல்லாவிடில் பாக்கிஸ்தானத்தால் முஸ்லிம்களுக்கு அணுவளவும் நன்மை ஏற்பட முடியாது.

ஆனால், தேசத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதும், தேசமக்கள் சுபிட்சமாக வாழவேண்டும் என்பதும் லீக்கர்களின் நோக்கம் என்பதற்கான அறிகுறிகள் எதையும் காணோம்.

சண்டித்தனங்களும் சதி வேலைகளும் சிறிது காலம் வெற்றி பெறலாம். ஆனால், இறுதியில் அவை தோல்வி யுறுவது நிச்சயம்.

புதுடில்லியிலுள்ள டெலிபோன் போக்குவரத்தை யெல்லாம் முஸ்லிம் லீக்கர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாயும், காங்கிரஸ் மந்திரிகளும் தலைவர்களும் டெலிபோன் மூலம் பேசும் விஷயங்களை லீக் உளவாளிகள் அறிந்து கொண்டு வருவதாயும் ஆதார பூர்வமான புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

மற்றும் ஜனாப் ஜின்னா முதலிய லீக் தலைவர்கள் வெளியூர்களுக்கு டெலிபோனின் உடனே பேச வசதி அளிக்கப்படுகிறது என்றும், ஆனால் காங்கிரஸ் தலைவர்களோ பல மணி நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது என்றும் அச் செய்திகளிலிருந்து தெரிகிறது.

லாகூர் நகரம் பற்றி யெரிந்தபோது, இந்திய தேசிய சர்க்கார் இராணுவ மந்திரி சர்தார் பலதேவ் சிங் ஏதோ அவசரமாக லாகூருக்கு டெலிபோனில் பேச விரும்பியதாயும், ஆனால் அவருக்கு உடனே பேச வசதி யளிக்கப் படவில்லை என்றும், அவர் வெகு நேரம் காத்திருக்க நேர்ந்ததென்றும் கூறப்படுகிறது.

இதைக் காட்டிலும் அக்கிரமமும் அநீதியும் வேறெதுவும் இருக்க முடியாது.

காங்கிரஸ் தலைவர்கள் திரை மறைவில் சதி எதுவும் செய்யவில்லை. அவர்கள் சொல்லுவதும் செய்வதும் தேச க்ஷேமத்தை உத்தேசித்துத்தான். எனவே, அவர்களின் முயற்சிகளுக்கு மேற்கூறிய விதம் சில துரோகிகள் முட்டுக்கட்டை போடும் கோலத்தை என்னவென்று கூறுவது!

தேசத்தில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதற்காகவே, காங்கிரஸ் தலைவர்கள் தேசத்தைத் துண்

டாக்கும் பாக்கிஸ்தானுக்கு இசைந்தார்கள்.

எனவே, போராட்டம் எதுவும் இன்றி வெகு சுலபமாகத் தாங்கள் பாக்கிஸ்தான் பெறுவதற்கு உதவியாக இருந்த காங்கிரஸ் தலைவர்களுக்கு, லீக்கர்கள் நன்றி செலுத்த வேண்டியதே நியாயமாகும்.

ஆனால், ஐக்கிய இந்தியாவுக்கு எதிராகச் சமஸ்தானங்களைத் தூண்டி வரும் லீக்கர்களுக்கு அத்தகைய நல்லெண்ணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒருவேளை, வெகு சுலபமாக பாக்கிஸ்தான் பெற்ற அவர்கள், அகில இந்தியாவையும் வெகு சுலபமாகவே தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து விடலாம் என்று நினைக்கக் கூடும்.

சூதாடுவதில் வெற்றி பெறுவோர் மேலும் மேலும் தங்களுக்குத்தான் வெற்றி கிடைக்கும் என்று கற்பனை செய்து கொள்ளுவதுபோல், இந்தியா முழுதும் மொகலாய சாம்ராஜ்யத்தை அமைக்கலாம் என்றும் லீக்கர்கள் கற்பனை செய்துகொண்டு வரலாம்.

ஆனால், அந்தக் காலம் மலையேறி எவ்வளவோ காலமாகிறது என்பதை மாத்திரம் அவர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

முன்னர் மொகலாய சாம்ராஜ்யம் இருந்த காலத்தில் இருந்த நிலைமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் சம்பந்தமே யில்லை.

சர்வ வல்லமை பொருந்திய வல்லரசுகள் கூட இன்று பிற தேசங்களை நேரடியாக ஆக்கிரமித்துக் கொள்ளத் துணியவில்லை.

சகல ஆயுதங்களுடனும் கூடிய டச்சு சாம்ராஜ்யத்தை எதிர்த்து, சென்ற இரண்டு வருஷ காலமாக இந்தோனேஷ்யா அகோர யுத்தம் புரிந்து வருகிறது.

எனவே, முப்பது கோடி ஜனங்களுக்கு இடைவிடாது தொல்லை விளைவித்து வருவதோ, அல்லது அவர்களைத் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர முயற்சிப்பதோ ஆபத்தாகும் என்பதை லீக்கர்கள் காலதாமதமின்றி உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஜனங்களிடையே சுதந்திர உணர்ச்சி பிரவாகம் எடுத்து ஓடும் இக்காலத்தில், ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆக்கிரமிப்பதோ, முட்டாள்தனமாக சாம்ராஜ்யக் கனவு காண்பதோ உருப்படக் கூடிய விஷயமன்று.

அவ்விதம் செய்வதை உலக நாடுகளும் பார்த்துக் கொண்டிரா.

ஆகையால், லீக்கர்கள் தங்களுடைய விபரீதப் போக்கை விட்டு விட்டு, இந்தியாவின் மற்றப் பாகங்களுடன் ஒத்துழைக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

பாக்கிஸ்தானத்திலும் இந்தியாவின் மற்ற இடங்களிலும் வசிக்கும் முஸ்லிம்களின் எதிர்கால க்ஷேமத்தை உத்தேசித்தாவது அவர்கள் போர்க் கோலத்தை விட்டுவிட்டு, சமாதான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

• • •

நிற்க, போர்க் கோலம் என்பது லீக்கர்களின் ஏகபோக உரிமை இல்லை என்றும், அந்த உரிமையில் தனக்கும் பங்கு உண்டு என்றும் தெற்குக் கோடியிலுள்ள திருவாங்கூரிலிருந்து திடீரென்று ஒரு கூக்குரல் கிளம்பியிருக்கிறது.

அவலட்சணமே உருவான ஒருவனுடைய திருமண வைபவத்தின் போது அபஸ்வர பாகவதரின் கச்சேரி வெகு விமரிசையாக நடந்ததாம்!

அப்போது பாகவதரின் கானரஸத்தை மணமகனும், மணமகனின் ரூப சௌந்தர்யத்தைப் பாகவதரும் வெகுவாகப் புகழ்ந்து கொண்டார்களாம்!

"இந்திய சமஸ்தானங்களின் ஏதேச்சை உரிமையை அங்கீகரித்ததற்காக உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன்!" என்று ஸர் சி. பி. ராமசாமி ஐயர், ஜனாப் ஜின்னாவைப் புகழ்ந்திருக்கிறார்.

"பாக்கிஸ்தான் ராஜ்யத்துக்குத் திருவாங்கூர் விருந்து ஸ்தானிகர் வருவதை நான் அங்கீகரிக்கிறேன்!" என்று ஜனாப் ஜின்னா ஸர் சி. பி. யின் முதுகில் தட்டிக் கொடுத்திருக்கிறார்.

ஆனால், இன்னும் பாக்கிஸ்தான் ராஜ்யம் ஏற்படவில்லை.

திருவாங்கூரும் இன்னும் ஸர். சி. பி. கோரும் 'சுதந்திர'த்தை— அதாவது ஏதேச்சாதிகாரத்தைப் பெற்றுவிடவில்லை.

அப்படியிருக்க, அவ்விரு ராஜ்யங்களுக்கும் இருக்கவேண்டிய உறவுகள் பற்றித் திருவாங்கூர் திவானுக்கும் காயிதே ஆஜமுக்கும் பரஸ்பரம்

பேச்சு வார்த்தைகளும் கடிதப் போக்குவரத்தும் நடைபெற்று ஒரு முடிவுக்கும் வந்து விட்டதுதான் வேடிக்கையிலும் வேடிக்கையாக இருக்கிறது'

• • •

ஜிறைப் ஜின்னு சில வருஷங்களுக்கு முன் சொன்னுர் :

"இந்தியர்களான நாம் சுதந்திரர்களாக விளங்க வேண்டுமாயின், நம்மிடையே பூரண ஒற்றுமை நிலவ வேண்டும். ஆனல், நாம் அற்ப விஷயங்களை யொட்டி நமக்குள்ளேயே சச்சரவிட்டுக் கொள்ளுவோமாயின், நாம் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்கு அடிமைகளாக இருந்து வரவேண்டியதுதான்."

ஒரு காலத்தில் இவ்விதம் கூறிய ஜைறப் ஜின்னுதான் இன்று இந்தியாவின் ஐக்கியத்தையே குலைக்கும் கர்த்தாவாக விளங்குகிறுர்.

1910-ம் வருஷம் அலகாபாத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தனித் தொகுதி முறையையும் கடுமையாகக் கண்டிக்கும் தீர்மானத்தைப் பிரேரேபித்த ஜைறப் ஜின்னுதான் இன்று வகுப்புவாத விஷத்தைப் புகுத்தி இந்தியாவையே உருக் குலைத்திருக்கிறுர்.

ஸர் ஸி. பி. ராமசாமி ஐயரோவென்றல், "பாக்கிஸ்தானத்தை எதிர்த்துப் பலாத்காரப் போராட்டத்திலும் இறங்கத் தயார்!" என்று கூறி, இன்னும் பல மாதங்கள் கூட ஆகவில்லை.

அப்படி யிருக்க, பாக்கிஸ்தானம் ஏற்படுவதற்கு முன்பே அதற்கு முதன் நாம் பூலம் கொடுக்க ஸர் ஸி. பி. முன் வந்திருப்பது கற்பனைக்கும் எட்டாத காலமாறுதலின் விசித்திரம் அல்லவா?

• • •

திருவாங்கூர் திவானின் போர்க்கோலத்தைக் குறித்து, மகாத்மா காந்தி முதல் பல பிரபல தலைவர்களும் அபிப்பிராயம் கூறிவிட்டார்கள்.

இந்தியாவிலுள்ள சட்ட நிபுணர்களும் அபிப்பிராயம் கூறிவிட்டார்கள்.

பல பெரிய சமஸ்தானங்களும் சிறிய சமஸ்தானங்களும் அரசியல் நிர்ணய மகா சபையில் சேர்ந்திருப்பதன் மூலம் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்து, சமஸ்தானங்களின் க்ஷேம மார்க்கத்துக்கும் வழி காட்டி விட்டன.

ஆனல், திருவாங்கூர் திவானே எதற்கும் மசியவில்லை.

திருவாங்கூரைக் காட்டிலும் பெரியதும், கீர்த்தி வாய்ந்ததுமான மைசூர் சமஸ்தானம் காட்டியுள்ள வழியையும் அது பின்பற்றத் தயாராக இல்லை.

இந்தியாவிலுள்ள அரசியல் தலைவர்களையோ, சட்ட நிபுணர்களையோ தாம் லட்சியம் செய்யவில்லை என்றும், ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்தான் தம்முடைய குரு என்றும், எனவே அவரது உபதேசத்தின்படியே தாம் நடக்கப் போவதாகவும் திருவாங்கூர் திவான் கூறுகிறுர்.

நல்ல வேளை! இன்னும் ஒருபடி தாண்டிச் சென்று, வின்ஸ்டன் சர்ச்சில்தான் தம்முடைய குரு என்று அவர் சொல்லாமல் விட்டதே பெரிய காரியம்தான்!

• • •

ஸர் ஸி. பி. ராமசாமி ஐயர் சிறந்த அறிஞர்; மகா தைரியசாலி. ஒரு சமயம் தேசத்துக்கும் தொண்டு செய்தவர்.

அப்படிப்பட்ட ஒருவர், அதிலும் தேச கைங்கரியங்களிலும் தியாகத்திலும் முன்னணியில் நிற்கும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர், தேசமே வாழ்வதா அல்லது வீழ்வதா என்ற மகத்தான சோதனைக்கு உள்ளாகி யிருக்கும் இச் சமயத்திலே, தேசத்துக்கு விரோதமாகப் போர்க்கோலம் பூண்டு சரமாரியாக அலங்கோல அறிக்கைகள் விடுத்து வருவது மிகவும் வருந்தத் தக்கதாகும்; வெட்கப் படவேண்டிய விஷயமும் ஆகும்.

எனவே, நாம் அவருக்குக் கூறும் யோசனை என்னவென்றல், வெளியூரார் ஒருவர் வந்து திருவாங்கூரின் நற்பெயரைப் பாழ்படுத்தி விட்டார் என்ற உலக அபவாதத்துக்கு ஆளாக வேண்டாம் என்பதுதான்.

இந்தச் சமயத்தில் அவர் திருவாங்கூரை விட்டுவிட்டு, தம்முடைய யதாஸ்தானத்துக்கு, அதாவது சென்னை மயிலாப்பூருக்குத் திரும்பி வந்து விடுவதே சிறந்ததாகும்.

அவர் அவ்விதம் செய்தால் அவருக்கும் க்ஷேமம்; இந்தியாவுக்கும் க்ஷேமம்; திருவாங்கூருக்கும் க்ஷேமம்!

பாராட்டுகிறோம்!

பக்கிங்காம் கர்நாடிக் ஆலைத் தொழிலாளிகளை வாழ்த்திப் பாராட்டுகிறோம். நியாயமற்ற அர்த்தமற்ற வீண் பிடிவாத வேலை நிறுத்தம் நூறு நாள் நடத்திய பிறகு அவர்கள் வேலைக்குத் திரும்பிச் சென்றார்கள். திரும்பிச் சென்று தங்களையும் தங்கள் பெண்டு பிள்ளைகளையும் காத்துக் கொண்டார்கள். சென்னை மாகாணத்தின் மானத்தையும் பாதுகாத்து உதவினார்கள்! வாழ்க தொழிலாளர்கள்!

மேற்கண்டவாறு பக்கிங்காம்—கர்நாடிக் தொழிலாளரைப் பாராட்டும் நாம், அவர்களுக்கு வழிகாட்டி நடத்திய தலைவர்களை அவ்விதம் பாராட்ட முடியாமலிருப்பது பற்றிப் பெரிதும் வருந்துகிறோம்.

தொழிலாளர்களுக்கு நேர் வழி காட்ட வேண்டிய கடமை பூண்ட தலைவர்கள், அவர்களைத் தப்பு வழியில் நடத்தினார்கள். அவசியமற்ற வேலை நிறுத்தம் செய்யத் தூண்டினார்கள். தொழிலாளரிடம் மிக்க அநுதாபம் கொண்ட சர்க்காரை இல்லாத தொல்லைகளுக்கெல்லாம் உட்படுத்தி உபத்திரவப்படுத்தினார்கள். வீண் பிடிவாதமும் வீம்பும் கொண்டு வேலை நிறுத்தத்தை நூறு நாள் நீடிக்கச் செய்தார்கள். பதினாயிரம் தொழிலாளர் குடும்பங்களுக்கு லட்சக் கணக்கான ரூபாய் நஷ்டத்தை உண்டு பண்ணிப் பட்டினி கிடக்கும் நிலைமைக்குக் கொண்டு விட்டார்கள்!

உதாரண ரூபமாகச் சொன்னால், தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர் தலைவர்கள் சில மாதத்துக்கு முன்பு செய்த பெருந் தவறை இவர்களும் செய்தார்கள்.

எத்தனையோ காலமாக அரும்பாடு பட்டுத் தேடிச் சேகரித்த பொருளை ஒரே நாளில் சூதாட்டத்தில் தொலைப்பது போல், தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளரின் தலைவர்கள் சமயமில்லாச் சமயத்தில் வேலை நிறுத்தம் செய்து, சங்கத்தைக் குட்டிச் சுவராக்கினார்கள் அல்லவா?

அதுபோலத்தான் இங்கேயும் நடந்தது.

ரயில்வேத் தொழிலாளரின் கட்சியை நாம் வெகு தீவிரமாகவும் பரிபூரணமாகவும் ஆதரித்து வந்தோம். ஆனால் ஒரு விஷயத்தில் எச்சரிக்கை செய்தோம். "ஜவாஹர்லால்ஜீ முதலிய மாபெருந் தலைவர்களைக் கொண்ட தேசிய மத்திய சர்க்கார் ஏற்படும் பட்சத்தில், அப்போது நிலைமை அடியோடு வேறுபட்டு விடுகிறது; அந்த நிலைமையில் வேலை நிறுத்தம் என்ற பேச்சே உதவாது!" என்று சொன்னோம்.

இதைக் கேட்காமல் ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். பலன் என்ன? வேலை நிறுத்தம் உடைந்தது; சங்கம் குட்டிச் சுவராயிற்று; ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளானார்கள்; பொது மக்களின் அநுதாபத்தை அடியோடு இழந்தார்கள். கடைசியாக, தென் இந்திய ரயில்வேத் தொழிலாளர் சங்கம் அகில இந்திய ரயில்வேத் தொழிலாளர் சங்கத்திலிருந்து தள்ளப்பட்டது. (சென்ற வாரத்திலேதான் அகில இந்திய சங்கத்தில் புனர்ப் பிரவேசம் கிடைத்திருக்கிறது.)

இதையெல்லாம் கண் முன்னால் பார்த்திருந்தும், பக்கிங்காம் கர்நாடிக் ஆலைத் தொழிலாளரை அவர்களுடைய தலைவர்கள் மேற்கண்ட தப்பு வழியிலேயே நடத்திச் சென்றார்கள். "உங்களுடைய கோரிக்கைகளைப் பாரபட்சமற்ற நியாயத் தீர்ப்புக்கு விடுகிறோம்" என்று ஓமந்தூர் சர்க்கார் படித்துப் படித்துச் சொன்னதை நிராகரித்து வேலை நிறுத்தம் செய்தார்கள்!

ஏழெட்டு மாதத்துக்கு முன்னால் மேற்படி ஆலையிலேயே ஒரு வேலை நிறுத்தம் நேரிட்டது. பஞ்சாபிலிருந்து காவலர்களைத் தருவித்து இரும்புத் தடியினால் அடிக்கச் செய்தார்கள் என்று மேற்படி வேலை நிறுத்தத்துக்குக் காரணம் சொல்லப்பட்டது. இதைக் கேட்டதும் நமக்கெல்லாம் ஆத்திரம் பொங்கிற்று. தொழிலாளரின் தன்மதிப்புக்குப் பங்கம் விளைக்கும் மேற்படி கொடுஞ் செயலை உடனே ஒழிக்க வேண்டும் என்று சொன்னோம். வேலை நிறுத்தத்துக்கு அது நியாயமான காரணம் என்று பொதுமக்களும் ஒப்புக் கொண்டு தொழிலாளரிடம் அநுதாபம் செலுத்தினார்கள். சென்னை நகர சபை ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அநுமதித்தது. மற்றும் பலரும் மனமுவந்து நன்கொடை அளித்துத் தொழிலாளரை ஆதரிக்க முன் வந்தார்கள்.

ஆனால், சப்பை விஷயத்தையோ போனஸ் விஷயத்தையோ அவசரமாக வேலை நிறுத்தம் செய்வதற்குரிய காரணம் என்று இந்தத் துணிப் பஞ்ச காலத்தில் பொதுமக்கள் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஐந்து மாத போனஸ் கேட்கட்டும்;

பன்னிரண்டு மாதத்து போனஸ்தான் கேட்கட்டும். லாபத்தில் பங்கு வேணுமென்று கேட்கட்டும்; ஆலையிலே உரிமை வேண்டுமென்றும் கேட்கட்டும். ஆனால், கேட்கும் உரிமைகளை நியாயத் தீர்ப்புக்கு விடச் சர்க்கார் சம்மதிக்கும்போது வேலை நிறுத்தம் செய்வது என்ன நியாயம்? இந்தத் துணிப் பஞ்ச காலத்தில் இருபது லட்சம் கஜம் துணி உற்பத்தியைத் தடைப்படுத்துவது எப்படி நியாயம்? வேலை நிறுத்தத்தின் நியாயம் ஒரு பக்கம் இருக்க, தொழிலாளர் தலைவர்கள் மேலும் மேலும் தவறுகளைச் செய்துகொண்டே வந்தார்கள். பலாத்காரப் பேச்சுக்கள் நடந்தன. "சென்னை நகரையே கொளுத்தி விடுவோம்!" என்றும் பயமுறுத்தப்பட்டது.

துர்ப்புத்தியாளரால் தூண்டப் பட்டு நடந்த மாபெருந் தவறு, சென்னைக் கடற்கரையில் ராஜாஜியும் ராஜேந்திர பிரஸாத்தும் பேச முடியாதபடி பொதுக் கூட்டத்தைக் கலைத்ததாகும். ஐம்பது பேர் அன்று செய்த கலாட்டாவினால் நமது அரும் பெரும் தலைவர்களின் பேச்சைக் கேட்க முடியாமல் ஒரு லட்சம் ஜனங்கள் ஏமாற்றமடைந்து திரும்பவேண்டி நேர்ந்தது.

அன்று பொதுக்கூட்ட மேடையின் மீது எறியப்பட்ட மண்ணும், கல்லும், மற்றப் பொருள்களும் தொழிலாளர் இயக்கத்தின் தலையிலே எறியப்பட்டவை என்றே எண்ணப்பட வேண்டும்.

கொஞ்ச நஞ்சம் வேலை நிறுத்தம் சம்பந்தமாகப் பொது ஜனங்களுக்கிருந்த அநுதாபமும் அன்றோடு தீர்ந்து போயிற்று.

• • •

நூறு நாளைக்குப் பிறகாவது உண்மையை உணர்ந்து வேலைக்குத் திரும்பிய தொழிலாளரைப் பாராட்டுகிறோம்.

இன்னும் ஒரு படி அதிகமாக மேற்படி வேலை நிறுத்த விஷயத்தில் ஓமந்தூர் சர்க்கார் கடைப்பிடித்த பொறுமையையும் உறுதியையும் பாராட்டுகிறோம்.

ரயில்வே வேலை நிறுத்தத்தின்போது சென்னையில் பிரகாசம் சர்க்கார் நடந்தது. அடிதடி, துப்பாக்கிப் பிரயோகம் முதலிய பல கொடுமைகள் நடந்ததின் பேரில் மேற்படி வேலை நிறுத்தம் உடைந்து நின்றது.

ஆனால் பக்கிங்காம் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில், எத்தனையோ கோபமூட்டக் கூடிய காரியங்கள் நடைபெற்றும் ஓமந்தூர் மந்திரி சபை நிதானத்தை இழக்க வில்லை. பொறுமையைக் கடைப்பிடித்து உறுதியுடன் காரியம் செய்தார்கள்.

தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் எத்தனையோ அருந் தொண்டுகள் புரிந்திருக்கும் ஸ்ரீ திரு வி. கலியாண சுந்தர முதலியார் தாக்ஷிண்ய வசமாக மேற்படி தகராறில் சிக்கிக் கொண்டார். அப் பெரியாரை அவசரப்பட்டுக் கைது செய்யாமல் மிக அவசியமானபோது வீட்டிலேயே பந்தோபஸ்தில் வைத்ததில் காட்டப் பட்ட நிதானம் பெரிதும் பாராட்டத் தக்கது.

ஒரு வழியாக வேலை நிறுத்தம் இப்போது முடிந்து விட்ட படியால், மேற்படி பந்தோபஸ்து உத்தரவு கூடிய சீக்கிரத்தில், இந்த இதழ் வெளியாவதற்குள்ளேயே, நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

• • •

கடைசியாக, ஒரு விஷயம். 'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்னும் பழமொழியை ஒட்டி, மேற்படி வேலை நிறுத்த சமயத்தில் ஓமந்தூர் மந்திரி சபையில் பிளவை உண்டு பண்ணச் சிலர் முயன்று பார்த்தார்கள். டாக்டர் ராஜன் தொழில் மந்திரியாயிருப்பதினால்தான் சமரசம் ஏற்படவில்லை யென்றும், அவரை மாற்ற வேண்டும் என்றும் கிளர்ச்சி செய்தார்கள். இந்த அபத்தமான மித்திரபேத வலையில் ஓமந்தூர் மந்திரி சபை சிக்காமலிருந்ததையும் நாம் பாராட்ட வேண்டும். பிரதம மந்திரி ரெட்டியாரும், போலீஸ் மந்திரி டாக்டர் சுப்பராயனும், மற்ற எல்லா மந்திரிகளும் ஒரே உறுதியாக ஏகமனதுடன் இந்த விஷயத்தில் நடந்து கொண்டது பற்றிப் பெரிதும் மகிழ்கிறோம்.

மேற்படி வேலை நிறுத்த விஷயத்தில் ஓமந்தூர் மந்திரி சபை கடைப்பிடித்த நிதான உறுதியினால் மந்திரி சபையின் கௌரவம் உயர்ந்திருப்பதுடன், இந்த மந்திரி சபை நீடித்து நிலைத்து நிற்கும் என்பதற்கும் அதுவே அறிகுறியாகிறது.

மேற்படி வேலை நிறுத்தத்தின் பாடங்களைத் தொழிலாளரும் தொழிலாளர் தலைவர்களும் முதலாளிகளும் பொதுமக்களும் பொதுஜன சர்க்காரும் நன்கு உணர்ந்து நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம். இனி இத்தகைய வேலை நிறுத்தங்களினால் தொழிலாளர்களுக்கு வீண் கஷ்ட நஷ்டமும் பொது மக்களுக்குத் தொல்லையும் நேரிடாமல் பாதுகாப்பது பொதுஜன சர்க்காரின் முதற் கடமை யாகும்.

1947-ம் வருஷத்துக் 'கல்கி' சிறுகதைப் போட்டி

முடிவு தேதி 30—9—47

○

முதற் பரிசு:

ரூ. 500

இரண்டாவது பரிசு:

ரூ. 100 விதம் ஐந்து கதைகளுக்கு

●

நிபந்தனைகள்

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் கதைகள், தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும்.

2. கதையின் நீளம் "கல்கி"யில் ஐந்து பக்கம் முதல் பன்னிரண்டு பக்கத்துக்குள் அடங்குவதா யிருக்க வேண்டும்.

3. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம்; அதற்குமேல் அனுப்பக் கூடாது.

4. சென்ற 1946-ம் வருஷத்துப் போட்டிக்கு அனுப்பிப் பரிசு பெறாத கதைகளைத் திரும்பவும் அனுப்பக் கூடாது. அம்மாதிரி கதைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

5. 1947-ம் வருஷம் செப்டம்பர் மீ 30உக்குள் கதைகள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். கவரின் மேல் "சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

6. எல்லாவற்றிலும் சிறந்ததென்று பஞ்சாயத்தார் கருதுகிற கதைக்கு முதல் பரிசு ரூ. 500 அளிக்கப்படும். அடுத்த படியாக ஐந்து கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 விதம் அளிக்கப்படும். பரிசு பெற்ற கதைகளின் 'காபிரைட்' உரிமை "கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்தது.

7. பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள் பிரசுரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும். அவற்றுக்கு உசிதமான சன்மானம் வழங்கப்படும்.

8. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பஞ்சாயத்தார் கருதினால், பரிசுத் தொகை பஞ்சாயத்தாரின் உசிதம்போல் பிரித்துக் கொடுக்கப்படும்.

9. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும் திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

10. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

பஞ்சாயத்தார்:

1. ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எல்., குற்றாலம்.
2. ஸ்ரீ ஏ. என். சிவராமன், ஆசிரியர், "தினமணி," சென்னை.
3. ஸ்ரீ ரா. நாராயணன், பி. ஏ., பி. எல்., தலைவர், எழுத்தாளர் சங்கம்.
4. ஸ்ரீ ஈ. ஆர். கோவிந்தன், ஆசிரியர், "ப்ரீ இந்தியா," சென்னை.
5. ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், "கல்கி," சென்னை.

○

மானேஜர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை

* *

லுங்கிமல் சாவ்கார்

வரதன்

“அம்மா! எசமான் உள்ளே இருக்காருங்களா?” என்று கேட்டான் பண்ணைக்கார முனிசாமி.

“யாரப்பா, அது? விடிஞ்சதும் விடியாததுமா இங்கே வந்து கூவுறது?” என்று கேட்டுக் கொண்டே வெளியில் வந்தாள் வேலைக்கார அம்மாக்கண்ணு.

“இல்லே அம்மா, ஐமானைப் பார்க்கணும்! ரூபா கொஞ்சம் கொண்ணுந்து இருக்கேன். அதைக் கொடுத்திட்டு நகையை மீட்டுகிட்டுச் சீக்கிரமா போகணும்!” என்றான் முனிசாமி.

“அப்படின்னு சித்த நாழி இரு; போய் ஐயாவை எழுப்பறேன்!” என்று கூறி விட்டு, அம்மாக்கண்ணு உள்ளே சென்றாள்.

முனிசாமி வெகு நேரம் வரை வாசலில் காத்துக் கொண்டிருந்தான். ‘ஐயாவும் வரவில்லை; அவரை எழுப்பப் போன அம்மாவும் வரவில்லை.

மணி ‘டாங், டாங்’ என்று ஏழு அடித்தது. வேலைக்காரப் பையன் சாவியை எடுத்துக் கொண்டு வந்து லுங்கிமல் சாவ்காரின் கடையைத் திறந்தான். வழக்கப்படி அவன் சாய்வு மேஜையைத் துடைத்து வைத்த பிறகு, சாவ்கார் உட்காரும் மெத்தையையும், அவர் தம் முதுகுக்கு வைத்துக் கொள்ளும் தலையணையையும் எடுத்து விட்டு, அவற்றிற்குப் பதிலாக வேறொரு மெத்தையையும் தலையணையையும் கொண்டு வந்து போட்டான். பிறகு, ஒரு கட்டுக் கணக்குப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு வந்து சாய்வு மேஜையின் முன்னால் வைத்தான். சாவ்காரைப் பார்க்க வருகிறவர்களுக்கென்று தனியாக ஒரு பாயை வழக்கம் போல் கீழே விரித்தான். பிறகு, முனிசாமியை அங்கே வந்து உட்காரும்படி சமிக்ஞை செய்தான். ஏதோ முணுமுணுத்துக் கொண்டே முனிசாமி அங்கே வந்து உட்கார்ந்தான். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவனுக்குத் துணையாக வேறொருவன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் ஒரு சாயபு. அவன் பெயர் காதர். அவன் முனிசாமியின் பக்கத்து ஊர்க்காரன். எனவே, இருவரும் பேச்சில் இறங்கினர்.



“அப்படின்னு சித்த நாழி இரு!”

“எங்கே வந்தே, அண்ணே?” என்றான் காதர் சாயபு.

“இங்கே எதுக்கு வருவாங்கன்னு உனக்குத் தெரியாதா? சாவ்காரண்டைதான் வந்தேன். நீ என்ன அடகு வைச்சிருக்கே? வட்டி கட்டறத்துக்காக நான் வந்தேன். என் சின்னமவ கண்ணாலத்துக்காகக் கொஞ்சம் ரூபா வாங்கினேன். அது என்னடான்னு இப்போ பெரிய தொல்லையாய்ப் போச்சு; போன வாரம் ஆள் வந்து உடனே மாட்டை ஓட்டிவரச் சொன்னாருன்னு பயமுறுத்தினான். அதனாலே மக அய்யருக்குக் காயிதம் போட்டேன். பத்து ரூபா பணம் அனுப்பிச்சாரு. அதான் வட்டி கட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்!’ என்றான் முனிசாமி.

“நான்கூட அதுக்குத்தான் வந்தேன். போன வருசம் அல்லாசாமிப் பண்டிகைக்காகக் கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு போனேன். அடுத்த மாசமே கொடுத்துடலாம்னுதான் நினைச்சேன்; ஆனா என் துரதிருஷ்டம் ஊரிலே நோவு வந்துடுச்சு. பத்து ஆட்டுக்கு மேலே செத்துப் போச்சு! மீதி இருந்ததிலே மூணு சினை; அதை வெட்டக் கூடாதுன்னு பீபி சொல்லிப்பிட்டாள். அதனாலே கடை வியாபாரம் ரொம்பக் குறைஞ்சு போச்சு. வீட்டிலே உப்பு புளிக்கு வழியில்லே. நான் எங்

திருந்து வட்டி கொடுக்கிறது? பேசாம இருந்துட்டேன். பத்து நாளைக்கு முன்னாலே சாவ்கார் வீட்டுக்கு ஆளை அனுப்பிச்சாரு. அவன் ரொம்பதூரம் என்னை அவமானப் படுத்திப்பிட்டான். எனக்கு ரொம்ப கோபம் வந்துடுச்சு. ஆடு வெட்டற கத்தியாலேயே வெட்டிப் போட்டுடலாம், அப்புறம் நடக்கிறதைப் பார்த்துக்குவோம்னு கூடத் தோணிச்சு. பீபீதான் வந்து கையைத் தடுத்தாள். அதனாலே கோவம் தணிஞ்சுது. அதுக்குள்ளே வெளிலே இருக்கிறவங்க வந்து சமாதானப் படுத்தி ஒரு வாரத்திலே பணம் கட்டி விடுவதாகச் சொல்லி அனுப்பிச்சுட்டாங்க. நேத்திக்கு ஆடுகளைச் சந்தைக்கு ஓட்டி வித்துப்பிட்டேன். ரூபாயை முழுசும் பைசல் செய்துடப்போறேன். பாரேன். அப்புறம் சாவ்காரை என்னென்ன கேள்வியெல்லாம் கேட்கப் போறேன்னு! இன்னிக்கு இவ்வளவு பேர் எதிரே அந்த ஆளை இட்டாரச் சொல்லி அவனை அவமானப் படுத்தவேண்ணு......"


" எங்கே வந்தே, அண்ணே!"

"யாரப்பா, அது? அங்கே ஏகமா என் கூவறே? ஐயா எழுந்துட்டாரு கூடா நிக்கோன்னு சொல்லச் சொன்னாரு. வந்தாருன்னு கோவிச்சிப்பாரு. ஜாக்கிரதை!" என்றான் ஒரு மீசைக்காரன்.

காதர் அவனை மெல்ல அருகே அழைத்து, "உங்க ஐயா இங்கே வர ரொம்ப நேரம் ஆகுமோ?" என்று கேட்டான்.

"இன்னிக்கு சனிக்கிழமை இல்லே; ஐயா தலை முழுகுறாரு. வரக் கொஞ்சம் நேரமாகும். இன்னும் ஒரு மணி நேரத்துக் குள்ளே வந்துடுவாரு. சவ குந்திக்கோ!" என்றான் மீசைக்காரன்.

இதற்குள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தது. சாவ்காரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு அங்கே சுமார் இருபது பேருக்குமேல் உட்கார்ந்திருந்தார்கள். அவரவர்கள் வாயிலே வந்தபடி ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

கணகணவென்று மணி பத்தடித்தது. சாவ்கார் அவசர அவசரமாக ஆபீஸ் அறைக்குள்ளே நுழைந்தார். அவரைப் பின்பற்றி இரண்டுபேர் உள்ளே நுழைந்தார்கள். சாவ்கார் வந்ததும் மெத்தை மேல் உட்கார்ந்தார். உடனே அந்த மீசைக்காரன் பங்காவை இழுக்க ஆரம்பித்தான்.

சாவ்காரைக் கண்டவுடனே முனிசாமி எழுந்து நின்று அவரைக் கும்பிட்டுவிட்டு, "சாமி, ரொம்ப நேரமா காத்துக்கிட்டு இருக்கேன். விடிகாலம்பர வெள்ளி முளைக்கச்சவே வந்துப்பிட்டேன். கொஞ்சம் சீக்கிரமா அனுப்பிச்சுடுங்கோ. ஆட்டுக்குப் போயி அய்யர் ஆட்டு ஏரை ஓட்டிக்கிட்டுப் போவணும்!" என்ற பழம் பாட்டையே பாடினான்!

சாவ்கார் அவனை ஏற இறங்க முறைத்துப் பார்த்து மீசையை உருவிக்கொண்டே, "என்னடா, காலங் காத்தாலே உளருகிறே? குடிச்சுப்பிட்டு வந்துட்டயா, என்ன? சும்மா உட்காரு! ஆளை அனுப்பிச்சா ஏகமா முறைச்சயாமே? கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டா கஷ்டமாயிருக்கிறதோ? வட்டி, அசல் எல்லாம் பூரா பைசல் செய்தாகணும்...... சரி, கொஞ்சம் உட்காரு, இவங்களைப் பார்த்துட்டு வரேன்!"


பாவம், முனிசாமி அவரை எதிர்த்து ஒன்றும் பேச முடியாமல் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டான்.

அடுத்தபடி காதர் எழுந்து சாவ்காருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, "என்னுங்க, உங்க வட்டி, அசல் எல்லாம் பூரா கொண்டாந்துட்டேன். சீக்கிரமா கணக்கைக் கொண்டாரச் சொல்லுங்கோ. தீர்த்துட்டு நான் அவசரமா போகணும். அதோடே அன்னிக்கு ஆட்டாண்டே அனுப்பிச்சிங்களே, அந்த ஆளையும் கொஞ்சம் இட்டாரச் சொல்லுங்க; அவன் கண்ணெதிரே பாக்கியைப் பைசல் செய்துட்டு, அப்புறம் அவனை ஒரு கை பார்க்கிறேன். உங்களைப் பத்தி அன்னிக்கே அவனைச் சும்மா விட்டேன். இல்லேன்னு அவனை என்ன செய்திருப்பேன், தெரியுமா?" என்று உறுமினான்."

சாவ்கார் பார்த்தார். 'இவனை எதிர்ப் பதில் பயனில்லை; இவன் துஷ்டன் போலிருக்கிறது: ஏதாவது ரகளை செய்வான்; எனவே இவனைச் சமாதானப்

பூசித்த வேண்டும்' என்று எண்ணியவராய் "கொஞ்சம் தயவு செய்து உட்காரு, இவர்களை அனுப்பிச்சிட்டு வரேன்!" என்றார்.

சாவ்காரின் கூட வந்தவர்கள் இரண்டு குருக்கள். நெற்றியில் பட்டை பட்டையாக விபூதியை அடித்துக்கொண்டு, நடுவிலே சந்தனப் பொட்டு வைத்துக்கொண்டு, அதில் குங்குமப் பொட்டும் வைத்திருந்தார்கள். காதில் சிவந்த நெருப்புப் போன்ற கடுக்கன்கள்; கழுத்தில் ருத்திராக்ஷ மாலை. பழுத்த சிவபக்தர்கள் என்று பார்க்கும்போதே சொல்லி விடலாம்.



உங்கள் வியாபாரம் மேன்மேலும் விருத்தியாகும்

சாவ்கார் மெத்தையில் உட்கார்ந்த சிறிது நேரத்திற்குள், எதிரே உட்கார்ந்திருந்த குருக்களில் ஒருவர், அவருடைய கையில் ஒரு காகிதத்தைக் கொடுத்தார். காதர், அவர்களும் தன்னைப்போல் கடன் கொடுக்க வந்தவர்கள் என்று நினைத்தான்.

சாவ்கார் அந்தப் பத்திரிகையைப் பிரித்துப் படித்தார். அதில், காலகண்டேச்வர ஸ்வாமிக்கு கும்பாபிஷேகத்திற்காகத் திரவிய சகாயம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. உடனே சாவ்கார் கஜானாப் பெட்டியைத் திறந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து குருக்கள் கையில் கொடுத்தார். குருக்கள் மிகவும் சந்தோஷத்துடன், "பகவத் கிருபையால் உங்கள் வியாபாரம் மேன்மேலும் விருத்தியாகும்" என்று ஆசி கூறிச் சென்றார்.

காதர் சாயபு இதைக் கவனித்தான். சாவ்காரின் பெருந்தன்மைக் குணத்தையும், தெய்வ பக்தியையும் கண்டு உள்ளம் பூரித்தான். நல்ல தாராள மனமுடையவர் என்று எண்ணினான். எனவே, வட்டியில் கொஞ்சம் தள்ளிக் கேட்டாலும் நிச்சயமாகத் தள்ளிக் கொடுப்பார் என்றும் நம்பினான்.

பிறகு, சாவ்கார் தமது வியாபாரத்தைக் கவனிக்கத் தொடங்கினார். அடங்கல் புத்தகத்தைக் கொண்டு வரும்படி பையனுக்குக் கட்டளையிட்டார். பிறகு முனிசாமியை இரைந்து கூப்பிட்டார்.

அதைத் தூக்கத்திலிருந்த முனிசாமி அலறிக் கட்டிக்கொண்டு எழுந்து வந்து, சாவ்காரின் மேஜையின் முன்னால் நின்றான்.

"அப்படியே உட்காரு; கிட்ட வராதே! கள்ளு நாத்தம் வயிற்றைக் கலக்குது!" என்றார் சாவ்கார்.

"என்ன, சாமி! காலையிலே எழுந்து இன்னும் பல்கூடத் துலக்கலே, வீணா பழி சுமத்துறீங்களே! அப்படி யெல்லாம் குடிச்சா, உங்களுக்கு வட்டி கொடுத்து நான் எங்கே மீள்றதுங்க? வெறும் உப்பு போட்டுக் கொஞ்சம் நீச்சத் தண்ணியாவது நான் குடிக்க வேண்டாமா, சாமி!" என்றான் முனிசாமி.

"டேய், உன் ராமாயண மெல்லாம் கம்பிட்டே வேண்டாம். எவ்வளவு பணம் கொண்டு வந்திருக்கே, சீக்கிரமா சொல்லு!"

"பத்து ரூபா கொண்ணாந்திருக்கேன் சாமி, வட்டி போவ மீதியை ரொக்கத்திலே கழிச்சுக்கோங்க!"

"என்னடா உளறுகிறே? ஆறு மாசத்துக்கு வட்டியே பதினைஞ்சு ரூபாய்க்கு மேலே ஆச்சு, அதிலே அசலுக்கு வேறே கழிக்கச் சொல்றியே! கண்ணு மண்ணு தெரியலையா? பூரா வட்டியை இப்போதே கட்டல்லேன்னா, உன் நகையை நாளைக்குக் காலையிலே ஏலம் போட்டு விடுவேன். என்ன சொல்றே?"

"சாமி, சத்தியமா சொல்றேன். என்னைக் கொன்னுக்கூட இதுக்கு மேலே எக்கிட்ட தம்பிடிகூடக் கிடையாது!"

"போடா, போ! அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே? வேணும்னு உன் நகையைக் கிரயம் கட்டி எடுத்துக்கிறேன். அதுக்கு ரொம்ப நாழியாகும். நீ போயி மூணு மணிக்கு மேலே வா!"

"என்ன சாமி, வட்டி மட்டும் பதினைஞ்சு ரூபா ஆச்சுங்கிறீங்களே, இது தர்மந்தானுங்களா? நான் பரம ஏழை. கவனிங்க, சாமி......!"

"அதெல்லாம் வட்டியிலே ஒரு தம்பிடி கூடத் தள்ள முடியாது. நீ போய் மூணு

மணிக்கு வா, அப்ப பேசிக்குவோம். சும்மா தொந்தரவு பண்ணினயானா கோபம் வரும், ஜாக்கிரதை!'' என்று எச்சரித்துவிட்டு, அடுத்தபடி சாஹுகார், காதர் சாயபுவைக் கூப்பிட்டார். தமக்கு எதிரே நின்று கொண்டிருந்த வேலைக்காரப் பையனிடம், "டேய், இவர் நகையைக் கொண்டு வாடா! நம்பர் 835. சீக்கிரம் வா!'' என்றார். பிறகு அடங்கலைப் பிரித்துக் கணக்குப் போட்டார். ஒரு வருஷ வட்டியைக் கணக்கிட்டார். அதற்குள் நகையும் வந்தது.

"நீ எவ்வளவு ரூபாய் கொண்டு வந்திருக்கே, அப்பா?''

"ஆட்டை வித்தேன்; மொத்தம் ஐம்பது ரூபா கிடைச்சது. உங்க பாக்கியைக் கொடுத்துட்டு மீதிக்கு ஆட்டுக்குச் சாமான் வாங்கிக்கிட்டுப் போகலாம்னு வந்தேனுங்க!'' என்றான் காதர் சாயபு.

"ஹி...ஹி...ஹி...என்னப்பா, நீ பெரிய ஆளுபோல இருக்கே! மொத்தம் எழுபத்தைந்து ரூபாயாகிறது. நீ என்னடான்னா ஐம்பது ரூபா கொண்டு வந்துட்டு, அதிலேயே மீந்து ஆட்டுக்குச் சாமான் வாங்கிக்கிட்டுப் போகணுங்கிறயே! அது எப்படி அப்பா, நடக்கும்?'

"ஐயையோ! என்னுங்க, நீங்க ஆளை அப்படியே மூழுங்கி விடுவீங்க போல இருக்குதே! இருபத்தைந்து ரூபாய்க்கு ஒரு வருஷத்துக்கு ஐம்பது ரூபா வட்டிங்களா? இது எந்தத் தெய்வத்துக்குங்க அடுக்கும்? ஏழை வயித்திலே இப்படி அடிக்காதீங்க!''

"என்னப்பா, நீ கடன் வாங்கறபோது இந்த வட்டிக்கு ஒப்புக்கொண்டுதானே கையெழுத்துப் போட்டே? இப்போ மாட்டேன்னு நடக்குமா? உன் நகைக்கும் பாக்கிக்கும் சரியாப் போச்சு! நீ போயிட்டு வரலாம்!''

காதர் சாயபு அதற்கு மேல் ஒன்றும் பேச முடியாமல், தன் வயிற்றெரிச்சல் தீரச் சாஹுகாரைத் திட்டிவிட்டுச் சென்றான்.

அங்கே கூடியிருந்தவர்கள் நமக்கும் இந்த கதிதான் சேருமோ என்று எண்ணி, "இந்தப் பாவியண்டை வந்து நகையைக் கொடுத்து விட்டோமே!'' என்று உள்ளுக்குள்ளேயே குமுறினார்கள்.



"நீங்க சொன்னா சரி!".

அப்பொழுது சாஹுகாரைத் தேடிக் கொண்டு ஒரு பெரிய மனிதர் அங்கே வந்தார். அவரைக் கண்டவுடனே சாஹுகார் எழுந்து, "வாங்க, ஹெட்மாஸ்டர் ஸ்வாமிகளே! எங்கே ரொம்ப நாளா உங்களைக் காணறதேயில்லையே!'' என்று களிப்புடன் வரவேற்றார்.

"எங்கே வாறது, ஒழிவே கிடையாது! போதாக்குறைக்கு இந்த எழவெடுத்த பள்ளிக்கூடம் ஒன்று என் காலைக் கொத்தோடே அறுக்கிறது! நீங்கதான் கவனிக்கவே மாட்டேங்கிறீங்களே......!'' என்று அவர் ஆரம்பித்தார்.

"என்ன, ஸ்வாமி! அப்படிச் சொல்றீங்களே? நீங்க எது சொன்னாலும் சரி, ஸ்வாமி! நான் மாத்துச் சொல்லவே மாட்டேனே!'' என்றார் சாஹுகார்.

"சரி, வந்த காரியத்தைச் சொல்லி விடுகிறேன். எங்கள் பள்ளிக்கூடம் இப்போது அந்தரத்திலே நிற்கிறது. அதை நிர்வகிக்க ஒரு தம்பிடிகூட மூலதனம் கிடையாது. ஏதோ உங்களைப் போன்ற நாலு பேர் பெரிய மனசு பண்ணி ஏதாவது உபகாரம் பண்ணினால், பத்து ஏழைப் பசங்கள் படிக்கும்......''

"அதுக்கென்ன ஸ்வாமி, நீங்க சொன்னா சரி! நான் அப்படியே நடக்கிறேன். என்னை எவ்வளவு கொடுக்கச் சொல்றீங்க?''

"நான் உங்களை இப்போ ரொம்ப தொந்தரவு படுத்தவில்லை; ஆயிரம் ரூபாய் நீங்கள் கொடுத்தால் போதும். மீதியை நான் வெளியிலே பார்த்துக் கொள்கிறேன்.''

உடனே சாஹுகார் தமது மூத்த மகனைக் கூப்பிட்டுத் தம் பாஷையில் ஏதோ கூறினார். சிறிது நேரத்திற்குள் ஓர் ஆயிரம் ரூபாய் நோட்டு அய்யங்கார் கையில் வந்தது. உடனே அவர், "ரொம்ப சந்தோஷம், உங்கள் பெயர் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்படி நீங்கள் இன்று இதைச் செய்திருக்கிறீர்கள். கடவுள் புண்ணியத்

தியே உங்கள் வியாபாரம் விருத்தியாகும்... அப்போ, நான் வரட்டுமா?" என்றார்.

"நமஸ்காரம்; ரூபாய் இருக்கட்டும்" என்று அவரை அனுப்பிவிட்டு, சாவ்கார் மறுபடியும் தம் வியாபாரத்தைக் கவனிக்கத் தொடங்கினார்.

கடைசி வரை சாவ்கார் தன்னைக் கவனிக்காமற் போகவே, முனிசாமி அந்தப் பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு நேரே கள்ளுக் கடைக்குச் சென்றான். "அவன் கெட்டான் குடியன்! எனக்கு இரண்டு மொந்தை போடு, அண்ணே!" என்று சொல்லிக் கொண்டே, அந்த நோட்டைக் கள்ளுக் கடை முதலாளியான கந்தசாமியிடம் கொடுத்தான். முதல் இரண்டு மொந்தையில் ஒன்றும் சுகமில்லை. மறுபடியும் இரண்டு மொந்தை போட்டான்; அப்பொழுதும் பலன் இல்லை. மறுபடியும் இரண்டு மொந்தை போட்டான்! போதை 'கிர்' என்று தலைக்கு ஏறிவிட்டது. வாயில் வந்தபடி திட்டிக் கொண்டே, சாவ்காரின் கடையை அடைந்தான்.

அப்பொழுது மணி இரண்டு இருக்கும். உள்ளே 'ஜேஜே' யென்று ஒரே கூட்டம். அவர்களையெல்லாம் தள்ளிக் கொண்டு உள்ளே போய், "சாமி, தண்டம்!" என்று கீழே விழுந்தான் முனிசாமி. சாவ்கார் பார்த்தார். 'சரி, இவன் குடித்துவிட்டு வந்து விட்டான். இவனிடம் ஒன்றும் பேசக் கூடாது' என்று எண்ணி, அவனை ஒரு மூலையில் உட்காரச் சொன்னார்.

"தர்மராஜா, அப்படியே செய்றேனுங்க!" என்று உளறிக் கொண்டே முனிசாமி சாவ்கார் காட்டிய மூலையில் உட்கார்ந்தான்.

இந்தச் சமயத்தில் அவசர அவசரமாக இருவர் உள்ளே நுழைந்து, "சாமி! நாளைக்குக் காலையிலே வேலாத்தம்மன் கோவிலுக்குக் காப்பு கட்டப் போறோம். உங்க தர்மத்தை எதிர்பார்க்கிறோம்" என்றார்கள்.

உடனே சாவ்கார், இருபத்தைந்து ரூபாயை எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பினார்.

இதைக் கவனித்த முனிசாமி, அவர்களுடன் தானும் எழுந்து வெளியே வந்து, "என்ன, அண்ணே! சாவ்கார் என்ன கொடுத்தான்?" என்று கேட்டான்.

"மகராசன், இருபத்தைந்து ரூபா கொடுத்தான்!" என்றான் அவர்களில் ஒருவன்.

"அடே, மகராசன் மூஞ்சியைப் பார்த்தியா? ஏழைக்க வகுத்திலே அடிச்சு, கடைச் சொத்தை எடுத்து வழிப் புள்ளையாருக்கு உடைக்கறவண்டா, அவன்! நான் காலையிலேருந்து கெஞ்சிக் கூத்தாடிக்கிட்டு இருக்கேன், வட்டிப்பிலே ஒரு செல்லாக் காசைக் கூடத் தள்ள மாட்டேங்கிறான், அவன் பெரிய மகராசனாம்!... இதோ பார்; அவனை என்ன செய்யப் போறேன்னு!" என்று உறுமிய வண்ணம் தள்ளாடிக் கொண்டே சாவ்காரை நெருங்கி, "சாமி, காலையிலேருந்து உங்க வீட்டோடே சோறு தண்ணிகூட இல்லாமே விழுந்து கிடக்கிறேன். பசியா காதை அடைக்குது. கொஞ்சம் சீக்கிரம் அனுப்பிச்சுடுங்கோ!" என்றான் முனிசாமி.

சாவ்கார், "டேய், சும்மா கத்தாதே! உன் கணக்குதான் பார்த்துண்டிருக்கேன். உன்னுடைய கணக்கு இருபது ரூபாதான் தானும். மொத்தம் இருபத்தைந்து ரூபா நீ கொடுக்கணும். காலம்பற கொண்டு வந்த ரூபாயிலே ஐந்து ரூபா கொடுத்திட்டா பாக்கி சரியாப் போகும்!" என்றார்.

"அப்படின்னா, இந்தாங்க சாமி. ஐந்து ரூபா! கணக்கைக் கொடுங்க!" என்றான் முனிசாமி, குடி மயக்கத்தில்!

சாவ்கார் ஐந்து ரூபாயை வாங்கி வைத்துக்கொண்டு "டேய். நீ போய் வா! கணக்கு வராது! பாக்கிக்குச் சரியாப் போச்சு!" என்றார்!

முனிசாமிக்குக் கோபம் பொங்கி எழுந்தது. கண்கள் சிவந்தன. "டேய், மார்வாடி! என்னை மோசம் செய்து சம்பாதித்த அந்த இருபத்தைந்து ரூபாயையும் வேலாத்தம்மன் கோவிலுக்கா தர்மஞ் செய்தே? என்னைப் போன்ற ஏழைகள் வயிற்றிலே மண்ணை வாரிப் போடும் பாவிக்குத் தானம் வேறு, தருமம் வேறயா?......உன்னை ஒரு நாழிக்குள்ளே நான் என்ன பண்றேன், பாரு!" என்று மீண்டும் கத்திக் கொண்டே, அவன் மார்வாடி மீது பாய்வதற்குத் தயாரானான்.

அதற்குள் தகவல் கிடைத்த இரண்டு போலீஸ் ஜவான்கள் கடைக்கு விரைந்து வந்து, முனிசாமியின் கைகளில் விலங்கைப் பூட்டி, அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றார்கள்.

சாவ்கார் கடையில் எப்பொழுதும் போல் லேவாதேவி நடந்து கொண்டிருந்தது!

வான சஞ்சாரம்

இசைத்தேனீ

ஜூன் 17ல் நடந்த என். வி. வஸந்த கோகிலத்தின் கச்சேரி, அவருடைய கானம் நாளுக்கு நாள் மெருகேறி வசீகரம் மேம்பட்டு வருகிறதென்பதற்குச் சான்றாயிருந்தது. இயற்கையில் சன்னமாயினும், மைக்கு மூலம் வெகு தெளிவாயும், மதுரமாயும் காதை நிரப்பும் குரல். எதையும் சுலபத்துடன் லாகவமாக ஆற்றலுடன் சேர்த்திருக்கிறது. அன்று அவர் பாடிய சாவேரி, காம்போதி ராகங்களும் 'சிவே பாஹிமாம்' என்ற கல்யாணி கிருதியும் மனோஹரமாய் விளங்கின.

வேணுகானத்தைச் சிறந்த முறையில் கையாண்டு கச்சேரி முழுவதும் நிரந்தரமாய் ரஞ்சிக்க வைக்கும் சில வித்வான்களில் டி.ஆர். ராதாகிருஷ்ணன் முக்கிய ஸ்தானத்துக்கு உரியவர். 18ல் சென்னையில் அவர் காம்போதியைச் சாங்கோபாங்கமாய் ஆலாபனை செய்து, தானமும் வாசித்து, 'பரிமள ரங்கநாதே' என்ற பல்லவியை வெகு விமரிசையாய் வழங்கினார்.

பாருபள்ளி ராமகிருஷ்ணய்ய பந்துலுவின் முக்கிய சிஷ்யரான பாலமுரளி கிருஷ்ணாவின் பாலிய சாரீரம் உடைந்து இப்போது சற்று கனத்துக் கேட்கிறது. கையில் நல்ல தேர்ச்சியும் சாதகச் சிறப்பும் கொண்டவர். 19ல் சென்னையில் நடந்த அவரது கச்சேரியில், ராமப்ரியா, குந்தலவராளி ராகங்களும், 'ராம நன்னுப்ரோவ' கிருதியும் நன்றாயிருந்தன. ஸ்வரப்ரஸ்தாரங்களைப் பெரும்பாலும் வான வேடிக்கைகளாகவே அமைக்கும் மோகத்தில் இன்னும் ஆழ்ந்திருக்கிறார். சிறிது நிதானமும் சுக பாவமும் சேர்த்துப் பாட முயன்றால் சிறப்படைவார்.

கோட்டு வாத்தியத்தைச் சிறப்பாய்க் கையாளும் மிகச் சில வித்வான்களில் ஏ. நாராயணய்யர் ஒருவர். ஆழ்ந்த ஞானமும் அழுத்தமான பிடிகளும் கொண்டு ஜூன் 21ல் சென்னையில் பல ராகங்களை வண்ணமாய் வழங்கினார். கமகப்ரியா, ஷண்முகப்ரியா, கடைசி ராகமாலிகை இவை கவனத்தைக் கவர்ந்தன. உருப்படிகளும் ஸ்வரப்ரஸ்தாரங்களும் ராகபாவம் நிறைந்திலங்கின.

22ல் சென்னையில் பிற்பகலில் டி. கே. ஜயராமன், நல்ல தேர்ச்சியும் இளம் பருவ பிருகாவும் கொண்டு ஒரு மணி நேரம் இன்னிசை பொழிந்தார். தோடி எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியது. ஸ்வரப் ப்ரஸ்தாரம் சக்கைப் போடா யிருந்தது.

ரஸிகர்கள் எத்தனையோ ராகங்களைக் கேட்டிருப்பார்கள். ஆனால் 'பாடி' என்றதோர் மிக அபூர்வ ராகத்தைக் கேட்டிருக்க மாட்டார்கள். அத்தகைய ராகங்களைக் கையாளுவதற்கான அரிய ஞானமும், நுணுக்கமான இழைப்புகளான ப்ரத்யேக வழியும் கொண்டு கேட்போரை வியக்க வைக்கும் அபூர்வ பேர்வழி பத்தமடை சுந்தரமய்யர். அன்று அந்த ராகத்திலும், பல உருப்படிகளிலும் தமது மகத்தான சரக்கை வாரி வழங்கினார்!

அன்றிரவு வைக்கம் சாஸ்திரி, கனிப்பான குரலில் தமிழ்த்தேவாரம், தேவ ராகங்களைச் சுருதித்தார். அன்று திருச்சியிலிருந்து கேட்ட எஸ். கே. சுப்ரமண்ய பிள்ளையின் கச்சேரியும் நன்றாயிருந்தது.

திருச்சியிலிருந்து 16ல் இரு குரல்கள் சேர்ந்து வழங்கியதோர் இனிய கானம் கேட்டது. ஒருவர் வெகு விஸ்தாரமாய்க் கையாண்ட தோடி, கற்பனைப் பொழிவும் சஞ்சாரக் கோவை வழுகும் கொண்டு மனம் கவர்ந்தது. இருவரும் சேர்ந்து உருப்படிகளை வழங்கியது தனி அமைப்பு கொண்டிருந்தது. பாடியவர்கள் கமலா, விமலா.

21ல் திருச்சிப் பாடிய தஞ்சாவூர் என். கே. ரங்கப்ப பாகவதரின் தோடி, பூர்விகல்யாணி ராகங்கள் முழுமையாயிருந்தன. குரலில் உறுதி படியைப் போதியவாறு விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

23ல் சென்னையில் நடந்த இரண்டு கச்சேரிகள் கவனத்தை ஈர்த்தன. காலையில் பாடிய கல்யாணி பத்மனாபன் கச்சேரி ஒன்று. எடுப்பான சாரீரமும் ஒழுங்கு முறையும் கொண்டு சங்கராபரணம் நற் சொரூபமாய் வெளிவந்தது. சஹானா உருப்படி மிக இனிமையாயிருந்தது.

இரவு பாடிய ஏ. எஸ். பஞ்சாபகேசன் சரளமான உதவுபடியும், சாதகச் சிறப்பும் கொண்டு ஆபோகி, பந்துவராளி என்னும் ராகங்களை வண்ணமாய் வழங்கினார்.

★ ● ★

"கல்கி"யின் இரு புத்தகங்கள்

சாரதையின் தந்திரம்	ரூ. 4 8 0
மகுடபதி	ரூ. 4 0 0

தபால் செலவு தனி

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

காரைக்குடி

வட்ட மேஜை

சின்ன தாராபுரம்.
16—6—47.

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு, ஏழை எலிமெண்டரி ஸ்கூல் வாத்தியார் எழுதிக் கொண்டது.

தங்களுடைய 8—6—47 இதழில் 'நல்ல செய்தி'யை வாசிக்கும் பாக்கியம் இன்றுதான் கிடைத்தது. தற்காலம் பியூன்களுக்குக்கூட மாதம் 50 ரூபாய்க்குமேல் சம்பளம் கிடைக்கிறது. ஆரம்ப ஆசிரியர்கள் பியூன்களுக்கும் கீழ்ப்பட்டவர்களாக நமது தற்காலப் பொது ஜன சர்க்கார் நினைக்கிறார்களா?

சர்க்காரில் பணமுடை யென்று சொல்வது வீண் பித்தலாட்டம். நமது மந்திரிமார்களுக்கு எவ்வளவு விஷயத்தில் உண்மையான அனுதாபம் உண்டானால், அவர்களுக்குப் பணம் கிடைப்பது கஷ்டமல்ல என்ற விஷயம் கீழே காட்டியிருக்கும் உதாரணத்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்.

சமீப காலத்தில் நமது ராஜதானி ரோட்டுகளைப் பராமரிக்க 'ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்' என்று ஒரு புது டிபார்ட்மெண்டை நிறுவினார்கள். இந்த டிபார்ட்மெண்டுக்காகப் பழைய டிஸ்டிரிக்ட் போர்ட் எஞ்ஜினியர்களுக்கு ரூபாய் 250 சம்பளத்திலிருந்து ரூபாய் 500 ஆக்கினார்கள். போர்ட் அஸிஸ்டெண்ட் எஞ்ஜினியர்களுக்கு 150 ரூபாயிலிருந்து 300 ஆக்கினார்கள். இது தவிர சென்னைக்காக ஏற்படுத்திய ரோட் சீப் எஞ்ஜினியரையும் ரோட் ஸூபரின்டெண்டிங் எஞ்ஜினியர்களையும் காயம் செய்தார்கள். இதனால் சர்க்காருக்கு வரும் அதிகச் செலவு இந்த வகையும். நமது ராஜதானி ரோட்டுகள் பழைய ரோட்டுகள்தான். அதைப் பராமரிப்பவர்களாகிய பழைய போர்ட் எஞ்ஜினியர்கள் பழைய கல்லையும் மண்ணையும் போட்டுப் பழைய ஜட்காக்கள் மூலமாய் ரோட்டுக் குழிகளை மூடிக் கொண்டு வருகிறார்கள். அப்படியிருக்க, இந்தப் பழைய எஞ்ஜினியர்களின் சம்பளத்தை இரட்டிப்பாக்கியதும் இன்னும் அனாவசியமாக அதிகச் சம்பளத்தில் வேலையில்லாத மேல் அதிகாரிகளை நியமித்ததும் நமது நாட்டு நலனில் பொறுப்பற்றவர்கள் செய்த வழிப்பறிக் கொள்ளையாகும். அதிகச் சம்பளம் கொடுத்ததினால் ரோட்டுகள் முந்தியிருந்ததைவிடக் கொஞ்சமேனும் திருந்தவில்லை என்ற விஷயம் எந்த ரோட்டைப் பார்த்தாலும் தெரியவரும். கால அட்டவணையின் பிரகாரம் இந்த நிமிஷம் கூடத் தவறாமல் பஸ் ஓட்டிப் புகழ்பெற்ற மோட்டார் வண்டிப் பஸ்கள்கூட இப்போதெல்லாம் ஸ்பிரிங் ஒடிந்து ஒரு மணி நேரம் தாமதித்து வருவதைக் கவனித்தால் இந்த விஷயம் நன்கு தெரியும்.

சண்டைக்கு முந்தி, ஜில்லா போர்டுகள் 250 ரூபாய், 150 ரூபாய் எஞ்ஜினியர்களை வைத்துக் கொண்டு நமது ரோட்டுகளை நன்றாகப் பராமரித்து வந்தன. 3000 ரூபாய், 1000 ரூபாய் சம்பளத்தில் வேலையில்லாமல் தூங்கும் ரோட் எஞ்ஜினியர்கள் அப்பொழுது கிடையாது. சர்க்கார் டிரங்க் ரோட்டுகள் என்று சொல்லப்படும் பெரிய ரஸ்தாக்களை மாத்திரம் அடிக்கடி மராமத்து இலாகா ஸூபரின்டிங் எஞ்ஜினியர்கள் பார்த்து வந்தார்கள். ரோட்டுகளும் நன்றாக இருந்தன. தவிர சமீபத்தில் ரோட் எஞ்ஜினியர்கள் ஒன்று சேர்ந்து, மராமத்து இலாகா மந்திரியைப் பார்வையிட்டுத் தாங்கள் முந்தி ஜில்லா போர்ட் பிரஸிடெண்ட் கீழ் வேலை செய்த காலத்தில் ரோட்டுகளை மிகவும் கேவலமான செலவில் நன்றாகப் பாதுகாத்து வந்ததாகவும், இனிமேலும் அந்த மாதிரி தாங்கள் தனியாக இருந்து ரோட்டுகளைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது. அப்படியிருக்கும் பொழுது, அவர்கள் சம்பளத்தை இரட்டிப்பாகச் செய்ததுமல்லாமல் பஞ்சப்படி சேர்த்து நபர் ஒன்றுக்கு ரூபாய் முந்நூறு வீதமும் அதற்கு மேலும் கொடுத்துப் பொது ஜனங்களின் பணத்தை விரயம் செய்ய நமது மந்திரிகளுக்குப் பணம் கிடைத்திருக்கிறது!

ஆனால் ஏழை உபாத்தியாயருக்கு 10 ரூபாய் கூடக் கொடுத்து அவனுடைய நிலைமையைச் சீர்படுத்த வருஷக்கணக்காக யோசனை! பழைய எஞ்ஜினியருக்குப் பழைய வேலையைச் செய்ய இரட்டிப்புச் சம்பளம், இரட்டிப்புப் பஞ்சப்படி! நூற்றுக்கணக்கில் பண விரயம்!

ஆகையால், எங்களுக்கு நியாயம் கிடைக்க நாங்கள் ஸ்டிரைக் செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது என்கிற நிலைக்கிறோம். அதற்குத் தங்களைப் போலுள்ள பத்திரிகாசிரியர்களின் அபிமானமும் ஆசீர்வாதமும் வேண்டும். மந்திரியார்களின் கண்கள் நன்றாகத் திறக்கப்பட்டுப் பணம் விரயமாகாமல் நேர் வழியில் செலவழிக்கப்பட்டு எங்களுக்கு அரை வயிறாவது நிரம்ப வேண்டும்.

இப்படிக்கு,
ஏழை வாத்தியார்.

[மேற்படி ஏழை வாத்தியார், ஏழை வாத்தியாராயிருப்பதோடுகூட, சமீபத்தில் குழிவிழுந்த ரோடுகளில் ஸ்பிரிங் ஒடிந்த மோட்டார் பஸ்ஸில் பிரயாணம் செய்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அவருக்கு நமது மனமார்ந்த அநுதாபம். அதிகச் சம்பளம் வாங்கும் ரோட்டு எஞ்ஜினியர்களை நமது ஏழை வாத்தியார் வெளு வெளு என்று வெளுத்துக் கட்டிவிடுகிறார்! மேற்படி இலாகா சம்பந்தப்பட்ட மந்திரிமார்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம். அதுபோலவே, ஆரம்ப ஆசிரியர் சம்மேளனம் தீர ஆலோசனை செய்து வேலைநிறுத்த யோசனையைத் தள்ளி வைத்திருப்பதை நமது ஏழை வாத்தியார் கவனிக்கக் கோருகிறோம். —ஆசிரியர்.]



குளிர்ச்சியை எவ்விதமடைவது

டாடா ஓ டி கொலோன் விரைவாக ஆடவர்களின் வாசனை திரவியங்களில் ஒரு முக்கியப் பொருளாக ஆகி வருகிறது. அதை கீழே குறிக்கப்பட்ட முறைகளில் உபயோகியுங்கள். ஆனால் மிகுந்த உஷ்ண நாட்களில் நீங்கள் அதிக குளிர்ச்சியும் சுகமுமுணர்வீர்கள்!

1. காலையில் நீராடும்போது ஜலத்தில் சொற்ப சொட்டுகள் விட்டு ஸ்நானம் செய்யுங்கள். ஜலம் கம்மென்ற வாசனையுடன், உங்களுக்கு உற்சாகமூட்டுவதாக யிருக்கும்.



2. க்ஷவரத்திற்குப் பின்பும், உடையணியும் போதும் அதை உடம்பில் பூசிக்கொள்ளுங்கள். சிலுசிலுப்பான அதன் குளிர்ச்சி காலை வேலைகளை உற்சாகத்துடன் செய்ய உங்களைத் தூண்டும். கைக்குட்டையிலும் வாசனைக்காக ஒன்றிரண்டு சொட்டுத் தெளியுங்கள்.



3. ஆபீஸில் கஷ்டமான பயில்களுடனும் கணக்குகளுடனும் மன்றாடும்போது நெற்றியைக் குளிரச் செய்ய மேஜை மீது ஒரு பாட்டில் எப்போதும் வைத்திருங்கள்.




4. பிரயாணத்தின்போது டாடா ஓடிகொலோன் கையிலெடுத்துச் செல்லுங்கள். களைப்பையும் அலுப்பையும் போக்கி உங்களை சுத்தமாகவும் உற்சாகத்துடனுமிருக்கச் செய்ய அது உதவியாயிருக்கும்.



எப்பொழுதும் ஒரு நல்ல தோழன்

டாடா ஓ டி கொலோன்



தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

கூரைச் சேலைகளுக்கு

ராதா ஸில்க் எம்போரியம்

(பட்டு ஜவுளி வியாபாரம்)

மயிலாப்பூர்

போன்: 84188

★

பிராஞ்சு:

கும்பகோணம்



தவிர்க்க முடியாத விபத்து

மோட்டார் வண்டிச் சேதம். பிரயாணிகளுக்கு விபத்து. விபத்தில் சிக்கும் இதரர் நஷ்டம்.

இவையாவற்றிற்கும் ஈடு கட்டி பரிகாரமளிப்பது இன்ஷ்யூரென்ஸ் ஒன்றால்தான் முடியும். இன்றே பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களை பயன்படுத்திக்கொண்டு பலனடையுங்கள்.

பிருத்வி பரிபூரண பாதுகாப்பளிக்கிறது.

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிட்டெட்.

12, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 1.



பட்டாக்கத்தி ஆறுமுகம்

பரமசிவம் ஒழிந்த போதெல்லாம் திண்ணனூருக்கு வரத் தவறுவதில்லை. பரமசிவத்துக்கும் தங்கத்திற்கும் கலியாணமாவதற்கு இடையூறாக இருந்தது ஆறுமுகத்தின் சிறைமைதான். ஆகவே, அவன் குற்றவாளி யல்ல என்று நிரூபிக்க வேண்டிய வழிகளைப் பற்றிப் பரமசிவம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு வாரம் சென்றது. எப்படியோ ஸி. ஐ. டி. போலீசாருக்கு ஆறுமுகம் திண்ணனூரில் ஒளிந்து கொண்டிருப்பது தெரிந்து விட்டது. சப் இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், இருபது முப்பது போலீஸ் சேவகர்கள் எல்லோருமாக ஆயுத சமேதராகச் சென்று வெகு ஜாக்கிரதையுடன் ஆறுமுகம் இருந்த வீட்டை வளைத்துக் கொண்டனர். அந்தப் போக்கிரி ஆறுமுகம் அவர்களைக் கண்டதும் தானே கை நீட்டிச் சரணாகதி யடைந்து விட்டான். போலீசார் இந்தப் பெரிய வெற்றியினால் பூரிப் படைந்தனர். ஆனால் நம்பர் 126 பரமசிவத்துக்கு அது ஈனமாகவும் வெட்கமாகவுமிருந்தது. ஆறுமுகத்துக்குக் கிடைத்த அடியையும் குத்தையும் எண்ணி எண்ணி அவன் மனம் வருந்தினன். தங்கம் அப்பொழுது எந்நிலையில் இருப்பாளென்பதை நினைத்தபோது அவனுக்கு நடுக்க முண்டாயிற்று. அவனால் சற்று நேரம் கூட நிலையாக நிற்க முடியவில்லை. கடுமையான வெய்யிலில் திண்ணனூரை நோக்கிப் பதட்டத்தோடு நடந்தான்.

வீட்டின் கதவு திறந்துதானிருந்தது! மன உதறலோடு அவசர அவசரமாக உள்ளே நுழைந்தான். அங்கிருந்த நிலையைக் கண்டதும் அப்படியே மனம் குழம்பி நின்று விட்டான். தங்கம் தரையில் குப்புறப் படுத்து விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். அந்தக் கிழவி திடீரென்று தாழ்வாரத்தில் ஒரு போலீஸ்காரன் வந்து நிற்பதைக் கண்டதும் திகைப்பும் பயமும் கொண்டாள்.

பரமசிவம் சற்று சமீபமாக நெருங்கி, "தங்கம்!" என்றான். எவ்விதப் பதிலுமில்லை. கிழவி ஏதோ ஒரு பெரிய ஆபத்திலிருந்து தான் மெதுவாகத் தப்பித்துக் கொள்ள எண்ணியவள்போல் எழுந்து வெளியே சென்றாள். பரமசிவம் தரையில் மண்டியிட்டு உட்கார்ந்து, "தங்கம்!" என்று கூப்பிட்டான். மறுபடியும் அவள் புரண்டு தலையைத் தூக்கிப் பார்த்தாள். அழுது அழுது சோர்ந்திருந்த அவள் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. "போங்க! போதும், உங்க உறவு! இனிமே இந்த

கி.ரா.கோபாலன்

வீட்டிலே காவடி எடுத்து வைக்காதீங்க!" என்றாள். அவளுடைய வார்த்தை ஒவ்வொன்றும் சுடுவது போலிருந்தது.

தங்கம் தன்னைக் கண்டதும் இப்படிப் பேசுவாளென்று பரமசிவம் நினைக்கவில்லை. அவளுக்குத் தன்மீது இவ்வளவு வெறுப்பு ஏற்படக் காரணமென்னவென்று புரியாது திகைத்தான். அவள் ஏதோ தன்னைப் பற்றித் தவறாக எண்ணியிருக்கிறாள், சந்தேகம் கொண்டிருக்கிறாள் என்று எண்ணினான். ஆகவே, அவன் அவளுடைய தவறைப் போக்கும் அடிப்போடு, "தங்கம்! இதோ பாரு......!" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

தங்கத்துக்கு அப்பொழுது அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கக் கூடிய அவ்வளவு பொறுமையில்லை. "போதும் போதும், இந்தப் போலீசுக்காரங்க நேசம்! இவங்களையெல்லாம் நம்பவே கூடாது! ஒரு பொம்பிளே கிட்டே பேசி மயக்கி அநியாயமா ஒரு குடியைக் கெடுத்துட்டாங்களே! அண்ணன் பாட்டுக்குப் பயந்து ஒடுங்கி வீட்டோடே அடைஞ்சுக் கிடந்தது! பாவி, நான்தான் அதுக்கு ஒரு வினையா வந்தேன்!" என்றாள்.

அவள் நெஞ்சிலிருந்து மேலும் வார்த்தைகள் வெளிவரவில்லை. அழுகையும் குமுறலுந்தான் பீறிட்டுக்கொண்டு வந்தன. கண்கள் இரண்டையும் கைகளினால் பொத்திக் கொண்டு குப்புறப் படுத்துக் கொண்டாள்.

"தங்கம்! என்னைப் பாரு! என்னைக்கூட நீ நம்பமாட்டியா? கடவுளறிய நான் ஒரு பாவமும் செய்யவில்லை. எல்லாம் எப்படியோ ரகசியமாகவே நடந்திருக்குது. நான் என்ன செய்யட்டும்? எனக்கு இந்தப் போலீசு வேலையே பிடிக்கல்லே, வர வர ......" என்று இழுத்துக் கொண்டே, அவன் மெதுவாக அவளுடைய தோளைத் தொட்டுத் தூக்கினான்.

தங்கம் சட்டென்று எழுந்து உட்கார்ந்து அவனுடைய முகத்தை உற்று நோக்கினாள். அவனுடைய முகத்தில் பிரதிபலித்த குற்றமற்ற தன்மையும், கெஞ்சுதலும் அவளுடைய சந்தேகத்தையும் கோபத்தையும் அடியோடு மாற்றி விட்டன. "அப்படின்னா உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?" என்றாள் படபடப்போடு.

"கொஞ்சங்கூடத் தெரியாது, தங்கம்! இன்னும் என்மேலே உனக்கு நம்பிக்கை விழவில்லையா?"

தங்கம் ஒரு பெருமூச்சு விட்டாள். பரமசிவத்தின் மீது கொண்ட நம்பிக்கை அநாதையாக விடப்பட்ட அவளுக்குச் சிறிது ஆறுதலையளித்தது. இருந்தாலும் சகோதரனைப் பிரிந்ததனால் ஏற்பட்ட துக்கம் மறையவில்லை. "அப்படின்னா இனிமே அண்ணாச்சியை விடமாட்டாங்களா? அவரை என்ன செய்வாங்க, அவரைக் காப்பாத்த இனிமே ஒரு வழியும் இல்லையா?" என்றாள்.

பரமசிவம் சிறிது நேரம் யோசித்தான். "ஹூம்...ஒரு வழி இருக்குது ... ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையாச் செய்யணும். இப்போ உங்க அண்ணாச்சி சப் ஜெயில்லே எங்க காவலிலேதானே இருக்கு? அதை எப்படியாச்சும் தப்பிச்சு ஓடும்படியா செய்துடணும். அப்புறம் போலீசு கையிலே அகப்படாமே எங்காச்சும் பதுங்கியிருக்கிற சாமர்த்தியம் அவர் பொறுப்பு. காலம் இப்படியேவா இருக்கப் போவுது! இந்தக் கலவரமெல்லாம் கொஞ்சம் அடங்கினப்புறம் வெளியே தலை காட்டினா குத்தமில்லே!"

"அப்படிச் செய்யலாமா? அப்படிச் செய்தா உங்களை ..."

"என்னை என்ன செய்யறது? என் மேலே ஒருத்தருக்கும் சந்தேகம் விழாது. என்னைப் போலீசுலேயே மகா சாது—ஒண்ணும் தெரியாத நல்ல பிள்ளைன்னு முடிவு கட்டியிருக்காங்க!"

"இதோ பாருங்க, இதிலே உங்களுக்கு ஏதாச்சும் ஆபத்து வருமுன்னா நீங்க ஒண்ணும் செய்யாதீங்க! எங்க அண்ணாச்சிக்கு அவ்வளவு சமத்துப் போதாது. ரொம்ப பயந்த சுபாவம்—நீங்க ஏதாச்சும் சொல்லுவீங்க; அதுக்கு நேர்மாறா அது ஏதாச்சும் செய்து வைக்கும்! தான் அகப்பட்டுக்கிட்டதுமன்னியிலே உங்களையும் ஏதாவது சிக்க வைச்சுடப் போகுது! அப்படி ஏதாச்சும் நடந்துட்டா அப்புறம் எனக்கு இங்கே நாதியேயில்லை. அப்புறம் நான்......"

இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது அவள் குரல் தளர்ந்து குழறியது. கண்களில் கண்ணீர் தேங்கித் தளும்பியது.

"நீ ஒண்ணும் கவலைப்படாதே! தைரியமாயிரு! அதையெல்லாம் நான் பார்த்துக்கிறேன். ஆனால் இந்த ரகசியத்தைத் தட்டுக் கெட்டுக்கூட ஒருத்தருகிட்டேயும் சொல்லிப்பிடாதே!" என்றான் பரமசிவம்.

"நான் யாருகிட்டே போய் இதைச் சொல்லப் போறேன்? இதோ பாருங்க, நீங்க எதையும் நல்லா யோசிச்சுக்கிட்டுச்



செய்யுங்க; அண்ணனைப் பிடிச்ச வினை அதன் தலையெழுத்தோடு போகட்டும். நீங்க அதைக் காப்பாத்தி விடறேன்னு சொல்லி அகப்பட்டுக்கிடாதீங்க!" என்று சொல்லியபடி தங்கம் அவனுடைய முகத்தைப்பார்த்தாள்.

அப்பொழுது அவன் முகத்தில் தோன்றிய பாவம், அவளது மனதில் பொங்கும் அளவற்ற நன்றியறிதலின் ஜாடையோ, அல்லது பரமசிவத்தின் மேல் கொண்ட அன்பின் ஆர்வத்தினால்தான் எழுந்ததோ?

ஆறுமுகம் போலீசாரால் பிடிக்கப்பட்டு மூன்று நாட்களாகி விட்டன. விசாரணைக்கு ஒரு வாரம் இருந்தது.

திடீரென்று ஒரு கலக்கம்! போலீசாரின் வெற்றி நீடித்திருக்கவில்லை. இவ்வளவு நாட்கள் சிரமப்பட்டு அதி சாமர்த்தியத்துடன் நான்கு பக்கமும் கண்ணி வைத்துப் பிடிப்பதுபோல் சுற்றிச் சூழ்ந்து நின்று கைது செய்யப்பட்ட 'பட்டாக் கத்தி ஆறுமுகம்' சப் ஜெயிலிலிருந்து எப்படியோ தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டான்! எப்படித் தப்பினான்? ஆறுமுகம் சாதாரணமான ஆசாமியா? அவனுக்குச் சிறையிலிருந்து தப்பிச் செல்வது பெரிய காரியமா? இதற்குக் காரணம் போலீசாரின் அஜாக்கிரதைதான் என்று மேலதிகாரிகளுக்கு நன்கு விளங்கி விட்டது. கடுமையான உத்தரவுகளெல்லாம் பிறப்பிக்கப் பட்டன.

பத்துப் பன்னிரண்டு நாட்கள் ஓடின. பரமசிவம் ரகசியமாக ஒருவருக்கும் தெரியாமல் ஆறுமுகத்தைத் தப்பி ஓடச் செய்ததில் திருப்தி யடைந்திருந்தான். தங்கத்துக்கு ஏனோ மன நிம்மதி யில்லை. அவள் மனதில் ஒருவிதமான திகில் இருந்து கொண்டே யிருந்தது. கணத்திற்குக் கணம் அவள் ஏதோ ஆபத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். பரமசிவம் வேறொருவரும் தன்பேரில் சந்தேகம் கொள்ளாதபடியெல்லாம் நடந்து வந்தான்.

ஒரு நாள் இரவு மணி ஒன்பதிருக்கும். வாசற் கதவை யாரோ தட்டுவதைக் கேட்டுத் தங்கம் வந்து திறந்தாள்.

"யார் அது?"

"நான் தான்!"

பரமசிவத்தின் குரல்! அவன் வாசற்படியில் அதிக நேரம் நிற்கவில்லை. சட்டென்று வீட்டிற்குள் நுழைந்து தலையில் மூக்காடிட்டிருந்த துண்டை எடுத்துவிட்டு, "தங்கம்! கதவைச் சாத்திட்டு உள்ளே வா!" என்றான் பதட்டத்துடன்.

அவன் குரலில் ஒரு வேகமும் ஆத்திரமும் தொனித்தன. தங்கம் ஆச்சரியமும் பயமும் மிஞ்ச நடுங்கிக்கொண்டே கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தாள். பரமசிவம் தலை குனிந்தபடியே தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தான். மங்கிய விளக்கைத் தூண்டி விட்டு விட்டுத் தங்கம் அவன் முகத்தைப் பார்த்தபோது அவள் பீதி அதிகரித்தது. ஏனெனில், அவனுடைய முகத்தில் அளவற்ற சோகமும் பயமும் குடிகொண்டிருந்தன.

"ஏன், என்ன நடந்தது?" என்று அவன் தோளைப் பிடித்து உலுக்கியபடி கேட்டாள் தங்கம்.

அவன் ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக் கொண்டே, "நாளைக் காலைக்குள்ளே இந்தப் பக்கத்திலே நான் ஒருத்தர் கண்ணிலேயும் படாமல் எங்காவது ஓடணும்! இல்லாட்டி ஆபத்துத்தான்! தங்கம் நீயும் என்னோடே வரியா?" என்றான்.

"என்ன, அப்படி நடந்திடுச்சு? எனக்குப் பயமாயிருக்குதே! சொல்லுங்க!"

"என்ன நடந்திருக்கும்? நீதான் யோசனை பண்ணிப் பாரேன். உங்க அண்ணன் தானும் அகப்பட்டுக்கிட்டது மன்னியிலே என்னையும் காட்டிக் கொடுத்துட்டான்! என்னைப் பிடிக்கப் போலீசிலே வாரண்டு கிளப்பியிருக்குதாம்......தங்கம், நீ என்னோடே வரியா? இப்பவே எங்காச்சும் ஓடிப் போயிடுவோம். போலீசிலே இந்த வீட்டைக் கட்டாயம் குறி வைச்சிருப்பாங்க...!" என்றான் பரமசிவம் துடிப்புடன்.

இதைக் கேட்டதும் தங்கத்தின் இருதயமே நின்றுவிடும் போலிருந்தது. அவனுடைய கைகளைப் பிடித்திருந்த அவளுடைய கைகள் 'வெட வெட' வென்று நடுங்கின. "பாவி! பயித்தியக்காரன்! எனக்கு அப்பவே தெரியும். அந்த இரண்டுங் கெட்டானை நம்பி அப்படி ஒரு காரியம் செய்திங்களே!" என்றாள் சோகத்தின் நிறைவோடு.

"சரி நடந்தது நடந்துபோச்சு! இப்போ இங்கே நிக்க நிக்க நமக்கு ஆபத்துதான்! நீ என்னோட வரியா, வரலையா? சீக்கிரம் சொல்லு!" என்றான் பரமசிவம்.

அப்பொழுது பரமசிவத்தினால் ஒரு நிலையாக நிற்க முடியவில்லை. அவனுடைய மிரண்ட பார்வை வினாடிக்கு வினாடி ஏதோ அபாயத்தை எதிர் நோக்குவதுபோலிருந்தது. அவனுடைய வார்த்தைகள் அழுத்தமானதாகவும், தங்கத்தைச் சோதிப்பது போலவும் இருந்தன.

"நான் உங்களோடே வராமே வேறே என்ன செய்யறது? உங்களுக்கு வர கஷ்ட நஷ்டம் எனக்கும்! இதோ கிளம்பி விட்டேன்......!"

அவள் வேகமாகத் தன்னுடைய புடவைகள் நகைகள் இவைகளையெல்லாம் தேடிச் சேகரித்து மூட்டை கட்டுவதில் கவனம் செலுத்தலானாள். பரமசிவம் மன நிம்மதியின்றி அப்படியும் இப்படியுமாக உலாவிக் கொண்டிருந்தான்.

வாசற்புறத்திலிருந்து யாரோ கதவைத் 'தட தட' வென்று தட்டும் சத்தம்! பரமசிவத்துக்கு எளிதில் விளங்கி விட்டது, வந்திருப்பவர்கள் போலீசார்தானென்று! மனதில் பயமும் பதட்டமும் எழுந்தாலும் தங்கத்தின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே, "போலீசெல்லாம் வந்திடுச்சு! வா! வா! இப்படியே கொல்லைப் பக்கமா போயிடுவோம்!" என்றான்.

அவளும் மூட்டையை ஒரு கையால் எடுத்து மார்பில் அணைத்துக் கொண்டு நடுக்கத்துடன் நடக்கலானாள்.

போலீசார் ஏமாந்து போய்விடவில்லை; கொல்லைப்புறத்தில் நின்று கொண்டிருந்த சுமார் பத்துப் பேர் வெகு சுலபமாகப் பிடித்து விட்டனர், பரமசிவத்தை!

பாவம், தங்கம் என்ன செய்வாள்? அலறினாள், துடித்தாள்!—அவளால் வேறு என்ன செய்ய முடியும்? தனிமையில் விடப்பட்டாள்.

விரானூர் கலவர வழக்கு ஒருவிதமாக விசாரிக்கப்பட்டு முடிவடைந்தது. நீதிபதி பட்டாக்கத்தி ஆறுமுகத்தை நிரபராதி என்று எண்ணினார். ஆனாலும் விசாரணையின் போக்கிலிருந்து அவனுக்கு இரண்டு வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தார். கலகத்தில் ஈடுபட்ட மற்றக் குற்றவாளி

களுக்கெல்லாம் தூக்குத் தண்டனை, தீவாந்திர சிக்ஷை முதலிய பல ரகமான தண்டனைகள் விதிக்கப்பட்டன. வீரனூர் கலவர வழக்கைத் தொடர்ந்து போலீஸ் பரமசிவத்தின் 'கைதி தப்பிச் செல்லு வதற்கு உடந்தையாக இருந்த' குற்றம் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப் பட்டது. ஆறு வருடக் கடுங்காவல்!—அவ னுக்கு இன்னும் கடுமையான தண்டனை விதிக்கப்படவேண்டியதாம். உத்தியோகத்தி லிருந்தபோதிருந்த ஒழுங்கு நடத்தைக் காகவும் மேலதிகாரிகளின் நன்மதிப் புக்குப் பாத்திரமானவனு யிருந்ததாலும் தண்டனை குறைக்கப்பட்டதாம்!

ஆறுமுகமும் பரமசிவமும் சிறை சென்று விட்டனர்—ஆனால் தங்கம்! அவள் என்ன வானாள்? என்ன செய்தாள்? அவள் எங்கு இருக்கிறாளோ? ஒரு வேளை தற்கொலை செய்து கொண்டிருப்பாளோ ......?

* * *

ரயில் எந்தெந்த ஸ்டேஷன்களில் நின்று நின்று போய்கொண்டிருந்ததோ?— கீழே உட்கார்ந்திருந்த பிரயாணிகள் எந்தெந்த விவகாரங்களைப் பற்றி யெல்லாம் பேசி முடிவு செய்துகொண் டிருந்தனரோ? நான் மட்டும் அந்தப் பேதைப் பெண் தங்கத்தைப் பற்றி ஒரு விதமான முடிவும் செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். இந்தப் பிரயாணிகள் 1942 ஆகஸ்டை ஞாபகப் படுத்தி, என் தூக்கத்தைக் கெடுத்து, என் மூளையையும் குழம்பும்படி ஏன் செய்யவேண் டும்? சந்தோஷமோ, துக்கமோ—எதற்கும் ஒரு முடிவு வேண்டாமா? புரண்டு புரண்டு படுத்தேன்; பலனில்லை. "தங்கம் என்ன கதியானாள்?...தங்கம் என்ன கதியானாள்?" என்று எண்ணி எண்ணி மண்டையை உடைத்துக் கொண்டேன். ஏதும் பய னில்லை. எனக்கு ஏற்பட்ட மனக் குழப்பத் தில் பித்துப் பிடித்துவிடும் போலிருந்தது. மெதுவாக எழுந்து ஒரு புறமாகச் சாய்ந்து அரை குறையாக உட்கார்ந்து வெற்றிலை போட ஆரம்பித்தேன்.

கீழேயிருந்த ஆசாமிகளில் ஒருவர் என் னைப் பார்த்து, "மணி என்ன, ஸார்?" என்று கேட்டார். அப்பொழுதுதான் எனக் கும் கடிகாரத்தைப் பார்க்க வேண்டு மென்று தோன்றியது. மணி 5-30. "பொழுது விடிந்து விட்டது. மணி ஐந்தரை, ஸார்!" என்று அவருக்குப் பதி லளித்து விட்டு, "இப்போது வரப்போகிற ஸ்டேஷன் எது?" என்று கேட்டேன்.

"ஆடுதுறை! நீங்க எந்த ஊருக்குப் போகிறீர்கள்?" என்றார் அவர்.

"தஞ்சாவூருக்கு!" என்று சொல்லி விட்டுச் சம்பாஷணையை அத்துடன் நிறுத்த எண்ணியவனாய், வேறெங்கேயோ பார்வை யைச் செலுத்தினேன். ஆனால் அந்தப் பேர்வழி என்னை லேசில் விடுவதாயில்லை. எனக்கு ஏதோ பெண் கொடுக்கப் போகிற வர் போல், குலம்—கோத்திரம் — உத்தி யோகம்— அந்தஸ்து இவைகளைப் பற்றி யெல்லாம் அலசி அலசிக் கேட்டுக் கொண்டு வந்தார். நானும் அவருக்கு ஸ்வாரஸ்ய மில்லாமல் ஏதோ பதிலளித் துக் கொண்டு வந்தேன்.

ஏதோவொரு ஸ்டேஷன்; வண்டி நின்றதும் முண்டி முரண்டிக் கொண்டு சுமார் பத்துப்பேர்களுக்கு மேலிருக்கும்— வண்டியில் ஏறினார்கள்.

"கல்யாணம் போலிருக்கிறது!" என் றார் கீழே உட்கார்ந்திருந்த பிரயாணி களில் ஒருவர்.

"ஆமாம், ஸ்வாமி சன்னிதானத்திலே நடந்திருக்கும்!" என்றார் மற்றொருவர்.

என்னுடைய பார்வையும் அக் கல்யாணக் கூட்டத்தினர்மீது விழுந்தது. நான் திடுக்கிட்டேன். என்னை யறியாமல் "பரமசிவம்!" என்று கத்திவிட்டேன். அவனேதான், போலீஸ் 126 பரம சிவமேதான்! அவன்தான் மணமகன் என் பதற்கு அறிகுறியாகப் புது வேஷ்டி— மஞ்சள் கயிறு முதலிய எந்த விதமான மங்கள சூசகமும் குறையாமல் நின்று கொண்டிருந்தான்! அவன் என்னைக் கண்டதும் ஆச்சரி யத்துடன், "ஐயாவா! அடடே! என்னங்க!' என்றான்.

"பரமசிவம்! நீ எப்போ ......'

என்னுடைய வார்த்தைகள் முடிய



வில்லே. அவனே முந்திக் கொண்டு பதில் சொன்னுன் :

"நான் வெளியே வந்து ரெண்டு மாச மாயிடுச்சுங்களே!"

"கல்யாணம்......?"

"ஆமாங்க, இன்னிக்கி விடியற் காலே முகூர்த்தத்திலேங்க! — சாமிமலே சன்னிதானத்திலேதான் நடந்திச்சு!"

"பெண்ணு......?"

"அதே பொண்ணுதாங்க—வேறே ஒரு பெண்ணே நான் மனசாலும் நினைப்பேனுங்களா? அதுவுந்தான் நினைக்குங்களா? நான் உள்ளற இருக்கும்போ தெல்லாம் அது என் தாயாரோட இருந்துச்சு!"

என்னுடைய பார்வை அங்கு கூடி யிருந்த பெண்களின் பக்கம் திரும்பியது. அவர்களிடையே தங்கம் மண மகளின் கோலத்தில் புதுப் புடவை அலங்காராதி களுடன் நின்று கொண்டிருந்தாள்.

"அது சரி; உன் மச்சினன் பட்டாக் கத்தி......"

"அவரா! அவரைப் பார்த்துப் பயந்திடா தீங்க! இதோ, நிக்கிறாரு பாருங்க!" என்று சொல்லிவிட்டு, "மச்சான், இப்படி வா!" என்று அவன் கையைப் பிடித்து இழுத்து என் எதிரில் நிறுத்தினுன் பரமசிவம்.

ஆறுமுகம் அசட்டுச் சிரிப்புடன் கையைப் பிசைந்து கொண்டு என் எதிரில் நின்ருன்.

வண்டி தஞ்சையை நெருங்கிக் கொண் டிருந்தது. "ஹூம்......இப்போ உனக்கு என்ன உத்தியோகம்?" என்றேன்.

"எங்க உத்தியோகத்துக்கு மிஞ்சின உத்தியோகம் எதுங்க? ஏதோ இருக்கிற நில நீச்சை வைச்சுக்கிட்டு, உழுது பயிரிட்டுச் சாப்பிட்டுக்கிட்டு, சுகமா காலேக் கடத்திட முடியாதுங்களா?"

"சரிதான்! அதுதான் உனக்குத் தோது!" என்றேன்.

அதற்குள் வண்டி தஞ்சை ஸ்டேஷனே அடைந்தது. நான் இறங்குவதற்குத் தயாரா னேன். "அது இருக்கட்டும். நீங்க இப்போ அதே உத்தியோகத்திலேதானே......" என்று இழுத்தான் பரமசிவம்.

"ஆமாம், அந்த ஸி. ஐ. டி. டிபார்ட் மெண்டுதான் நமக்குத் தோது! — அதை விட்டா வேறு வழியில்லே. நான் போய் வரேன். நீ எங்கேயாவது எப்படியாவது சௌக்கியமாயிருந்தால் சரிதான்!" என்று சொல்லிக் கொண்டே நான் வண்டியை விட்டுக் கீழே இறங்கினேன்.

* * * * * * * தோற்றுப் போனுள்! * * * * * * *

தற்போது அரேபியாவின் மன்னராக இருக்கும் இபின் சாஊத் புத்தி நுட்பமும் மிக்கவர். ஒரு முறை ஓர் அராபியப் பெண் அவரிடம் சென்று, "மாட்சிமை தங்கிய அரசர் பெரும, எனக்கு ஒரு பெரும் துக்கம் நிகழ்ந்திருக்கிறது. நேற்று மாலே என்னுடைய கணவர் ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தபோது, தங்கள் சேவகர்களில் ஒருவன் அந்த மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்தான். அதனுல் என் கணவர் செத்துப் போனுர். தாங்கள் எனக்கு நஷ்ட ஈடு அளிக்க வேண்டும்!" என்று கெஞ்சி நின்ருள்.

மன்னர் அவளுடைய பரிதாப நிலைமைக்கு இரங்கி, "உனக்கு எவ்வளவு பணம் நஷ்ட ஈடாக வேண்டும் அம்மா, கேள்!" என்ருர்.

"பணமா? பணம் எனக்கு எதற்கு? செத்துப் போன உயிருக்குப் பதிலாக இன்னெரு உயிரை எனக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டும். என் கணவனேக் கொன்றவனுக்குத் தாங்கள் கொலேத் தண்டனே கொடுக்க வேண்டும்!" என்ருள்.

அரசர் எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவே யில்லே. கடைசியில் இபின் சாஊத், "நல்லது, அப்படியே செய்கிறேன். ஆனல், அந்தச் சேவகனுக்கு எந்த மாதிரியான கொலேத் தண்டனே கொடுப்பது என்பதை நானே முடிவு செய்ய வேண்டும். சேவகன் அந்த மரத்தடியில் நிற்கட்டும். நீ மரத்தின் மேலே யிருந்து அவன்மேல் குதி. அவன் செத்துப் போகட்டும்! என்ன, ஒப்புக் கொள்ளு கிருயா?" என்ருர்.

அந்தப் பெண் திகைத்துப் போனுள். இபின் சாஊத் அந்த மாதிரியாக முடிவு செய்வாரென்று அவள் நினைக்கவே யில்லே. கடைசியில், அகப்பட்ட வரை லாபம் என்று நினைத்து, நஷ்ட ஈடாகப் பணத்தை மாத்திரம் வாங்கிக்கொண்டு போனுள்.

* *

K. S. E.

கல்யாண காலங்களுக்கு
அசல் கொள்ளேகாலம்
ஸ்பெஷல் டிசைன்
பட்டுப் புடவைகள்
கிடைக்குமிடம்

*

காத்தாயி
ஸில்க்
எம்போரியம்

கீழமாட வீதி

மயிலாப்பூர்

N. B.—அடையார் பார்டர்
பட்டுப் புடவைகள்
ஓர் ஸ்பெஷல் ரகம்.



T. V. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ், லிமிடெட்டின், மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி

சரோஜாவுக்கும்

செம்பொடை ஸ்ரீ எஸ். ஏ. நாராயண அய்யங்கார் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி

ரவீந்திரனுக்கும்

சென்ற ஜூன் மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மதுரை, சொக்கி குளத்தில் விவாகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

திருமண தினத்தன்றும்
வரவேற்பன்றும்

ஸ்ரீமதி

எம். எஸ். சுப்புலக்ஷ்மியின்

சங்கீதக் கச்சேரி நடைபெற்றது

இந்தியாவின் நானாபுறங்களிலிருந்தும் நண்பர்களும், உறவினர்களும் திரளாக திருமணத்திற்கு விஜயம் செய்தார்கள். பல நண்பர்களிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் தம்பதிகளுக்கு வழங்கப்பட்டது.



சிருஷ்டி விநோதம்

என். என்.

மானிட தேக சாஸ்திரத்தைப் பற்றி ஒரு பிரபல டாக்டர் எழுதி யிருந்த புத்தகத்தை நேற்றுப் படித்தேன். அதைப் படித்ததிலிருந்து என் மனம் வெகு தீவிரமாக யோசனை செய்யத் தொடங்கியது.

பிரம்மன் மனிதனுக்கு எதற்காக இரண்டு கண்களைப் படைக்க வேண்டும் என்பதைப் பற்றி வெகு நேரம் சிந்தனை செய்தேன். காரணம் எனக்குப் புலப்படவில்லை. ஒரு கண்ணே போதுமானபொழுது இரண்டு கண்களின் அவசியம் எனக்கு விளங்கவில்லை. நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லையென்றால் சற்று நிதானமாகக் கேளுங்கள்:

எங்கே, நீங்கள் உங்கள் வலது கண்ணால் ஒரு வஸ்துவையும், இடது கண்ணால் இன்னொரு வஸ்துவையும் பார்க்க முடியுமா என்று பரீட்சை செய்யுங்கள். முடியவில்லை அல்லவா?

இரண்டு கண்களும் சேர்ந்தாற் போல் ஒரே வஸ்துவை—ஒரே இடத்தைத்தான் பார்க்குமே தவிர, வெவ்வேறு இடங்களைப் பார்க்க முடியாது என்ற உண்மை தெரிய வரும்!

அப்படி யிருக்க, இரண்டு கண்கள் எதற்காகப் படைக்கப்பட்டன? அழகுக்காகவா—வேறு காரணம் ஏதாவது இருக்கக் கூடும் என்று எனக்குத் தோன்றவில்லை.

கண்ணுக்கு அடுத்தாற்போல் என் கவனத்தைக் கவர்ந்தது மூக்குத்தான். மூக்கை எதற்காகப் பிரம்மன் படைத்தான் என்பதை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. மனிதனுக்கு மூக்கு அவசியந்தானா? அவசியமென்றால், என்ன உபயோகத்திற்காகப் படைக்கப்பட்டிருக்கிறது? எனக்குத் தெரிந்த வரையில், மூக்கினால் பிரதி கூலங்கள்தான் அதிகம் ஏற்படுகின்றன!

மூக்கின் மூலமாகத்தான் பற்பல கிருமிகள் நமது சுவாசகோசத்திற்குள் புகுந்து பல கொடிய வியாதிகளை உண்டாக்குகின்றன. மூக்கு இல்லாவிட்டால் அந்த விஷக் கிருமிகள் எப்படி உள்ளே புக முடியும் என்று கேட்கிறேன்.

மூக்கு இருப்பதனால் நமக்கு ஏற்படும் தொந்தரவுகள் எவ்வளவு இருக்கின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. மழை காலத்தில் மூக்குகள் படுத்தும் பாடு சொல்லத் தரமன்று. திடீர் திடீரென்று அதிர் வேட்டுக்களைப்போல் தும்மல்கள் கிளம்புகின்றன. இதனால் கணக்கற்ற கைக்குட்டைகள் வீணாகின்றன என்பது மாத்திரமல்ல: டிராமிலும், பஸ்ஸிலும், சமீபத்தில் உட்கார்ந்திருப்பவர்களின் கோபத்திற்கும் ஆளாகவேண்டி யிருக்கிறதல்லவா?

மூக்குகளில்தான் எத்தனை வகைகள்! உதாரணமாக, சப்பை மூக்கு, கிளி மூக்கு, குடமிளகாய் மூக்கு, கருடன் மூக்கு, உருண்டை மூக்கு—இப்படி எத்தனை எத்தனையோ!

கேலி செய்ய வேண்டுமானால், மூக்கு வெகு சுலபமாக நம்முடைய உதவிக்கு வருகிறது. 'அவன் மூக்கைப் பார், கோழி மாதிரி!' என்று பக்கத்திலுள்ளவர் சிரிக்குமாறு பரிகாசம் செய்கிறோம்.

எனது நண்பன் ஒருவனுக்குச் சற்றுப் பிரம்மாண்டமான மூக்கு உண்டு. அவனுடைய முகத்தில் கிட்டத் தட்ட பாதி விஸ்தீரணத்தை மூக்கே அடைத்துக் கொண்டிருக்கும். அவனைப் பார்க்கும்போதெல்லாம் அவனுடைய நண்பர்களில் சிலர், "என்னடா, உன் மூக்கு சௌக்கியமா?" என்றுதான் முதலில் வினவுவது வழக்கம்! அப்பொழுது அவனுக்கு வரும் கோபத்தைப் பார்க்க வேண்டுமே!

நீங்கள் ஹாஸ்யப் பத்திரிகைகளைப் படிப்பவர்களாயிருந்தால், ஒரு விஷயத்தைக் கவனித்திருக்கலாம். கிண்டல் சித்திரங்கள் வரையும் சித்திரக்காரர்கள் மூக்கைச் சற்றுப் பெரிதாகவே போடுவார்கள்! மூக்கின்மேல் அவர்களுக்குத் துவேஷம் ஏதேனும் இருக்கவேண்டும். இல்லையேல் மூக்குக்கு ஏன் இம்மாதிரி அனாவசியமாகப் பிராதான்யம் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன்!

மூக்கு இல்லாவிட்டால், முதலில் நமக்கு எவ்வளவு லாபம் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்:

நம்முடைய மனைவிமார் வைர பேசரி வாங்கித் தரச் சொல்ல முடியாது; புலாக்கு கேட்க முடியாது!

மூக்கு இல்லாவிட்டால், மூக்குக் கண்ணாடியை எப்படி அணிந்து கொள்வது என்று 'மூக்குக் கண்ணாடி'ப் பேர்வழிகள் கேட்கலாம். நியாயமான கேள்விதான். ஆனால், இது அவ்வளவு கடினமான விஷயமல்ல. அணுகுண்டைக் கண்டு பிடித்த மனிதனுக்கு, மூக்கு இல்லாமல் மூக்குக் கண்ணாடியை அணிந்து கொள்வதற்கு ஒரு சாதனத்தைக் கண்டு பிடிப்பதுதானா பிரமாத காரியம்?

பொடி போடுபவர்கள் கேட்கலாம், "மூக்கு இல்லாவிட்டால் நாங்கள் பொடியை எங்கே செலுத்துவது?" என்று. உண்மையிலேயே இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை. பொடி போடுபவர்களுக்கு எனது மனமார்ந்த அனுதாபத்தைத்தான் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!

டாக்டர்களின் பாடு சற்றுக் கஷ்டமாகத்தான் இருக்கும், மூக்கு இல்லை என்றால்! ஏனெனில், மூக்கு இருந்தால்தானே ஜலதோஷமும், இன்னும் அதைத் தொடர்ந்தாற்போல் பற்பல வியாதிகளும் தோன்றமுடியும்? மூக்கே இல்லாவிட்டால் இந்த வியாதிகள் உண்டாகாதல்லவா? ஆகவே, டாக்டர்களின் வரும்படி பாதிக்கப்படுமல்லவா?

மூக்கு இல்லாவிட்டால் இப்பொழுது செய்வது போல் சில பாடகர்கள் மூக்கினால் பாடி, சபையோரை ஏமாற்ற முடியாது! அவர்களுடைய சுயக் குரலைக் காண்பித்துத்தான் ஆக வேண்டும்!

எனக்கென்னவோ மானிட வர்க்கத்துக்கு மூக்கு அவசியம் என்று தோன்றவில்லை; அனாவசியம் என்றே தோன்றுகிறது. ஆகவே, கூடிய சீக்கிரத்தில் மானிட வர்க்கம் மூக்கை ஒழிப்பதற்கு வழி தேடும் என்று நம்புகிறேன் — அட சட்! யாரோ, அபசகுனம்போல் தும்முகிறார்களே!

*** ஒரு கடிதம் ***

அன்புள்ள வாத்தியாரம்மாளுக்கு,

நேற்று நீங்கள் என் மகள் ஸரோஜினிக்கு, "ஒரு கோயிலை ஒரு தரம் சுற்றி வர நாலரை நிமிஷம் ஆகிறதென்றால், முப்பத்தேழு தடவை சுற்றி வர எத்தனை நிமிஷங்கள் ஆகும்?" என்று ஒரு வீட்டுக் கணக்கு கொடுத்திருந்தீர்களல்லவா? அதை ஸரோஜினிக்குப் போடத் தெரியவில்லை. அவள் தன் அப்பாவைக் கேட்டாள். அவர், கையில் கடிகாரத்தை வைத்துக் கொண்டு ஒரு தரம் சுற்றி வர நாலரை நிமிஷம் பிடிக்கும் ஒரு கோயிலை முப்பத்தேழு தடவை சுற்றி வந்தார். கடைசியில் கால் வலி, முதுகு வலி என்று சொல்லிக்கொண்டு, படுத்த படுக்கையாகி விட்டார்! அவருடைய களைப்பு, வலி எல்லாம் நீங்க ஒரு வாரமாவது ஆகும் என்று எண்ணுகிறேன். ஆகவே, தயவு செய்து இனி மேல் ஸரோஜினிக்கு வீட்டுக் கணக்குக் கொடுக்க வேண்டாம் என்று தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்!

இப்படிக்கு,

ஸரோஜினியின் தாயார்.

* * * * * * * * *



கழுதை ராஜா

ராஜீ

அந்தக் காட்டிலிருந்த எல்லாக் கழுதைகளையும் விட ஒரு கழுதை மட்டும் பார்ப்பதற்குச் சற்று அழகாக இருந்தது. அதனால் அக் காட்டிலிருந்த மிருகங்கள் யாவும் அந்தக் கழுதையை 'வெள்ளி மூக்குச் சிங்கம்' என்று அழைத்து வந்தன.


ஒரு நாள் மாலை 'வெள்ளி மூக்குச் சிங்கம்' தன் மனைவியுடனும், இரு குழந்தைகளுடனும் காட்டில் உலாவச் சென்றது. அப்பொழுது ஒரு நரி, மரத்தடியில் விபூதி ருத்திராக்ஷதாரியாக உட்கார்ந்திருந்தது. அந்த நரி உட்கார்ந்திருந்த இடத்தில், "இங்கே ஜோஸியம் சொல்லப்படும்" என்று ஒரு விளம்பரம் காணப்பட்டது. வெள்ளி மூக்குச் சிங்கம் அதனிடம் ஒரு ரூபாயைத் தக்ஷிணையாகக் கொடுத்து, தன் கால் ரேகைகளைப் பார்த்து ஜோஸியம் சொல்லும்படி வேண்டிக் கொண்டது. நரி வெகு நேரம் கழுதையின் கால் ரேகைகளைப் பார்த்து விட்டு, "ஐயா, கழுதையாரே! உமக்குச் சீக்கிரமே நல்ல அதிர்ஷ்டம் வரப் போகிறது. உங்கள் ரேகைகளிலிருந்து நீங்கள் ஒரு நாளாவது இந்தக் காட்டுக்கு ராஜாவாக இருப்பீர்கள் என்று தெரிகிறது!" என்று சொல்லி வைத்தது.

வெள்ளி மூக்குச் சிங்கத்துக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. மேலும் ஒரு ரூபாயை எடுத்து நரியிடம் கொடுத்து விட்டுக் குதியாய்க் குதித்துக் கொண்டே சென்றது.

மறு நாள் வெள்ளி மூக்குச் சிங்கம் சிங்க ராஜாவின் அரண்மனையை நோக்கி நடந்தது. அரண்மனையின் தோட்டத்தை யடைந்ததும், அங்கிருந்த ஒரு மரத்தடியில் சற்று நின்று அது சிரம பரிகாரம் செய்து கொண்டது.

அப்பொழுது அரண்மனைத் தோட்டத்திற்குச் சிங்க ராஜா உலாவ வந்தது. வெள்ளி மூக்குக் கழுதையைப் பார்த்ததும் சிங்க ராஜாவுக்கு வந்த கோபத்துக்கு ஓர் அளவே யில்லை. "என் தோட்டத்தில் கழுதை வருவதா! இதோ பார், என்ன செய்கிறேன்!" என்று கழுதையின் பின் பக்கமாகப் பாய்ந்தது. கழுதை தன் மேல் பாய்ந்த சிங்க ராஜாவைக் கவனிக்கவில்லை. ஆனால் தன்னை யாரோ பின்புறமாக நெருங்கி வருவதை யறிந்ததும், அது வழக்கம் போல் தன் பின் கால்களால் எட்டி உதைத்தது! எதிர்பாராத இந்த உதையைப் பெற்ற சிங்க ராஜா, வலி தாங்காமல் 'ஓ'வென்று அலறிக் கொண்டு கீழே பொத்தென்று விழுந்தது. அவ்வளவுதான்; அது எழுந்திருக்கவே யில்லை!

"அடாடா! சிங்க ராஜாவை அல்லவா உதைத்து விட்டோம்? யாராவது பார்த்து விட்டால் நம் உயிருக்கே அல்லவா ஆபத்து வந்து விடும்!" என்று பயந்து போய், வெள்ளி மூக்குச் சிங்கம் அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடிக்கப் பார்த்தது.



அப்பொழுது மரத்தின் மேலிருந்த சில காகங்கள், "ஐயா, கழுதையாரே! மெச்சினோம், உங்கள் சாமர்த்தியத்தை! இந்தப் பொல்லாத சிங்க ராஜா

எப்பொழுது இந்தக் காட்டை விட்டுத் தொலையுமோ என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நல்ல வேளையாக நீங்கள் வந்து இந்தச் சிங்க ராஜாவை எதிர்த்து நின்று வெற்றி பெற்று விட்டீர்கள்! இனி நீங்கள் தான் எங்களுக்கெல்லாம் ராஜா!" என்று இரைந்தன.




இந்த இரைச்சலைக் கேட்டு எல்லா மிருகங்களும் கழுதை இருக்கும் இடத்திற்குக் கூட்டம் கூட்டமாக வந்தன. அடுத்த நிமிஷம் மேளவாத்தியம் முழங்கிற்று. 'வெள்ளிமூக்குச் சிங்க'த்தின் கழுத்தில் பல மலர் மாலைகள் வந்து விழுந்தன. கழுதைக்கு ஒன்றுமே புரியவில்லை.

அடுத்த நிமிஷம் "வெள்ளி மூக்குச் சிங்கத்துக்கு ஜே!" என்ற கோஷம் வானைப் பிளந்தது. எல்லா மிருகங்களும் சேர்ந்து அந்தக் கழுதையை அழைத்துக் கொண்டு போய், சிங்க ராஜா உட்கார்ந்திருந்த சிம்மாசனத்தில் உட்காரவைத்தன. "சிங்கம் உட்கார்ந்திருந்த இடத்தில் கழுதையா!" என்று சில மிருகங்கள் முணுமுணுத்ததை அவை பொருட்படுத்தவில்லை.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த கழுதையைத் திடீரென்று காணவில்லை. உடனே மந்திரி நரி மற்ற அரண்மனைச் சிப்பந்திகளுடன் கழுதை ராஜாவைத் தேட ஆரம்பித்தது. கடைசியில் அரண்மனை சம்பந்தமான பத்திரங்கள் வைக்கப்பட்டிருந்த அறையில் கழுதை ராஜா இருப்பதை மந்திரி நரி கண்டது. அதற்குள் அந்த அறையில் இருந்த தஸ்தாவேஜுகள் அத்தனையும் கழுதையின் வயிற்றுக்குள் போயே போய் விட்டது! "ஐயையோ! இதெல்லாம் முக்கியமான பத்திரங்கள் ஆயிற்றே!" என்று அடித்துக் கொண்டது நரி.

"என் பசிக்கு நான் என்ன செய்வது!" என்றது கழுதை.




இந்தச் சமயத்தில் வெள்ளி மூக்குச் சிங்கத்தைத் தேடிக் கொண்டு, அதன் மனைவியும் மக்களும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தன. வாயிலில் நின்று கொண்டிருந்த மிருகங்களுக்கு அவை வெள்ளி மூக்குச் சிங்கத்தின் மனைவி மக்களென்று தெரியவில்லை. ஆகவே, அவற்றை உள்ளேவிட மறுத்து விட்டன.

அவ்வளவுதான்; 'பே, பே!' என்று வெள்ளி மூக்குச் சிங்கத்தின் மனைவி கத்த ஆரம்பித்து விட்டது! அதனுடன் சேர்ந்து கொண்டு குட்டிக் கழுதைகளும் கத்த ஆரம்பித்து விட்டன!

இந்த அலறலைக் கேட்ட வெள்ளி மூக்குச் சிங்கம், உடனே சிம்மாசனத்தை விட்டுக் குதித்தது. 'பே, பே!' என்று தானும் கத்திக் கொண்டே நாலு கால் பாய்ச்சலில் ஓட்டமாய் ஓடிற்று!

நல்ல வேளையாக, அப்பொழுது மூர்ச்சை தெளிந்து எழுந்த சிங்க ராஜா, "எங்கே, அந்தக் கழுதை?" என்று கர்ஜனை செய்து கொண்டே அரண்மனைக்குள் வந்து, தன் சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்தது. உடனே "சிங்க ராஜாவுக்கு ஜே!" என்று எல்லா மிருகங்களும் கோஷமிட்டன. ஏனெனில், "பொல்லாத சிங்க ராஜாவாக இருந்தாலும் அந்த மட்டக் கழுதை ராஜாவைவிட எவ்வளவோ மேல்!" என்று அவை நினைத்தன.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அந்தக் காட்டில் வசிப்பதற்கு வெள்ளி மூக்குச் சிங்கத்துக்குப் பைத்தியமா, என்ன?



உணவுகளை எந்தெந்த அளவில் சாப்பிட வேண்டும் என்பது நமக்கும் தெரிந்ததுதான். புரோடீன், விட்டமின், உலோகச்சத்து, கொழுப்பு, கார்போஹைட்ரேட்ஸ் முதலியன அவசியமான சத்துக்களாகும். ஆனால் நாம் தினசரி சாப்பிடும் உணவு எப்படி இருக்கின்றது?

போஷிப்பை தரும் விட்டமின்களும் சில உப்பு வகைகளும் உணவில் குறைந்துதான் இருக்கும். இவைகளை பல விட்டமின் சத்துள்ள மெக்லெக் வில்லைகளைச் சாப்பிட்டு சரி செய்யலாம்.

மெக்லெக் வில்லைகள் சத்துப் பொருள்கள் நிறைந்துள்ளதால் இந்த குறைகளை நீக்கிவிடுகிறது. ஆகையால் நீங்கள் எந்த விதமான உணவுகளைச் சாப்பிட்டாலும் மெக்லெக் உணவுசத்துக்களை சாப்பிட்டு குறைகளை நிவர்த்திக்கலாம்.

மெக்லெக்
நியூட்ரிமெண்ட்ஸ்

உணவில்
குறையாய் உள்ள
உணவுச்சத்துக்களை
அளிப்பவை

விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதுங்கள்:

தி மெக்லெக் நியூட்ரிமெண்ட்ஸ் அண்ட் பார்மஸூடிகல்ஸ் லிமிடெட்

99-A. ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்

MNP. 44 Tamil.

கம்பர் தரும் காட்சி

181. தீர்த்துக்கொண்டேன், பழியை!

டி.கே.சி

"பர்ணசாலையில் சீதை இல்லை. அரக்கர்கள் என்ன மோசம் செய்தார்களோ!" என்று எண்ணும்போது ராமனது மனசு என்ன பாடு பட்டிருக்கும்!

இந்த நிலையில் ஏதோ சீதையைத் தேடுவதுபோல்த் தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்லுகிறான்.

தூரத்தில் இரத்தப் பெருக்கினிடையே ஜடாயுவின் உடலைக் காணுகிறான். அப்படியே ஓடிப்போய் அந்த உடலின் மேல் விழுகிறான்.

அப்படி விழுந்த ராமனுக்கு சுவாசமே நின்றுவிட்டது. உணர்ச்சியும் இல்லைதான். லக்ஷ்மணன் பார்த்தான். பக்கத்திலிருந்த அருவியிலிருந்து தண்ணீரைக் கையில் கொண்டுவந்து அண்ணன் முகத்தில்த் தெளித்தான்.

உயிர்த்தி லன்ஒரு
நாழிகை: உணர்விலன்
கோல் என்(று)
அயிர்த்த தம்பி,புக்(கு)
அங்கையின் எடுத்தனன்
அருவிப்
புயல்க்க லந்தநீர்
தெளித்தலும் புண்டரீ
கக் கண்
வியத்துப், பைப்பைய
அயர்வுதீர்ந்(து) இனையன
விளம் பும்.

[உயிர்த்திலன் ஒரு நாழிகை: ராமனுக்கு ஒரு நாழிகை நேரம் சுவாசமே இல்லை யென்று சொல்லும்படியாக இருந்தது — அவ்வளவு தளர்ச்சி; உணர்விலன் கோல் என்று தம்பி: இன்னும் உணர்வு வரவில்லையே என்று ஸ்ந்தேகங் கொண்ட லக்ஷ்மணன்; புக்கு அங்கையின் எடுத்தனன்: பக்கத்தில் விழுந்து கொண்டிருந்த அருவிக்குப் போய்த் தன் இரண்டு கைகளில் தண்ணீரை ஏந்திக் கொண்டு வந்து: அருவிப் புயல் கலந்த நீர் தெளித்தலும்: வெண் நுரை கலந்த அந்த அருவி நீரை முகத்தில் தெளித்ததும்; புண்டரீகக் கண் வியத்து: தாமரை போன்ற கண் திறந்து விரித்து: பைப்பைய அயர்வு தீர்ந்து: சிறிது சிறிதாக மயக்கமும் தீர்ந்து: இனையன விளம்பும்: இந்த விதமாக அலறினான் ராமன்.]

•.•

"தங்கள் தந்தையர்களைக் கொலை செய்த மக்களும் உலகத்திலுண்டா?"

சந்தம்

தானன தன்னன
தன்னன தன்னன

'தம்தா தையரைத்
தனயர் கொலைநேர்ந்தார்
முந்தாரே உள்ளார்!
முடிந்தான் முனைஒருவன்;
எந்தாய்,ஓ! எற்காக
நீயும் இறந்தனையே!
அந்தோ! வினையேன்
அருங்கூற்றம் ஆனேனே!'

[தம் தாதையரை: தங்கள் தந்தையரை; தனயர் கொலை நேர்ந்தார்: கொலை செய்தவர்களான பிள்ளைகள்; (தனயர்: பிள்ளைகள்) முந்தாரே உள்ளார்: முன்னமே யாராவது உண்டா — ஆனால் இப்போது பாருங்கள்; முடிந்தான் முனைபொருவன்: தானே காரணமாக முன்னொரு தந்தை தசரதன் இறந்தான்; எந்தாய் ஓ: என் அப்பனேயே ஜடாயுவே; எற்காக நீயும் இறந்தனையே: எனக்காக நீயும் இறந்தனையே: அந்தோ வினையேன்: அடடா, தீவினை வெள்ளம் பூர்வத்தில் செய்துள்ள நான்; அருங் கூற்றம் ஆனேனே: எமனுக்கும் எமனும் வாய்த்து விட்டேனே!]

•.•

"என்னுடைய மனைவியை ஒருவன் பற்ற நீ போர் செய்தாய். உன்னுடைய தியாகத்தை என்னவென்று சொல்ல? உன்னைக் கொன்றவன் ஒரு இடத்தில் உயிரோடு நிற்கத்தானே செய்கிறான்? நீயோ கொலையுண்டு கிடக்கிறாய், அடடா!"

'என்தாரம் பற்றுன்ன,
ஏன்றாயைச், சான்றோயைக்
கொன்றானும் நின்றான்;
கொலையுண்டு நீகிடந்தாய்

வன்தாள் சிலை ஏந்தி
வாளிக் கடல் சுமந்து
நின்றேனும் நின்றேன்,
நெடுமரம்போல் நின்றேனே!'

[என் தாரம் பற்றுண்ண: என்னுடைய மனைவியை எவனோ ஒருவன் பற்றிக்கொண்டு போக; என்னுயை: அவனை எதிர்த்த உன்னை: சான்றோயை: உயர்ந்த தியாக குணமுள்ள உன்னை; கொன்றானும் நின்றான்: கொன்றவனும் ஒரு இடத்தில் நிற்கத்தானே செய்கிறான்; வன் தாள் சிலை ஏந்தி: வலிமை பொருந்திய வில் ஒன்றை ஏந்திக் கொண்டு—அதோடு: வாளிக் கடல் சுமந்து: வற்றாத அம்பறாத் தூணியையும் சுமந்து கொண்டு.]

* * *

மேலே சொன்ன விதமாக என்னவெல்லாமோ சொல்லி அழுதான், அயர்ந்தான், ராமன். லக்ஷ்மணனும் அப்படியே அழுது புலம்பினான். ஒன்றும் விளங்காதவர்களாய் இருவரும் யோசனையில் ஆழ்ந்தவர்களாய் நிற்கிறார்கள். ராமன் வேகமாய் விழுந்த காரணத்தினாலும், லக்ஷ்மணன் கொண்டு வந்த தண்ணீரில் சிறிது தன்மேல் பட்ட காரணத்தினாலும், ஜடாயுவுக்குக் கொஞ்சம் உணர்ச்சி ஏற்பட்டது.

அன்னா பலபலவும்
பன்னி, அழும்மயங்கும்
தன்னேர் இலாதானும்,
தம்பியும்அத் தன்மையனாய்
உன்னா;—உணர்வுசிறி(து)
உள்முளைப்பப் புள்ளரசும்
இன்னா உயிர்ப்பான்
இருவரையும் நோக்கினான்.

[அன்னா பலபலவும் பன்னி: மேலே சொன்ன விதமாகப் பல பல விஷயங்களையும் சொல்லிச் சொல்லி; அழும் மயங்கும்: அழுவான் மயங்குவான்; தன்னேர் இலாதான்: தனக்குச் சமானமில்லை, கடவுள் அம்சந்தான் என்று சொல்லக்கூடிய ராமனும்; தம்பியும் அத் தன்மையனாய்: லக்ஷ்மணனும் அதே மாதிரி அழுது அயர்ந்து; உன்னா: யோசனையில் ஆழ்ந்தவர்களாய் நிற்க; புள் அரசும்: ஜடாயுவும்; உணர்வு சிறிது உள் முளைப்ப: உணர்ச்சி சிறிது உள்ளே உண்டாகி; இன்னா உயிர்ப்பான்: கஷ்டப்பட்டுச் சுவாசம் விடுபவனாய்; இருவரையும் நோக்கினான்: கண்ணை விழித்து ராமலக்ஷ்மணர்களைப் பார்த்தான் — ஏதோ இரண்டு இனந் தெரியாத மனிதர்களைப் பார்த்தது போல் பார்த்தான்: அவ்வளவுதான்.]

ராம லக்ஷ்மணர்களைக் கண்ணெடுத்துப் பார்த்தான். ஆனாலும் இனம் தெரியவில்லை ஜடாயுவுக்கு; உயிரே போய்விடுமோ என்று சொல்லும்படி பெருமூச்சு எறிகிறான். சிறிது நேரங் கழித்துத்தான் ராமனை இனங் கண்டு கொள்ள முடிகிறது.

உற்ற(து) உணரா(து)
உயிர்உலைய வெய்துயிர்ப்பான்;
கொற்றவனைக் கண்டான்,தன்
உள்ளம் குளிர்ப்புற்றான்:
'இற்ற இருசிறகும்
இன்உயிரும் ஏழுலகும்
பெற்றனனே ஒத்தேன்
பெயர்த்தேன் பழி'என்றான்.


[உற்றது: நேர்ந்த காரணத்தை: உணராது: ராமலக்ஷ்மணர்கள் வந்து நிற்பதை உணர முடியாமல்: உயிர் உலைய வெய்துயிர்ப்பான்: உயிர் போகிற நிலையில் பெருமூச்சு எறிபவனாய்; உள்ளம் குளிர்ப்புற்றான்: மனசுக்குச் சமாதானம் ஏற்பட்டுச் சொல்லுகிறான்: இற்ற இருசிறகும்: அறுந்து போன இரண்டு சிறகுகளையும்: இன்னுயிரும்: நழுவுகிற உயிரையும்; ஏழ் உலகும்: திக்கு விஜயஞ் செய்து ஏழு உலகங்களையும்: பெற்றனனே ஒத்தேன்: பெற்றது போலவே ஆகிவிட்டேன்: பெயர்த்தேன் பழி என்றான்: எனக்கு நேர்வதான பழியையும் தீர்த்து விட்டேன்.]

ராவணன் தன்னை எதிர்த்தபோது, 'அடடா! ராமன் இல்லையே! இருந்தால் இந்த ராவணன் அப்படியே ஒழிந்து போவானே! மருமகளைக் காப்பாற்றினேன் என்னும் புகழும் எனக்குக் கிடைத்திருக்குமே!' என்ற ஏக்கத்தோடு மூர்ச்சை ஆனான் ஜடாயு.

உணர்ச்சி வந்து கண்ணை விழித்துப் பார்த்ததும், அந்த ராமனே எதிரில் நிற்கிறான்! சந்தோஷமே உண்டாய் விட்டது ஜடாயுவுக்கு! அந்த சந்தோஷம் பின் இரண்டு அடிகளிலும் துள்ளிக் குதித்து வருகின்றன. அரக்கன் ஒழிந்தான்; சீதையை மீட்டி ஆகிவிட்டது என்றெல்லாம் துள்ளுகிறது உள்ளம்!



Copyright: Pond's Extract Co.



வழங்குகிற பெருமதிகள் . . .

பாங்க்நோட்டின் உத்தேசம் திட்டமான பெருமதியாகும். ஆனால் உலக அமளிதுமளிகளில் ஒரு விளைவு என்னவெனில் சில செலாவணி நாணயங்கள் பெரிதளவு மதிப்பிழக்கின்றன. எனினும் இந்த பீஷண மூல்யபரிவர்த்தன காலத்தில் ஒரு பிரமாண மட்டுமாவது குலையாமல் நிலைத்திருக்கிறது. ஒரு கட்டு துணிமீது காணும் 'ஆடு மார்க்கு' அன்றும் இன்றும் ஒருபோலவே. நாடு பூராவுமுள்ள எமது ஏராள வாடிக்கைக்காரர்களுக்குக் கிடைக்கும் உண்மை பெருமதிக்கும், நியாயமான விலையில் சிறந்த குணத்திற்கும் உத்தரவாதமாக விளங்குகிறது.

பெயர்போன ஆடு மார்க்கு முத்திரையுடைய நெசவுத் தரங்களில் பணம் விநியோகிப்பது நன்மையான காரியமேயாகும்.

கம்பளி: பூராவும் கம்பளி ஸூப்பர் ப்லாங்கெட்டுகளும் பிரயாண ரக்குகளும்—ட்வீடுகளும், நேரிய கம்பளி திணுசுகளும், யூனியன் ஷர்ட்டிங்குகளும்.

பருத்தி: ஸெல்லா ஷர்ட்டிங்குகளும், நேரிய லாங்கிலாத்தும்—கோல்ட் ஸ்டாண்டர்ட் ஷர்ட்டிங்குகள்—லேடீ லாங்கிலாத்தும், சாயம் தோய்த்ததும்—ஸைம்ரா ஸூட்டிங்குகள்—டவ்லோர்கள்—ட்ரில்கள்—ட்வில்கள் வகையரு.

பட்டு: 44"/45" அகலம், பற்பல சாயல்களில்.

தயாரிப்போர்கள் தி பங்களுர் வூளன், காட்டன் &
ஸில்க் மில்ஸ் கோ., லிட்.
ஏஜண்டுகள், காரியதரிசிகள், ட்ரெஷரர்கள்
பின்னி & கோ.
(சென்னை) லிட்.

"ஆடுமார்க்கு"
அணிவதற்குகந்த துணிகளின் அறிகுறி

By 705

நாத்தனார் சண்டை

காபன்

விக்டோரியா கல்லூரி ஹாஸ்டலில் இருந்த அறையில் வசந்தா தன்னந்தனியாக உட்கார்ந்து ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தாள். மற்ற அறைகளெல்லாம் பூட்டிக் கிடந்தன. வசந்தாவைத் தவிர மற்ற மாணவிகள் எல்லோரும் மத்தியான வகுப்புக்குச் சென்றிருந்தனர். வசந்தாவும் வழக்கம் போல் வகுப்புக்குப் புறப்பட்டவள் தான்; வழியில் தபால்காரன் கொடுத்த ஒரு கடிதம் அவளை மறுபடியும் ஹாஸ்டலுக்குத் திரும்பும்படி செய்து விட்டது. அந்தக் கவரில் ஒரு போட்டோவும் கடிதமும் இருந்தன. முதலில் அவள் கடிதத்தைப் பார்த்தாள். அவளது தந்தை எழுதிய கடிதம்தான் அது:

"அன்புள்ள வசந்தாவுக்கு ஆசீர்வாதம்.

உனக்கு விவாகம் நிச்சயமாகி விட்டது. நீ மிகுந்த பாக்கியசாலி. உன் கணவராகப் போகிறவர் எம். ஏ. பாஸ் செய்திருக்கிறார். உயர்ந்த குடும்பம். நமக்குக் கிடைத்தற்கரிய சம்பந்தம். மாப்பிள்ளையின் அழகான முகத்தைப் பார்த்ததிலிருந்து எவ்வளவு செலவானாலும் அவருக்கே உன்னைக் கொடுக்க வேண்டும் என்று உன் தாயார் தீர்மானித்து விட்டாள். போட்டோ இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அவரது அழகு முழுதும் போட்டோவில் இல்லை......விரைவில் முகூர்த்தப் பத்திரிகையுடன் நான் அங்கு வருகிறேன். உன் ஆசிகளையும் [illegible]களையும் நான் நேரில் வந்து அழைக்க வேண்டும்.

உன் அப்பா,
நாணுப் பிள்ளை."

நூற்றைம்பதாவது தடவையாக வசந்தா அந்தப் படத்தைப் பார்த்தாள்; தந்தையின் கடிதத்தையும் திருப்பித் திருப்பிப் படித்தாள். எண்ணற்ற இன்ப அலைகள் அவள் இதயத்தில் எழுந்து ஏதோ ஒரு விவரிக்க முடியாத வேதனையைத் தந்தன.

வெறும் கடிதம் மட்டும் வந்திருந்தால் அவள் [illegible]மில்லாமல் ஒரு முடிவுக்கு வந்திருப்பாள். 'விவாகமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டியதில்லை!' என்று தன் தகப்பனாருக்குப் பதில் எழுதிவிட்டுத் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பாள். ஆனால் வாலிப சௌந்தர்யத்தைப் பற்றி அவள் என்னவெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தாளோ அவையெல்லாம் ஒருங்கே திரண்டு அமைந்தமாதிரி அந்தப் போட்டோ இருக்கவே, அவள் மனம் பேதலித்து விட்டது.

படத்திலிருந்தவரின் கண்களில் மிளிர்ந்த ஒளியையும் புருவங்களின் செறிவையும் கூர்ந்து பார்த்து, அவரது முழு உருவத்தையும் தன் மனத்திரையில் தீட்ட ஆரம்பித்து விட்டாள் வசந்தா.

இந்தச் சமயத்தில் அவள் அறையின் கதவு தட்டப்பட்டது. பரபரப்புடன் கடிதத்தையும் படத்தையும் மறைத்து வைத்து விட்டு வாசற்கதவைத் திறந்தாள். அவள் சிநேகிதி வத்சலா அங்கே நின்று கொண்டிருந்தாள். "நீ ஏன் வகுப்புக்கு வரவில்லை? தலைவலியா, என்ன? முகம் ஒரு மாதிரியிருக்கிறதே?" என்று வினவினாள்.

வசந்தா மௌனம் சாதிக்கவே, வத்சலாவே மீண்டும் ஆரம்பித்தாள்:

"என் அறைக்கு வா, வசந்தா! அமிர்தாஞ்சனம் தேய்க்கிறேன்...... பின்னர் சூடான காப்பி சாப்பிட்டால் தலைவலி பறந்துவிடும். இன்றைக்குக் கல்லூரி கலைக் கழகத்தில் 'லெக்சர்' இருக்கிறது. சென்னை மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி அமிர்தாம்பாள் வருகிறார். தெரியுமல்லவா, உனக்கு? அமிர்தாம்பாள் பெண் சமூகத்தின் சுதந்திரத்துக்காக எத்தனையோ தியாகங்கள் செய்தவர். அவர் இப்போது மாதர் முன்னேற்ற சங்கத்துக்குக் கன்னியர் திரட்டுகிறார் — நானும் சேரலாமென்று நினைக்கிறேன் ... போதும் போதும், கல்யாணமாகி ஒருவனுக்கு அடிமையாவதை விட இப்படி ஏதாவது சேவை செய்வது எவ்வளவோ மேல்!" என்றாள்.

வசந்தாவின் காதில் அதெல்லாம் விழவில்லை. வேறு வழியின்றி அவள் தலைவலி தாங்காதவள் போல பாசாங்கு செய்தவாறு வத்சலாவின் அறைக்குச் சென்றாள். எவ்வளவுதான் முயன்றாலும் அன்று எப்பொழுதும் போல் வத்சலாவுடன் பழக முடியவில்லை அவளுக்கு.

அமிர்தாஞ்சனக் குப்பியோ இலகுவில் அகப்படுவதாயில்லை. வத்சலா அலமாரி

முழுதும் தேடினாள்; பெட்டியைத் திறந்து பார்த்தாள்; அதில் நிறைந்திருந்த துணி மணிகளை யெல்லாம் வெளியே எடுத்துப் போட்டு விட்டுத் தேடினாள்; பயனில்லை.

"வசந்தா! கொஞ்சம் பொறுத்துக் கொள்—கமலாவின் அறை வரையில் போய் விட்டு வந்து விடுகிறேன். அவள் தான் வாங்கிக் கொண்டு போனதாக நினைவு!" என்று சொல்லிப் பெட்டியை அப்படியே போட்டு விட்டுப் பரபரப்புடன் வெளியே ஓடினாள் வத்சலா.

வசந்தாவின் மனச்சாட்சி அவளைக் குத்திக் கொண்டேயிருந்தது. வீணாக ஒரு சிநேகிதியை இத்தனை கஷ்டங்களுக்கு ஆளாக்கலாமா என்று அவள் பரிதவித்தாள்.

அடுத்த நிமிஷம் திறந்து கிடந்த பெட்டியில் புடவைகளை மெதுவாய் எடுத்து அடுக்கி வைக்கத் தொடங்கினாள் வசந்தா. ஒரு மடிப்பிலிருந்து படம் ஒன்று கீழே விழுந்தது. எடுத்துப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! அந்தப் போட்டோ வேறெதுவுமல்ல; 'அவரது' போட்டோவேதான்!

எந்த அழகிய படத்தைப் பார்த்து அன்று காலையில் வசந்தா 'என் மனோகரன் இவர் தான்!' என்று மனம் களிக்கக் கொண்டிருந்தாளோ, அந்த மனிதருடைய படம் தான் அதுவும்!

வசந்தாவின் தலை சுழலுவது போலிருந்தது. அத்துடன் அந்த அறை, திறந்த பெட்டி, படம், உலகம் அனைத்தும் வெகு வேகமாய்ச் சுற்றிச் சுழன்றன! தான் காண்பது அத்தனையும் கனவா? அல்லது வெறும் மனப் பிராந்திதானா? ...

ஒருவேளை 'அவர்' வத்சலாவின் காதலரா யிருப்பாரோ? ... ஆம், அதில் சந்தேகமில்லை! அப்படியானால் நம் பெற்றோர்கள் உண்மை யறியாமல் நிச்சயித்து விட்டார்களா?

வத்சலா எத்தனை நெஞ்சழுத்தக்காரி! ஒரு வார்த்தையாவது அவள் இதுவரை நம்மிடம் தன் காதலையும் காதலரையும் பற்றிச் சொல்லவேயில்லையே!......

இவ்வாறு பலவிதமாக எண்ணிக் கொண்டு வசந்தா வெளியே கிடந்தவற்றை எடுத்து வைத்துப் பெட்டியை மூடினாள். அவளை அறியாமலே அவள் மனதில் வத்சலாமீது அவநம்பிக்கையும் அருவையும் தோன்ற ஆரம்பித்தன.

அமிர்தாஞ்சனக் குப்பியுடன் திரும்பிய வத்சலா, "வசந்தா, நேரமாய் விட்டதற்கு மன்னிக்க வேண்டும். கமலா விடாமல் பேசத்



தொடங்கி விட்டாள்! அவளையும் தள்ளிக்கொண்டு வந்தேன்!" என்று சொல்லிக்கொண்டே, வசந்தாவின் நெற்றியில் அமிர்தாஞ்சனத்தை அழுத்தித் தேய்த்தாள்.

கமலாவுடன் இன்னும் ஐந்தாறு பெண்களும் அங்கு வந்துவிட்டனர். "புறப்படு, வசந்தா!" என்று எல்லோரும் அவளைத் துரிதப் படுத்தினர். வசந்தா தாங்க முடியாத தலைவலி என்று சொல்லி, அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டாள்.

அன்றைய தினத்திலிருந்து வத்சலாவிடம் அவள் பேசவில்லை; அவள் பேசினாலும் காது கொடுத்துக் கேட்பதில்லை; எதிரே கண்டு விட்டால் வேறு பக்கம் திரும்பிக் கொள்வாள்; வாசற் பக்கம் வருவதைக் கண்டால் அறையைப் பூட்டிக் கொள்வாள்!

இத்தகைய விபரீதப் போக்குகளைத் தன் உயிர்த் தோழி வசந்தாவிடம் கண்டதும் வத்சலா திடுக்கிட்டாள். இன்னும் இரண்டொரு நாட்கள் இருந்திருந்தால் என்னவெல்லாம் நிகழ்ந்திருக்குமோ? தன் வீட்டிலிருந்து ஒரு தந்தி வரவே, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வத்சலா தன் ஊருக்குப் போய் விட்டாள்.

முகூர்த்தப் பத்திரிகைகளுடன் வசந்தாவின் தந்தை வந்து கலாசாலை ஆசிரியைகளுக்கும், ஹாஸ்டல் வார்டன் மற்றும் அவளது சிநேகிதிகள் அனைவருக்கும் அழைப்பிதழ்கள் வழங்கி, வசந்தாவை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

அவளை ஆசீர்வதித்து அனுப்பிய தலைமை ஆசிரியை, "வசந்தா! உன் சிநேகிதி வத்சலாவைக் கட்டாயம் தோழிப் பெண்ணாக வைத்துக் கொள்! அவள் உன் அருகிலேயிருந்தால் உனக்கும் சுவாரஸ்யமாயிருக்கும்!" என்றாள்.

வசந்தா, "அவர்கள் எல்லாம் வாழ்நாள் முழுதும் கன்னியாகவே இருந்து காலம் கழிக்கப் போகிறவர்கள்! என் கல்யாணத்துக்கு வருவார்களா?" என்று ஒரு நிஜுசாகப் பதிலளித்து விட்டுப் போனாள்.

* * *

விடிந்தால் முகூர்த்தம். மாப்பிள்ளை வீட்டார் அடுத்த தெருவில் அவர்களுக்கென்று தயாரிக்கப் பட்டிருந்த பங்களாவில் தங்கியிருந்தனர். வசந்தா மணமகள் கோலத்தில் பந்து மித்திரர்கள் கூட்டத்தின் நடுவே, பட்டாசாலையில் உட்கார்ந்திருந்தாள்.

கொட்டு மேளத்துடனும் தட்டில் புஷ்பம், பழங்கள், மஞ்சள், குங்குமம், பட்டுப் புடவையுடனும் மாப்பிள்ளை வீட்டினர் நிச்சயதார்த்தம் செய்ய வந்து சேர்ந்தனர்.

"இதோ வருகிறாளே, இவள் தான் மாப்பிள்ளையின் சகோதரி! ரொம்பப் படித்தவளாம்!" என்று ஒரு சிறுமி சொல்வதைக் கேட்டு, கடைக் கண்களால் வாசற் பக்கம் பார்த்தாள் வசந்தா. என்ன ஆச்சரியம்! கையில் புஷ்பத் தட்டோடு வந்தவள் வத்சலாதான்!

"ஏண்டி, நீதான் என் அண்ணாவுக்கு மனைவியாக வரப் போகிறவள் என்று தெரியாமல் போய்விட்டதே, எனக்கு? என் அண்ணா யாரோ, என்னமோ என்று எப்படியெல்லாம் தன் மனதை அலட்டிக் கொண்டாள் தெரியுமா?" என்று கேட்டுச் சிரித்தாள் வத்சலா.

வசந்தாவுக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. நடந்ததை நினைத்து வருந்தியபடி அவள் பேசாமல் இருந்தாள். விவாகம் வெகு சிறப்பாகவும் குதூகலமாகவும் நடந்தது.

அன்று மாலை வசந்தாவைத் தனிமையில் சந்தித்த வத்சலா, "மதனி, கடைசி நாட்களில் கலாசாலையில் இருந்தபோது ஏன் என்னிடம் அவ்வளவு கோபமாயிருந்தீர்கள்?" என்று கேட்டாள் வத்சலா.

"நாத்தனார் சண்டை அப்பொழுதே நமக்குள் ஆரம்பித்து விட்டது! இது உலக இயல்புதானே!" என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தாள் வசந்தா.

அதிசயம்!

'மிக்கி மௌஸ்' முதலிய இணையற்ற கார்ட்டூன் படங்களைத் தயாரித்த வால்ட் டிஸ்னியை ஒரு சமயம் சந்தித்த ஓர் ஆங்கில நாவலாசிரியர், "நீங்கள் தயாரிக்கும் கார்ட்டூன் படங்களெல்லாம் அற்புதமான கருத்துகளும் அனுபவித்து வியக்கக் கூடிய தத்துவங்களும் கொண்டவையாயிருக்கின்றன. அத்தகைய தத்துவங்களெல்லாம் உங்கள் மனத்திலே எப்படித் தோன்றுகின்றனவோ, தெரியவில்லையே!" என்றார்.

"கருத்தாவது, தத்துவமாவது! எங்களுக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது. எங்கள் படத்தைப் பார்க்கும் உங்களைப் போன்றவர்கள் தான் அப்படியெல்லாம் ஏதோ இருப்பதாகக் கூறுகின்றனர்!" என்றார் வால்ட் டிஸ்னி.

கைத்தறி ஆடைகளை

ஆதரியுங்கள்

மங்கையர் இன்றைய நாகரீகத்தில் விரும்பும் சாயத்திற்கு கியாரண்டியுள்ள எங்கள்

"போட்டோ மார்க்"

சேலைகளே


முதன்மை ஸ்தானம் பெற்றது

— தயாரிப்பவர்கள் —

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி

(எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்)



SUNSHINE

Glaxo

ஸன்ஷைன் கிளாக்ஸோ

குழந்தைகளை புஷ்டியாக வளர்க்கிறது

இந்தியாவில் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

எச். ஜே. பாஸ்டர் & கோ., லிட். பம்பாய், கல்கத்தா, மதராஸ், லாகூர்

குழந்தைகள் பராமரிப்பைப் பற்றிய சிறிய புத்தகம் 4 அணாவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயரையும் விலாசத்தையும் எச். ஜே. பாஸ்டர் & கோ. லிட்., த. பெ. 202, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

பதின்மூன்றாம் அத்தியாயம்
ஆசை நிறைவேறியது

அங்கிருந்த நகைக் கடைகளுக்குள் கங்காராமின் கடைக்குத்தான் அதிக வியாபாரம். அவன் வியாபாரத்தில் கை தேர்ந்தவன். எப்பொழுது பார்த்தாலும் அவனுடைய கடையில் கூட்டம் இருந்து கொண்டேயிருக்கும். மற்ற கடைகளில் ஏமாற்றி விடுவார்களோ என்ற பயம் உண்டு. ஆனால் கங்காராமின் கடையில் அந்த பயத்துக்கே இடமில்லை. அவன் வீதி வழியே போய்க் கொண்டிருந்த ரமாநாத்தைப் பார்த்ததும் வதனத்தில் புன்சிரிப்பு தாண்டவமாட, "வாருங்கள் முதலாளி, வாருங்கள்! இந்தப்பக்கமே வரமாட்டேன் என்கிறீர்களே! — டேய் பையா, போய் ஐயாவுக்கு வெற்றிலைப்பாக்கு வாங்கி வா — என்ன முதலாளி, ஏதாவது வேண்டுமா? நம் கடையில் ஒன்றுமே வாங்க மாட்டேன் என்கிறீர்களே!" என்றான்.

கங்காராமின் சுமுகமான வரவேற்பு ரமாநாத்துக்குச் சற்றுத் துணிவை வரவழைத்தது. அவன் அவ்வளவு பிடிவாதமாகக் கூப்பிட்டிருக்கா விட்டால், கடைக்குள் நுழையவே ரமாநாத்துக்குத் தைரியம் ஏற்பட்டிருக்காது. அவன் கடைக்குள் நுழைந்தவாறே, "என்னைப் போன்ற கூலிப் பிழைப்புப் பிழைப்பவர்களுக்கு இங்கே என்ன வேலை? கையில் காசு இருந்தால் அல்லவா, இங்கே யெல்லாம் நுழைவதற்கு?" என்றான்.

"நன்றாயிருக்கிறது. நீங்களே இப்படிச் சொன்னால் அப்புறம் நாங்கள் எல்லோரும் எங்கே போவது? இதுவோ உங்களுடைய கடை; வேண்டியதைத் தாராளமாய் எடுத்துப் போங்கள். பணத்துக்கென்ன அவசரம்? எனக்குத் தேவையான பொழுது வாங்கிக் கொள்ளுகிறேன். யார் யாரிடம் எப்படிப் பழகவேண்டும் என்று எங்களுக்குத் தெரியாதா, முதலாளி? உங்களைப் போன்றவர்கள் எங்கள் கடையைத் தேடி வருவதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே! வளையல், ஹாரம் ஏதாவது காட்டச் சொல்லட்டுமா? இப்பொழுதுதான் டில்லியிலிருந்து வந்திருக்கிறது......"

"குறைந்த விலையில் ஏதாவது ஹாரம் இருந்தால் காட்டச் சொல்லுங்கள், பார்க்கலாம்."

"எழுநூறு — எண்ணூறுக்கு இருக்கட்டுமா?"

"ஊஹூம்; அவ்வளவுக்குப் போகக் கூடாது. முந்நூறு — நானூறுக்கு இருந்தால் நல்லது!"

"சரி, உங்களுக்கு இரண்டு ரகத்தையும் காட்டச் சொல்லுகிறேன். எது பிடிக்கிறதோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். நம் கடையில் பேற்று-மாற்று வியாபாரமே கிடையாது. ஐந்து வயதுக் குழந்தை வந்தாலும் சரி; நூறு வயதுக் கிழவன்

வந்தாலும் சரி; ஒரே விலைதான்! இன்றைக்குப் பேற்று-மாற்று வியாபாரம் செய்து விட்டு, நாளைக்கு உங்கள் முகத்தில் விழிக்க முடியுமா, முதலாளி! நீங்களே சொல்லுங்கள்!'' என்றான் கங்காராம்.

அதற்குள் நகைப் பெட்டி அங்கு வரவே, கங்காராம் ஒவ்வொரு நகையாக எடுத்து சமாசாத்துக்குக் காட்டலானான். நகைகளின் வேலைப் பாட்டைக் கண்ட சமாசாத் மதி மயங்கி, வைத்த கண் வாங்காமல் அவற்றையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். 'என்ன வேலைப்பாடு! வைரக் கட்டுத்தான் எவ்வளவு சுத்தம்! என்ன பளபளப்பு!' என்று அவன் தனக்குத்தானே வியந்து கொண்டான். சமாசாத் முதலில், 'நூறு ரூபாய்க்கு மேல் கடன் வாங்கக் கூடாது' என்றுதான் மனதுக்குள் திட்டம் போட்டிருந்தான். ஆனால் எண்ணூறு ரூபாய் பெறுமான முல்லை ஹாரத்தைப் பார்த்த பிறகு, நானூறு ரூபாய் ஹாரம் அவனுக்குப் பிடிக்கவில்லை. 'வாங்குவதென்றால் நல்லதைத்தான் வாங்க வேண்டும்!' என்று அவன் எண்ணினான். ஆனால் அவன் கையில் இருந்ததோ முந்நூறு ரூபாய்தான். என்ன செய்வதென்று புரியாமல் எண்ணூறு ரூபாய்ச் சந்திரஹாரத்தையே ஆவலுடன் உற்று நோக்கினான். 'முந்நூறு, நானூறு ரூபாய் கடனுக்குத் தர முடியாது என்று கங்காராம் மறுத்து விட்டால் என்ன செய்வது?' என்ற அச்சத்தினால் அவன் மௌனம் சாதித்தான். கங்காராம் அவனுடைய மனதை ஓரளவு அறிந்து கொண்டு, ''உங்களுக்குத் தகுந்த ஹாரம் இதுதான். என்னைக் கேட்டால், பேசாமல் இதையே எடுத்துப் போங்கள் என்றுதான் சொல்லுவேன்!' என்றான்.

''எனக்கும் இதுதான் பிடிக்கிறது. ஆனால் என்னிடம் முந்நூறு ரூபாய்தானே இருக்கிறது!'' என்றான் சமாசாத்.

இதைச் சொல்லும்பொழுது அவன் முகம் வெட்கத்தினால் சிவந்தது. மனம் 'பட் பட்' என்று அடித்துக் கொண்டது. 'கங்கு என்ன சொல்லப் போகிறானோ!' என்று சமாசாத் அவனையே உற்று நோக்கினான்.

கங்காராம் கபடமற்ற சுபாவத்துடன், ''முதலாளி, பணத்தைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்! பணம் ஓடியா போய்விடும்? நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள், இப்பொழுதே பதினாயிரம் ரூபாய்க்கு வேண்டுமானாலும் நான் நகைகள் அனுப்பி வைக்கிறேன். கடையே உங்களுடையதாயிருக்கும் பொழுது நீங்கள் கவலைப் படலாமா? இன்னும் ஏதாவது வேண்டுமானாலும் சொல்லுங்கள், காட்டுகிறேன். திருகுப் பூ ஒன்று வந்திருக்கிறது. கன ஜோர், போங்கள்! நிஜ ரோஜாப் பூக்கூடத் தோற்றுப் போய்விடும்; அவ்வளவு அழகாயிருக்கிறது! டேய் பையா, அந்தத் திருகுப் பூவை எடுத்து வந்து ஐயாவுக்குக் காட்டு!



விலை ஒன்றும் அவ்வளவு அதிகமில்லை. இருநூற்றைம்பது ரூபாய்தான்! உங்களுக்கு வேண்டுமானால் அடக்கத்துக்கே தருகிறேன்'' என்றான்.

சமாசாத் புன்முறுவலுடன், ''கங்கு. நகையைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. பேச்சிலே ஆளை மயக்கி, அதிக விலைக்கு என் தலையில் கட்டி விடாதே!'' என்றான்.

''அந்தப் பேச்சு மட்டும் என்னிடம் வேண்டாம். ஸார்! இதை எடுத்துக்

கொண்டு போய் சாது பேரிடம் காட்டுங்கள். யாராவது இருநூற்றைம்பதுக்குக் குறைத்துச் சொன்னால் உங்களுக்கு நான் இனாமாகவே தந்து விடுகிறேன். சரிதானா!" என்றான் சங்கராம்.

அதற்குள் திருகுப் பூவைக் கொண்டு வந்து ரமாகாந்திடம் காட்டினான் பையன். உண்மையிலேயே அது நிஜ ரோஜாப் பூவைப் போலவேயிருந்தது. அதில் கட்டியிருந்த சின்னச் சின்ன வைரங்கள், பனித்



துளிகளைப்போல் 'தக தக' வென்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. ரமாகாந்தின் கண்கள் அதை விட்டு அகலவேயில்லை.

"இதன் வேலைப்பாட்டுக்கே இருநூற்றைம்பது ரூபாய் கொடுக்கலாமே, ஸார்!" என்றான் சங்கராம்.

"அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் காலைக்கே நீ பணத்துக்காக என் கழுத்தை அறுக்க ஆரம்பித்து விட்டால்? அதுதான் யோசிக்கிறேன்!" என்றான் ரமாகாந்த்.

"அப்படியெல்லாம் ஒன்றும் யோசிக்க வேண்டாம்!" என்று சொல்லிக்கொண்டே சங்கராம் அந்த இரண்டு நகைகளையும் வெல்வெட்டுக் கேஸில் வைத்து ரமாகாந்தின் கையில் கொடுத்தான். பிறகு, குமாஸ்தாவிடம் அவன் பெயரை எழுதிக் கொள்ளச் சொல்லி, கையெழுத்தும் வாங்கிக் கொண்டு ரமாகாந்துக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

ரமாகாந்துக்கு ஒரே உற்சாகம். ஆனால் அவனுடைய உற்சாகத்தைப் பரிசுத்தமானது என்று சொல்லி விடுவதற்கில்லை. ஏனெனில் அதில் ஒருவித அச்சம் குடிகொண்டிருந்தது. தாயாரைக் கேட்டுக் காசு வாங்கி மிட்டாய் வாங்கித் தின்னும் பையனுக்கு ஏற்படும் ஆனந்தத்துக்கும், வீட்டில் யாருக்கும் தெரியாமல் காசைத் திருடி மிட்டாய் வாங்கித் தின்னும் பையனுக்கு ஏற்படும் ஆனந்தத்துக்கும் ஒரு தனி வித்தியாசம் உண்டல்லவா? காசைத் திருடித் தின்ன பையனுக்கும் மிட்டாய் என்னவோ இனிக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் வீட்டுக்குப் போன பிறகு தன் திருட்டு வெளிப்பட்டு அடிபட நேர்ந்தால் என்ன செய்வது என்ற அச்சம் அவனை வாட்டுகிறது. அதே போன்ற சங்கடத்தைத்தான் ரமாகாந்தின் மனமும் அடைந்தது. அறுநூற்றைம்பது ரூபாய் கடனை அடைத்தாக வேண்டுமே என்ற கவலைகூட அவனுக்கு அவ்வளவாக இல்லை. ஏனெனில், யாராவது ஆள் வகையாக மாட்டிக் கொண்டால் கடனை ஐந்தாறு மாதத்துக்குள் கட்டாயம் தீர்த்துவிடலாம் என்ற தைரியம் அவனுக்கு இருந்தது. அப்பாவுக்கு இந்த விஷயம் தெரிந்து விட்டால கோபித்துக் கொள்வாரோ என்ற பயம்தான் அவனை உள்ளூற வாட்டியது. ஆனால் வீடு நெருங்க நெருங்க, பத்மாவை இந்த நகைகளைப் போட்டுக் கொள்ளச் சொல்லி அழகு பார்க்கவேண்டும் என்ற ஆசை எழுந்து, அந்த பயத்தை அடக்கி விட்டது. ஆகையால் சீக்கிரம் வீட்டுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணத்தில், அவன் நேர்வழியை விட்டுக் குறுக்குச் சந்தில் புகுந்தான். அதற்குள் நல்ல மையிருட்டாகி விட்டது. அவன் வீட்டிலிருந்து புறப்படும் பொழுதே ஆகாயம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அந்தச் சந்தில் அவன் நுழைந்ததும் நுழையாததுமாக மழைத் தூறலும் ஆரம்பித்து விட்டது. குடையைப் பிரிப்பதற்குள் அவன் பாதி

களைத்து விட்டான். 'இந்தக் கும்மிருட்டில் தனியாக வருகிறோமே, யாராவது வந்து நம்மிடம் இருக்கும் இரண்டு நகைகளையும் அடித்துப் பிடுங்கிக்கொண்டு போய் விட்டால் ...!' என்ற பயம் வேறு அவன் உள்ளத்தில் எழுந்தது. 'இந்த மழை இரைச்சலில் எவ்வளவு சத்தம் போட்டாலும் யார் காதிலும் விழாதே! இம்மாதிரிச் சந்துகளில் கொலைகள் கூட நடப்பது உண்டே!' என்ற எண்ணம் எழுந்ததும் அவன், 'ஏண்டா இந்தச் சந்தில் நுழைந்தோம்?' என்று வருந்தலானான். இந்தத் திமிர் மழை அவனுடைய இன்பக் கனவுகளில் மண்ணை வாரிப் போட்டு விட்டது. சந்தைத் தாண்டி நேர் வழியில் வந்த பிறகுதான் அவனுக்குப் போன உயிர் மீண்டும் திரும்பி வந்தது. விளக்கு வெளிச்சத்தைக் கண்டதும் அவன், 'அப்பாடா!' என்று ஒரு நீண்ட மூச்சு விட்டான். வெளிச்சத்தில் நம்பிக்கை யூட்டும் சக்தி நிறைந்திருக்கிறது என்பதை அவன் இன்று தான் கண்கூடாகக் கண்டான். 'அதனால் தான் ஜனங்கள் நம்பிக்கையை ஒளிக்குச் சமானமாகச் சொல்லிக் கொள்கிறார்களோ!' என்றும் அவன் மனத்துள் எண்ணினான்.

அவன் வீட்டுக்குள் நுழையும் பொழுது, தயாநாதபாபு அறையில் உட்கார்ந்து கொண்டு 'ஹுக்கா' குடித்துக் கொண்டிருந்தார். அவருடைய கண்ணில் படாமல் ரமாநாத் உள்ளே போக முயன்றான். யமகாதக மனுஷ்யர் அவனைப் பார்த்ததோடு மட்டுமில்லாமல், "இத்தனை நேரம் எங்கே அப்பா போயிருந்தாய்?" என்றும் கேட்டு வைத்தார்.

அவருடைய கேள்விக்கு ரமாநாத் ஒன்றும் பதில் சொல்லவில்லை. 'அவர் பத்திரிகை படிப்பதற்குத் தன்னை உட்கார வைத்து விட்டாரானால் மணிக் கணக்காக உட்கார வேண்டி வந்து விடுமே!' என்று எண்ணி ரமாநாத் வாய் திறக்காமல் உள்ளே போய் விட்டான். அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்ற பத்மா, கையிலிருந்த குடையை வாங்கிக் கொண்டு, "இந்த மழையில் இப்படி நனைந்து கொண்டு வருவானேன்? உங்களுக்கு எவ்வளவு தடவைதான் சொல்லுவது?" என்றாள்.

"இராத்திரி பூராவுமே மழை நிற்காமல் இருந்து விட்டால்! அதனால்தான் வந்து விட்டேன்!" என்று சொல்லியவாறே, அவன் 'பத்மாவும் பின்னோடு மாடிக்கு வருவாள்' என்ற எண்ணத்தில் மேலே போனான். ஆனால் அவளோ, ரமாநாத் நகை வாங்கி வருவதாகப் போயிருக்கிறான் என்ற நினைவேயில்லாதவள் போல தன் மைத்துனர்களுடன் உட்கார்ந்து கொண்டு வம்படிக்க ஆரம்பித்து விட்டாள்.

ரமாநாத் ஈரத் துணியைக் களைந்து விட்டு உலர்ந்த துணியை உடுத்திய பின்னரும் பத்மா வராமற் போகவே சலித்துக்கொண்டு கீழே இறங்கி வந்தான். அதே சமயம் தயாநாதபாபுவும் சாப்பிட வந்துவிட்டார். எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தனர். பத்மா தன் ஆவலை அடக்க எவ்வளவோ முயன்றாள். ஆனால் அது அடங்கினால்தானே! அதன் காரணமாக, அவளுக்குச் சாப்பாடே வேண்டியிருக்கவில்லை. 'ஏதோ சாப்பிட்டோம்' என்று பெயர் பண்ணிக்கொண்டு மாடிக்குப் போனாள். ரமாநாத் கட்டிலில் படுத்திருந்தான். அவன் அவளைப் பார்த்ததும், "கடைசியில் இன்று கடைத் தெருவுக்குப் போனது தான் மிச்சம். எந்தக் கடையிலும் சந்திர ஹாரம் கிடைக்கவே யில்லை. செய்யச் சொல்லி 'ஆர்டர்' கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்" என்றான்.

உற்சாகம் தாண்டவமாடிக்கொண்டிருந்த பத்மாவின் முகம் 'சட்'டென ஒளியிழந்து விட்டது. "உங்கள் சமாசாரம்தான் எனக்கு முன்னாடியே தெரியுமே! நீங்களாவது, நகை செய்து போடவாவது?" என்று அவள் சலித்துக் கொண்டாள்.

"இல்லை, அவன் ரொம்ப சீக்கிரமாகவே செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறான்!" என்றான் ரமாநாத்.

ஆவலின் கடைசி கட்டம்தானே ஏமாற்றம் என்பது! ஆகவே, பத்மா வதனத்தில் ஏமாற்றம் தாண்டவமாடக் கீழே இறங்கப் போனாள். அவள் திரும்பினதுதான் தாமதம்; ரமாநாத் 'கடகட' வென்று சிரிக்கலானான். பத்மா அவனைத் திரும்பிப் பார்த்து, "என்ன பரிகாசம் வேண்டிக் கிடக்கிறது?—ஆமாம், நிஜமாகவே ஏதாவது நகை வாங்கி வந்திருக்கிறீர்களா, என்ன?" என்று அன்பொழுக விசாரித்தாள்.

"பார்த்தாயா, உன்னை ஏமாற்றிவிட்டேனே!" என்றான் ரமாநாத்.

"இந்த ஆண்பிள்ளைகளுக்கே இது தானே வழக்கம்! நீங்கள் ஒன்றும் புதிதாகச் செய்துவிடவில்லையே!" என்று பத்மா குத்தலாகச் சொன்னாள்.

நகைகளைப் பார்த்த பின் அவளுக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு ஓர் எல்லையில்லை. ஆனாலும் ரமாகாந்துக்கு எதிரே அவள் தன்னைத் தாழ்ந்தவளாகக் காட்டிக்கொள்ள விரும்பாமல் தன் மனோபாவங்களை மறைக்க முயன்றாள்; முடியவில்லை. அவளுடைய எல்லா அவயவங்களும் இவ்விஷயத்தில் அவளுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. ஜ்வலித்த கண்கள்; ஒளி வீசும் கன்னங்கள்; மலர்ந்த உதடுகள் இவையெல்லாம் அவளுக்குக் கீழ்ப்படிந்தால்தானே! அவள் சந்திரஹாரத்தைக் கழுத்தில் அணிந்து கொண்டாள். நருருப் பூவைத் தலையில் சூடிக்கொண்டாள். அந்த ஆனந்த வெறியில் அவள் தன்னை மறந்து, "கடவுள் உங்களை என்றும் நன்றாக வைத்திருக்க வேண்டும்" என்று ரமாகாந்தை ஆசீர்வாதம் கூடச் செய்துவிட்டாள்!

பத்மாவின் உள்ளத்தில் குழந்தைப் பருவத்திலிருந்தே வேரூன்றிப் போயிருந்த அந்த வெகு நாளைய ஆசை இன்றுதான் நிறைவேறியது. அவளுடைய தாயார் மாளவி மட்டும் அங்கே இருந்திருந்தால், அவள் தன் ஹாரத்தைக் காண்பித்து, 'உன்னுடைய சந்திர ஹாரத்தை உடைத்துக் குப்பையில் போடு!' என்றுகூடச் சொல்லியிருப்பாள்!

ரமாகாந்தைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. அவன் தான் பிறப்பின் பயனையே பெற்றுவிட்டதாக எண்ணி மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கலானான்.

பத்மா, "அம்மாவிடம் கொண்டுபோய்க் காட்டிவிட்டு வரட்டுமா?" என்று கேட்டாள்.

"அவளிடம் காட்டுவானேன்? நான் என்ன அப்படிப் பிரமாதமாகச் செய்து போட்டுவிட்டேன்?" என்றான் ரமாகாந்த்.


"இனிமேல் இந்த வருஷத்துக்கு உங்களிடம் வேறு நகையே நான் கேட்கமாட்டேன். இந்தக் கடனைத் தீர்த்த பிறகுதான் எனக்கு மனது நிம்மதியடையும்."

"என்ன தொலையாத கடன் வாங்கிவிட்டேன், அப்படிக் கவலைப்படுவதற்கு?"

"அது சரி, என்ன இருந்தாலும் அம்மாவுக்கு நகைகளைக் காட்டாமல் இருக்கக் கூடாது. காட்டிவிட்டு வருகிறேன். என்ன சொல்லுகிறாள் என்றுதான் பார்ப்போமே!" என்றாள் பத்மா.

"காட்டிவிட்டு வா! எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் கடனாக வாங்கி வந்திருக்

என்ன சுவாரஸ்யமோ!



கிறேன் என்று மட்டும் சொல்லிவிடாதே!" என்றான் ரமாகாந்த்.

பத்மா ஏதோ நிதி கிடைத்துவிட்டவள் போல, மகிழ்ச்சியுடன் வெகு வேகமாகக் கீழே இறங்கி ஓடினாள்.

நள்ளிரவு கடந்துவிட்டது. ரமாகாந்த் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். பத்மா உயரே வந்தவள் ஆகாயத்தை ஒருமுறை அண்ணாந்து பார்த்தாள். கார்த்திகை மாதத்துப் பரிசுத்தமான நிலவு வீசிக் கொண்டிருந்தது. அதில் சங்கீதத்தின் அமைதி; அமைதியின் இனிமை; இனிமையின் வெறி எல்லாம் நிரம்பியிருந்தன. பத்மா தன் அறைக்குச் சென்று பெட்டியைத் திறந்தாள். ஒரு காலத்தில் கழுத்தை விட்டுக் கழற்றுமலே அவள் போட்டுக் கொண்டிருந்த அந்தப் போலிச் சந்திர ஹாரப் பெட்டியின் ஒரு மூலையில் கிடந்தது. சந்திரனின் பிரகாசத்துக்கு எதிரே நட்சத்திரங்களின் பிரகாசம் ஒளி மங்கிச் சோபையிழந்து விடுகின்றனவல்லவா? அதே மாதிரி புதுச் சந்திர ஹாரத்தின் முன்னிலையில் அந்தப் பழையப் போலிச் சந்திர ஹாரம் சோபையிழந்து காணப்பட்டது. பூஜை முடிந்த பிறகு உபாசகன் மண்ணாலான பிரதிமையை எடுத்துத் தண்ணீரில் கரைத்து 'விஸர்ஜனம்' செய்து விடுகிறானே, அதேபோல அவள் அந்தப் பழைய போலிச் சந்திர ஹாரத்தை எடுத்து உடைத்துச் சிதறிய கண்ணாடித் துண்டுகளை வீதியில் விட்டெறிந்தாள்! (தொடரும்)

உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது!

ப்ரூக்லாக்ஸ் பார்வைக்கும் ருசிக்கும் தித்திப்பான சாக்லெட்டைப் போலிருக்கும். வயிற்றுகுத்து முதலியன இல்லாமல் உடம்பை இன்பமாய்ச் சுத்திகரிக்கும். ஊக்கமற்ற நிலைமைக்கு காரணமாயுள்ள மலச்சிக்கலை ப்ரூக்லாக்ஸ் விரைவில் அறவே அகற்றிவிடும். வயதானவர்களுக்கும் குழந்தைகளுக்கும் இன்றியமையாதது.

ப்ரூக்லாக்ஸ்

சாக்லெட்
லாக்ஸெடிவ்

டின் ஒன்றுக்கு அணா பத்து. எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜன்டுகள்:

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 3.

இருமல்களுக்கும் ஜலதோஷங்களுக்கும்

மிக ஜனப்பிரீதி வாய்ந்த மருந்து

ஸிரோலின்

'ரோச்'



உலகு பூராவும் உபயோகிக்கப்பட்டுவருவது



முடியாது!

டாக்டர்:—உன் புருஷனுக்கு நீ சுத்த ஜலம் தான் கொடுக்க வேண்டும். சாராயம் கொடுத்தால் அது அவனைக் கொன்று விடும்!

குடிகாரன் மனைவி:—அது சரி; ஆனால் நான் சுத்த ஜலம் கொடுத்தால் அவன் என்னைக் கொன்று விடுவானே!

★

முதல் குற்றம்!

நீதிபதி:—நீர் எதற்காகக் குற்றவாளியை மன்னிக்க வேண்டுமென்று அப்படி மன்றாடுகிறீர்? இதுதான் அவன் முதல் குற்றமா?

வக்கீல்:—இல்லை, என்னுடைய முதல் கேஸ் இதுதான்!

★

யோசனை!

பிரசங்கி:—நான் சொல்ல வேண்டிய விஷயங்களோ ரொம்ப இருக்கிறது...... ஆனால், எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் அவகாசமோ பத்து நிமிஷம்தான்...... எங்கிருந்து ஆரம்பிக்கிறது என்றுதான் எனக்குத் தெரியவில்லை......

சபையில் ஒருவர்:—ஒன்பதாவது நிமிஷத்திலிருந்து ஆரம்பித்து வையுங்களேன்!

★

அப்படியா!

சோமு:—ஒரு தடவை நான் பன்னிரண்டாம் நிலையுள்ள ஏணியிலிருந்து கீழே விழுந்திருக்கிறேன்.

ராமு:—அப்படியானால் ரொம்பக் காயம் பட்டிருக்க வேண்டுமே!

சோமு:—இல்லை; அப்போதுதான் முதல் படியில் ஏறியிருந்தேன்!

★

விளக்கெண்ணெய்க்குப் பதில்!

மோட்டார் வழியில் நின்று விட்டது. டிரைவர் எண்ணெய் போட்டால் ஒழிய அது நகராது என்று நிச்சயமாய் அறிந்து கொண்டான். ஆகவே, சமீபத்தில் குடியிருந்த ஒருவனைக் கூப்பிட்டு, "ஐயா, கொஞ்சம் விளக்கெண்ணெய் அகப்படுமா?" என்று கேட்டான்.

குடியானவன்:—தம்ம வீட்டிலே விளக்கெண்ணெய் கிடையாதுங்க! நேத்து ஆம்பத் [illegible] கும் பேய்ப் பேதி பட்டுக்கு வாங்கி வைத்திருக்கிறேன். வேணுமானாக் கொண்டு வந்து தாரேன்!

அப்பா தயார்!

பரீக்ஷையில் பையன் தவறி விட்டான்; அப்பா அடிப்பாரே என்று அவனுக்குப் பயம். அப்பாவை எப்படியாவது சமாதானம் செய்து வைக்கும்படி அண்ணனுக்குச் சுருக்கமாகத் தந்தி அடித்தான். "தவறிவிட்டேன், அப்பாவைத் தயார் செய்!" என்பது வாசகம்.

"அப்பா தயார்; நீயும் தயாராக வா!" என்று உடனே அண்ணனிடமிருந்து பதில் தந்தி வந்தது!

★

நியாயந்தான்!

கார் விற்பவர்:— இது பேஷான கார்; இரண்டு மணி நேரத்தில் நீங்கள் காஞ்சீபுரத்துக்குப் போகலாம்.

வாங்க வந்தவர்:—இது எனக்கு உபயோகமில்லை......

விற்பவர்:—ஏன்?

வாங்க வந்தவர்:—எனக்குக் காஞ்சீபுரத்தில் யாரையும் தெரியாதே!

★

பிடிக்காத காரணம்!

"ராமு! உனக்கு யாரை ரொம்பப் பிடிச்சிருக்கு? உன் அப்பாவையா, அம்மாவையா?"

"எங்க அப்பாவைத்தான் எனக்குப் பிடிச்சிருக்கு!"

"ஏன்?"

"அப்பாதான் வீட்டிலே யிருப்பதில்லை!"

★

அபிப்பிராயம்!

புதிதாகப் புத்தகம் எழுதியவர்:—என் புஸ்தகத்தைப் பற்றி யாராவது அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்களா?



பிரசுரித்தவர்:—உங்கள் பேருள்ள ஒருவர் மட்டும் அந்தப் புத்தகத்தைத் தாம் எழுதவில்லை என்று பொது ஜனங்களுக்கு உடனே தெரிவித்து விடும்படி எங்களை ரொம்பவும் கேட்டுக்கொண்டிருக்கிறார்!

டிடிடியின் திறன் முழுதும்..

நியோஸிடில் உள்ளது

10% டி.டி.டி பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

DJK 6021 TAM

★ வாரக்கணக்கில் பூரண பலனளிப்பது

★ மெதுவாகவானாலும் நிச்சயம் கொல்லுவது

★ மிருகங்களுக்கு ஹானியற்றது

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடிஸன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT Geigy DDT

விநியோகஸ்தர்கள்:
99-B,
பெங்களூர் ஸிடி.

கெய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிட்., ரோட், பம்பாய்



மதராஸ் ஏஜண்டு:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்


பைகிராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:

B. பாலபட்டாபி,

வைசியாள் தெரு, கோயமுத்தூர்



ஏஜண்டுகள்:—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பேர்ஹாம்பூர் & செகந்தராபாத்; இந்திரா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் சிடி.

சிலோன் ஏஜண்டுகள்:—M. O. A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு



உலோக வியாபாரிகளுக்கும், உலோகத்தைக் கொண்டு பலவித பண்டங்கள் தயாரிப்போருக்கும் உறுதி மொழி

உலோகமும், உலோக பண்டங்கள் இவை உலகச் சந்தையில் பெருவாரியாகக் கிடைப்பதிலுள்ள சங்கடங்களோ அநேகம். இவற்றைத் தீர்க்கும் பொருட்டு இந்நாட்டிலுள்ள மிகப்பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாகவும், தென்னிந்தியாவில் இணையற்றதாகவும் விளங்கக்கூடிய எங்கள் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இதில் எல்லாவித உலோக பண்டங்களும் தயாரிக்கின்றன. தகடுகள், தகட்டைக்கொண்டோ, வார்ப்படமாகவும் தயாரான பண்டங்கள், கட்டிடங்களில் பொருத்தப்படும் சாதனங்கள், இரும்பு சாமான்கள், அலங்கார பண்டங்கள், பூட்டுகள் முதலியவை எந்த மாதிரியிலும், எந்த அளவிலும் அவரவர் இஷ்டம்போல் பெறலாம்.

நிபுணர்களையும், விசேஷ அனுபோகஸ்தர்களையும் கொண்டு வேலை நடத்துவதால் அது உங்களுக்குப் பரிபூரண திருப்தியளிப்பது நிச்சயம். யுத்த காலத்துக்கு முன்னேய அபிவிருத்தி, யுத்தகால அனுபவம், ஆராய்ச்சி, மேன்மேலும் வேலைத்திறமுற்போக்கு, புதிய தளவாடங்கள், புதிய முறைகள், புதிய உபயோகங்கள், புது மாதிரிகள், உலோகங்களிலும், உலோகப் பண்டங்களிலும் ஏற்பட்டுள்ள புதிய தேவைகள் முதலியவற்றை எங்கள் நிபுணர்கள் நன்கு பரிசீலித்து அவைகளுக்குத் தக்கவாறு இந்தத் தொழிற்சாலையை அமைத்திருக்கின்றனர். எனவே இதில் சிறந்து விளங்கும் தனிரகமான பலவித பண்டங்களும் தயாராகின்றன. அவரவர் தேவையையும் சௌகரியமான முறையில் பூர்த்திசெய்ய எங்களாலானவரை முயல்வோம்.

ஸதர்ன் மெடல்ஸ் & அல்லாய்ஸ் லிமிடெட்

உலோக எஞ்ஜினீயர்கள்

நிர்வாக ஏஜெண்டுகள்:

[illegible]

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI ஜூன் 29, 1947 4 அணா



தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. விலை ரூ. 5—0—0



அசட்டை வேண்டாம்
பிஸ்மாக் சாப்பிடுங்கள்

போஜனத்திற்குப் பிறகு நெஞ்சு வலி, ஆயாசம் முதலிய ஜீரணக் கோளாறுகளினால் ஏன் கஷ்டப்படுகிறீர்கள். இவையெல்லாம் அதிகமான கெட்ட அமிலங்களினால் ஏற்படும் உபாதைகளாகையால்—ஒவ்வொரு தடவையும் போஜனத்திற்குப் பிறகு பிஸ்மாக் உட்கொள்ளுங்கள். எல்லா ஜீரணக் கோளாறுகளையும் வெகு சீக்கிரம் நிவர்த்தி செய்யக்கூடியது. பிஸ்மாக் (பைகரோட் மக்னீஷியா) மாத்திரையாகவோ பௌடராக விரும்பிச் சாப்பிடக்கூடியது.

உபயோகத்து போதிக்க வாய்ப்பாக்கள்! பிஸ்மாக் உட்கொண்டு நல்ல ஜீரண சக்தி அடையுங்கள். மாத்திரையாகவும் பௌடராகவும் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.



இந்தியாவுக்கு பூரண விநியோகஸ்தர்கள்:
ஜியோப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட்
பம்பாய், கல்கத்தா, சென்னை, லாகூர்

Ad. No 7

தி இந்தியன் பாங்க்
லிமிடெட்

★

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 71,10,900

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 51,67,608

ரிசர்வ் நிதி ரூ. 61,50,000

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment

